Registered as a News Paper

பொழிவு - 16
குவிப்பு - 02
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
பெப்ரவரி 2013

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

# இலங்கையில் போர் இன்னும் ஓயவில்லை

## அமெரிக்கக் குழு யாழ் ஆயரிடம் தெரிவிப்பு

இலங்கையில் இன்னும் போர் ஓய்ந்துவிடவில்லை. சில மாதங்களுக்கு முன்னர் இருந்ததைவிடவும் இப்போது மக்கள்மீதான அரசின் கெடுபிடிகளும், இறுக்கமான நடைமுறைகளும் அதிகரித்தேயுள்ளன. மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரை தாம் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்து மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும்கூட இன்னமும் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நீடிக்கவே செய்கின்றன. இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது அமெரிக்க உயர் மட்டக்குழு.

இலங்கையில் தற்போது தாம் அவதானித்த விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த 8 பேர் கொண்ட அமெரிக்கக் குழு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்தது. அவ்வேளையில் அக்குழு ஆயரிடம் தெரிவித்ததாவது; கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்த அமெரிக்க குழு ஒன்று அவதானித்ததை விடவும் தற்போது நிலைமை இறுக்கமடைந்துள்ளது. முன்னரைக் காட்டிலும் மக்கள்மீதான நெருக்குவாரங்களும், அரசின் கெடுபிடிகளும், இறுக்கமான நடைமுறைகளும் அதிகரித்துள்ளன. இதனையே நாம் வெளிப்படையாக அவதானிக்க முடிந்துள்ளது.

இன்னமும் காணாமல்போனோர் பற்றிய விபரங்கள் எமக்கு வந்துகொண்டேயிருக்கின்றன. இந்த விவகாரத்தில் அரசு அக்கறை எடுத்திருந்தால் இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்வதைத் தடுத்திருக்க முடியும். போர் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. ஆயினும் உண்மையான போர் இன்னமும் முடிந்துவிடவில்லை என்று நாங்கள் கருதுகின்றோம். ஏனெனில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் இன்னமும் களையப்படவில்லை. மாறாக இன முரண்பாடுகள் முன்னரைக் காட்டிலும் முனைப்புப் பெற்றுள்ளன என்றே கருதவேண்டியுள்ளது. இவ்வாறு அக்குழு தெரிவித்துள்ளது.

## தவக்காலம்
### ஆன்மீக புதிப்பித்தலுக்கான காலம்





திருவழிபாட்டு ஆண்டுக்கான தவக்காலம் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி விபூதிப் புதனுடன் ஆரம்பமாகின்றது.

உள்ளே
தவக்காலச் சிறப்பிதழ்
பக்கம் 04



## தவக்காலம்
### மனமாற்றத்திற்கான அழைப்பு

"இப்பொழுதாவது
உண்ணா நோன்பிருந்து
அழுது புலம்பிக்கொண்டு
உங்கள் முழு இதயத்தோடு
என்னிடம் திரும்பி வாருங்கள்
என்கிறார் ஆண்டவர்"
(யோவேல் 2:12)

### இத்தவக்காலத்தில் இயேசுவின் பாடுகளைத் தியானிக்க, இறையுறவில் வளர மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால்

## இரண்டு சிலுவைப்பாதை நூல்கள் வெளியீடு

### வளர்ந்தவருக்கும் சிறுவருக்கும் ஏற்ற வகையில் வெளிவந்துள்ளது
### வாங்குங்கள் ... வாசியுங்கள் .... தியானியுங்கள் ...

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தினால் 'அன்பின் அதிர்வுகள்' என்ற பெயரில் வளர்ந்தோருக்கான சிலுவைப் பாதை நூலும், 'சிலுவையில் சின்னக் காலடிகள்' என்ற பெயரில் சிறுவருக்கான சிலுவைப் பாதை நூலும் வெளிவந்துள்ளன. பங்குத்தந்தையரிடம் அல்லது உங்கள் பகுதி மன்னா விநியோகஸ்தரிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 023 - 2250789, 077 - 7420811)

### பாப்பரசரால் பறக்கவிடப்பட்ட
## சமாதான புறாவை துரத்திய கடல் பறவை





பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரால் சமாதானத்தின் அடையாளமாக 27.01.2013 அன்று பறக்கவிடப்பட்ட சமாதானப்புறாவை கடல் பறவையொன்று தாக்கும்முகமாகத் துரத்தியதால் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வத்திகான் மாடி மாடத்திலிருந்து பாப்பரசர் புறாவை பறக்கவிட்டதும், அதற்காகவே காத்திருந்தது போன்று பறந்து வந்த கடல் பறவை புறாவை துரத்திச் சென்றுள்ளது.

இந்நிலையில் வெறித்தனமாகத் துரத்திய கடல் பறவையிடமிருந்து தப்பும் முகமாக புறா பண்டைய வத்திக்கான் கட்டட முகப்புத் தூண்களுக்கிடையில் பறந்து சென்று மறைந்துகொண்டுள்ளது.

சமாதானப் புறாவை கடல் பறவை துரத்தும் காட்சியை திகிலுடன் அவதானித்த அங்கு கூடியிருந்த பெரும் தொகையான மக்கள், புறா கடல் பறவையிடமிருந்து தப்பியதும் ஆறுதல் அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## முள்ளிக்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரை கரையோர நடைபவனி

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிப்பதனை கண்டித்து மன்னார் மாவட்டத்தில் உள்ள முள்ளிக்குளத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி கடற்கரையோரமாக நடைபவனியாக முல்லைத்தீவு மாவட்டத்தை வந்தடைந்தது.

மன்னாரில் முள்ளிக்குளத்தில் கடந்த 27.01.2013 அன்று காலை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி கடலோர நடை பயணமாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மாவட்டங்களினூடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கிராமத்தில் சென்று முடிவடைந்துள்ளது.

இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசித்து தொழில் செய்யும் இந்திய மீனவர்களைத் தடுக்கக்கோரியும் இப்பிரச்சினை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்தக் கடலோர நடை பேரணி நடத்தப்பட்டது.



### மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு
## 32 ஆண்டுகள் நிறைவு விழா





மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 32 ஆண்டுகள் நிறைவு விழாத் திருப்பலி கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது. தோட்டவெளி மற்றைசாட்சியர் அன்னை ஆலய தியான மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இருந்து ஏராளமான இறைமக்கள் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்தனர்.

### அவிசாவளை நற்கருணை மாதா சுரூபம் எரிக்கப்பட்டது
## மக்கள் அதிர்ச்சி கவலை கண்ணீர்



கொழும்பு மறைமாவட்டத்திற்கு உட்பட்ட அவிசாவளை பங்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நற்கருணை மாதா திருச்சுருபம் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி இரவு விசமிகள் சிலரால் எரியூட்டப்பட்ட சம்பவம் அப்பிரதேசத்தில் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## அர்த்தமும் ஆழமும் பெறவேண்டிய தவமுயற்சிகள்

*இயேசுவின் கல்வாரிக் காலடியில் தடம்பதிக்கும் காலம் தவக்காலம். இத்தவக்காலம் அருளின் காலம்; ஆண்டவரோடும் அயலவரோடும் ஐக்கியமாகும் காலம். இது மனமாற்றத்தின் காலம்; மனம் திரும்புவதற்கேற்ற செயல்களைச் செய்யும் காலம்; "இதுவே தகுந்த காலம்" (கொரி 6:2).*

### தவக்காலப் பாரம்பரியம்

நமது கிறிஸ்தவப் பாரம்பரியத்திலே - நமது கிறிஸ்தவ வாழ்வு அனுபவத்திலே தவக்காலம் என்பது தனித்துவமான காலமாக அமைந்துள்ளது. உடல் ஒறுத்தல்கள், உபவாசங்கள், மாமிசத்தவிர்ப்பு என்பவற்றோடு கொண்டாட்டங்களை - ஆடம்பரங்களைத் தவிர்க்கின்ற நடைமுறைகள் நம்மிடையே இருந்து வருகின்றன. இதைவிட வழிபாடுகளில் பங்கெடுத்தல், சிலுவைப்பாதை தியானித்தல், பசான் வாசிக்கக்கேட்டல், திருப்பாடுகளின் காட்சிகளை நடித்தல் - பார்த்தல் போன்ற பக்தி முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்துமே தேவையானவை; பாராட்டப்பட வேண்டியவை; ஊக்குவிக்கப்பட வேண்டியவை!

ஆனால் தவக்காலத்திலே இதுபோன்ற பக்தி முயற்சிகளையும் ஒறுத்தல் முயற்சிகளையும் மட்டும் நாம் மேற்கொண்டால் போதுமா? இவற்றுக்கு மேலே சென்று நம்முடைய வாழ்வு மாற்றத்தை நோக்கிய முயற்சிகளில் நம்மை ஈடுபடுத்த வேண்டாமா?

### எது முக்கியம்?

அமெரிக்காவில் கால்சால் என்ற ஓர் சிறு நகரில் ஒரு வயதான குருவானவருக்கு ஒருநாள் இரவு 11.00 மணிக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. "அப்பா இறந்து கொண்டிருக்கிறார்....." என்ற சோகக்குரல், தொலைபேசியை வைத்துவிட்டு உடனே புறப்பட்டார். அது குளிர் காலம்! அந்த இடம் அருகில் இருந்ததால் நடந்தே சென்றார். ஒரு சிறு சந்து வழியாகப் போய்க்கொண்டிருந்தபொழுது திடீரென அவர்முன் ஓர் உருவம் துப்பாக்கியுடன் தோன்றியது, "உனது பணத்தை எடு" என்று கேட்டது. தன்னிடமுள்ள சில டொலர் நோட்டுக்களை எடுக்கக் கோட்டைத் திறந்தார். திறந்தபொழுது அவரது ரோமன் கொலர் - அதாவது குருவுக்குரிய அடையாள உடை - தெரிந்தது. "நீங்கள் ஒரு பாதர் என்பது எனக்குத் தெரியாது. உங்கள் பணம் வேண்டாம், வைத்துக்கொள்ளுங்கள்" என்று திக்கித்திக்கிச் சொன்னான் திருடன். மன ஆறுதல் அடைந்த குருவானவர் அவனுக்கு நன்றியுடன் ஒரு சுருட்டுக் கொடுத்தார். "மிகுந்த குளிராக உள்ளது. இதை பற்றவைத்துக்கொள்" என்றார் பாதர். "இது தவக்காலம். வேண்டாம் பாதர். நன்றி, தவக்காலத்தில் நான் புகைப்பிடிப்பதில்லை" என்றான்.

இத்திருடனைப் பற்றி சிந்திக்கும்போது சிலவேளை நமக்கு சிரிப்பு வரலாம். அவனுடைய அறியாமையை எண்ணி நாம் ஏளனம் செய்யலாம். ஆனால் பல தடவைகளில் நாமும் இத்திருடனுடைய நிலையில்தான் இருக்கின்றோம் என்பதை மறந்துவிடுகின்றோம். தவக்காலத்தில் சுருட்டுக்குடிக்க மாட்டேன் என்று தீர்மானம் எடுத்தவன் தன் அடிப்படையான பாவமாகிய கொலை செய்வதிலிருந்து, கொள்ளை அடிப்பதில் இருந்து விடுபட அவன் விரும்பவில்லை.

### இயேசு கண்டிக்கும் வெளிவேடம்

இத்திருடன் ஓர் அசல் பரிசேயன். யூதர்களும் இவனைப்போலவே தங்களது வெளி ஆசாரங்களை மிகவும் நுணுக்கமாக அனுசரித்து வந்தார்கள். மனிதர் கட்டளைக்கும் பரம்பரைக்கும் முக்கியத்துவம் கொடுத்து (மாற்கு 7:7) இறைவனின் முக்கிய கட்டளைகளை கைவிட்டார்கள். மனிதர் பார்க்கும்படி சில பரம்பரைகளைக் கவனமாய் அனுசரித்து வந்தார்கள். ஆனால் மனிதர் பார்க்கமுடியாத உள்ளத்தில் வஞ்சகமும் வெறுப்பும் நிறைந்தவர்களாய் இருந்தார்கள் (மாற்கு 3:2). உண்மையான ஆன்மீக வாழ்வு வெறும் சுத்திகரச் சடங்குகளிலும் வெளி ஆசாரங்களிலும் ஆடம்பரங்களிலும் வெளிக்கொண்டாட்டங்களிலும் அர்த்தமற்ற பரம்பரையை கடைப்பிடிப்பதிலும் தங்கியிருக்கவில்லை. உள்ளும், வெளியும் பொங்கி வழியும் இறையன்பில் அடங்கியுள்ளது (இசை 1:11 - 17, 58:1 - 14). எனவே தவக்காலத்தின் மையப்பொருளான மனமாற்றத்தை நோக்கி நாம் பயணம் செய்வோம். அப்போது நமது பக்தி முயற்சிகளும் தவமுயற்சிகளும் அர்த்தம்பெறும், ஆழம்பெறும்.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
**அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்**
*பதிப்பாசிரியர்*

## காணாமல்போனோர் பற்றி கோத்தபாய ராஜபக்ச சொல்வது தவறு
### அமெரிக்க குழுவிடம் யாழ் ஆயர்

இலங்கையில் காணாமல்போனோர் விவகாரமே மிகப்பெரிய பிரச்சினையாக மக்கள் மத்தியில் உள்ளது. இந்த நிலையில் படையினரால் பிடிக்கப்பட்டு காணாமல் போனோர் என்று எவரும் இல்லை என பாதுகாப்புச் செயலர் கூறியிருக்கிறார். ஆனால். இன்னமும் ஏராளமான மக்கள் தமது உறவுகளைக் காணவில்லை என்று கண்ணீரோடுதான் காலம் கழிக்கிறார்கள். இவ்வாறு கடந்த ஜனவரி 27ஆம் திகதி அமெரிக்கக் குழுவிடம் தற்போதைய நிலைபற்றி விளக்கினார் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது அமெரிக்கக் குழுவிடம் ஆயர் மேலும் தெரிவித்ததாவது: இறுதிப் போரின்போது ஏராளமான மக்கள் உயிரிழந்தனர். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்பது பற்றிய சரியான எண்ணிக்கையை இதுவரை அறியமுடியாதுள்ளது.

பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள அரசு, அந்த எண்ணத்தில் தாம் விரும்பிய எதனையும் செய்யலாம் என்று எதேச்சதிகாரத்தோடு செயல்படுகிறது. எனவே இலங்கைமீதான சர்வதேச நாடுகளின் அழுத்தமே தமிழ் மக்களுக்கு இந்த அரசிடமிருந்து நீதியான தீர்வு என்ற நன்மையைப் பெற்றுத்தர வழிவகுக்கும். இங்கு மக்கள் எதிர்பார்த்த எல்லாமே நடைபெற்று வருவதாகக் கூறமுடியாது. வடக்கில் படைக்குறைப்பு செய்யப்படும் என்று அரசு சர்வதேசத்திடம் உறுதியளித்திருந்தது. ஆனால் அவையெல்லாம் இறுதிவரை நடைபெறவில்லை. மாறாக இராணுவ கட்டுமானங்களும் அவர்களுக்கான குடியிருப்புக்களுமே அமைக்கப்படுகிறன. அதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. படையினருக்கு முன்னரைக் காட்டிலும் அதிக சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த நவம்பர் மாத இறுதியில் பல்கலைக்கழக மாணவர்களுடன் படைத்தரப்பு முரண்பாட்டில் இறங்கியது. இதன் பின்னர் பல்கலைகழக மாணவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் சிலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. பல்கலைகழக மாணவர்களுடன் அரசு முரண்படுவது ஆரோக்கியமானதல்ல.

## அருட்திரு. சூசைப்பிள்ளை அடிகளார் நாடு திரும்பினார்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. சூசைப்பிள்ளை அடிகளார் ஆறு வருடங்கள் கனடாவில் மறைப்பணி ஆற்றிய பின்னர் அண்மையில் நாடு திரும்பியுள்ளார். தனது மறைமாவட்டமான மன்னாருக்கு வந்துள்ள அவருக்கான புதிய பணிப்பொறுப்பு விரைவில் வழங்கப்படவுள்ளது. சூசைப்பிள்ளை அடிகளாரை அன்போடு வரவேற்று அவருடைய புதிய பணிகள் சிறக்க மன்னா வாழ்த்தும் இறையாசீரும் கூறி நிற்கின்றது.

## மன்னார் மறைமாவட்டம்
### திருவழிபாட்டு நாட்காட்டி – 2013

### மாசி

02 - தூய மரியன்னை திருவிழா - மடுத்திருப்பதி, மன்னார் மரியன்னை ஆலயம், அரிப்பு, பாலைக்குழி, காத்தான்குளம், துள்ளுக்குடியிருப்பு, படகுதுறை, சாம்பல் தோட்டம்

04 - இலங்கை மாதா பெருவிழா - (இலங்கையின் பாதுகாவலி) கண்டி அம்பிட்டிய தேசிய குருமட விழா

11 - தூய லூர்து அன்னை திருவிழா - முதலைகுத்தி, கீளியன் குடியிருப்பு, ஜீவநகர், பாசிமோட்டை


13 - திருநீற்றுப்புதன் - தவக்காலம் ஆரம்பம், உண்ணா நோன்பும் மாமிசத் தவிர்ப்பும்

16 - தூய லூர்து அன்னை விழா - மாந்தை

22 - தூய இராயப்பர் திருவிழா - கத்தாளம் பிட்டி

■ மாதத்தின் 2வது , 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## வங்காலையில் அன்புப் பணிபுரிந்த அமலித் தாயார்!



வங்காலை பங்கில் கடந்த பத்து வருடங்கள் சேவையாற்றி கடந்த ஜனவரி மாதம் 20ம் திகதி தலைமன்னார் பங்கிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திருக்குடும்ப கன்னியரான அருட்சகோதரி அமலி அவர்களை வங்காலை பங்கு மக்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

இவர் தள்ளாடும் வயதிலும் தளராத சேவை புரிந்தவர். இளைஞருக்கான வகுப்புக்கள், தையல் பயிற்சி வகுப்புக்கள், முதன்நன்மை சிறார்களுக்கான ஆயத்த வகுப்புக்கள், ஏனைய திருவருட்சாதன. ஆயத்த வகுப்புக்கள், நற்கருணைப்பக்தி வழிபாடுகள், இல்லத் தரிசிப்புக்கள், நோயாளர் சந்திப்பு, விடுதிச்சாலை பொறுப்புக்கள், மறைக்கல்வி வகுப்புகள், மறைமாவட்ட திருமண ஆயத்த வகுப்புக்கள் போன்ற பல பணிகளைப் புரிந்தவர்.

அவருடைய ஆளுமைமிக்க தோற்றம், கம்பீரமான தொனி, சிரித்த முகம், சேவையின் அர்ப்பணம், மக்களுடன் பழகும் விதம் யாவும் இறைவனின் கொடைகள்தான். எங்கள் அன்புக்குரிய அமலித் தாயார் அவர்கள் வங்காலை பங்கில் துறவு வாழ்க்கையின் 50வது பொன் விழாவைக் கொண்டாடியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து சேவையாற்றி வைரவிழா, பவள விழாக்களையும் கண்டுகளிக்க வாழ்த்தி இறையாசீர் வேண்டி அன்புப் அனைத்து அன்புப் பணிகளுக்கும் நன்றிகூறி நிற்கின்றோம்.
தகவல் : பெப்பி

## வங்காலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணை புரியும் வணபிதா டேவிட் நிதியம்

புகழ்பூத்த கல்விமானும், அறிஞருமாகிய வணபிதா எச். எஸ். டேவிட் அடிகளாரின் மருமகனான திரு எல். எம். பிலிப்நேரியார் அமெரிக்காவிலிருந்து வருடா வருடம் வங்காலையில் உள்ள வறிய மாணவர்களின் கல்வி வசதிக்காக ஒரு இலட்சம் ரூபாவை அனுப்பிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது வங்காலை புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலய வறுமைப்பட்ட மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. டேவிட் அடிகளின் பெயரில் வித்தியாலயத்தில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக இந்த உதவி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

திரு. எல். எம். பிலிப்நேரியார் என்னுடன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலியில் ஒன்றாகக் கல்வி கற்றவர். இவருடைய சேவையை மக்கள் நன்றியுடன் பாராட்டுகின்றனர்.

அருட்திரு. எச். எஸ். டேவிட் அடிகள் புனித பத்திரிசியார் கல்லூரியில் கீழை இயல் மற்றும் வரலாற்றுத்துறை இயக்குனராக இருந்துள்ளார். தமிழ் மொழிப்பற்று மிகுந்தவர். தமிழ்ப் பண்பாடு என்ற ஆங்கில இதழில் 10 கட்டுரைகள் எழுதியுள்ளார். அத்துடன் சுமேரியா, எகிப்து, ஹரப்பா, நாகரீகங்கள்பற்றி மிகச்சிறந்த கட்டுரைகளையும், பழந்தமிழ் இலக்கியம், குறுந்தொகை தொகுப்புமுறை, தமிழ் பழமொழிகள், திராவிடவியல் ஆய்வு பற்றிய நூல்களையும் எழுதியுள்ளார்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் போன்று தமிழ் மொழிக்கு தொண்டாற்றிய குரவர்களுள் அருட்திரு. டேவிட் அடிகளாரும் புகழப்படுகின்றார். 1980இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வைக் கண்டபோது அதிர்ச்சி காரணமாக மாரடைப்பால் இப்பெரும் அறிஞர் இறந்தார் என்பது துயரமான வரலாறாகும்.

- தகவல்:- திரு. எம். ஏ. றெவ்வல்,
முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார்

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை மடு தியான இல்லத்தில் இடம்பெறும்.

இத்தியானத்தை வழிநடத்த இந்தியாவில் இருந்து அருட்திரு. சுரேஸ் புஸ்பராஜ் (இரட்சகர் சபை) வருகை தருகின்றார். தியானத்தை மேற்கொள்ளவுள்ள குருக்களுக்காக செபிக்கும்படி இறைமக்களை மன்னா கேட்டு நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அநீதி தாண்டவம்! இனியும் மௌனிக்க முடியாது!

## கிறிஸ்தவ திருச்சபை கொழும்பு பேராயர் போர்க்கொடி

நாட்டில் சட்டம், ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்துள்ளன. சட்டத்தை மதிக்கும் ஜனநாயக நாடு என்று இனியும் நாம் மார்தட்டிக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். அநீதி, வன்முறை, போலித்தனம் தாண்டவமாடும் போதும்கூட மக்கள் அதற்கெதிராகக் குரல் எழுப்பாது மௌனித்திருந்தனர். இது ஆண்டவருக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல். கிறிஸ்தவ திருச்சபை என்ற வகையில் இன்றைய சூழ்நிலையில் நாம் மௌனம் சாதிக்க முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை கிறிஸ்தவ திருச்சபையின் அங்கிலிக்கன் சபை கொழும்புப் பேராயர் மேதகு டிலோராஜ் கனகசபை ஆண்டகை அவர்கள்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, தேசிய சுதந்திர தினத்தை நாம் நெருங்கிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மிகுந்த மனவேதனை அடைகிறோம். காரணம் இந்த நாட்டின் சட்டம் ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்துள்ளன. நாம் சட்டத்தை மதிக்கும் ஜனநாயக நாடு என்று இனியும் மார்தட்டிக்கொள்ள முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.



சட்ட ஆளுமை என்பது நாடு சட்டவமைப்பிற்கு கீழ்ப்பட்டு நடப்பதே. சட்டவாக்கத்திற்குப் பொறுப்பான நபர்களும் அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களே. இதுவே அதிகாரம் ஒரு நபரின் கையிலோ அல்லது ஒரு குழுவினரின் கையிலோ முழுமையாகக் கொடுப்பதைத் தடுப்பதற்கான ஒரே வழி. அதிகாரத்தை எவரும் தமது விருப்பம்போல் தாம் நினைத்தபடி பாவிப்பதைத் தடுக்கும் வழியும் அதுவே. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## ஆயர் எல். ஆர். அன்ரனி காலமானார்

திருமலை, மட்டக்களப்பு முன்னாள் (ஓய்வு நிலை) ஆயர் மேதகு எல். ஆர், அன்ரனி ஆண்டகை கடந்த டிசம்பர் 3ம் திகதி இறைவனடி சேர்ந்தார். கரம்பனைச் சேர்ந்த ஆயர் எல். ஆர் அன்ரனி அவர்கள் 1954ம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி உரோமை நகரில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் 1968ம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தின் துணை ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டு பின்னர் 1974ம் ஆண்டு திருமலை மட்டுநகர் ஆயராக நியமிக்கப்பட்டார். 'மக்களின் ஆயர்' என வர்ணிக்கப்படும் ஆயர் அவர்கள் 10 ஆண்டுகளிற்கு மேலாக ஆயராக பணிபுரிந்தவர்.



ஆயரின் நல்லுடல் திருகோணமலை ஆயர் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருகோணமலை மரியன்னை பேராலயத்தில் டிசம்பர் 6ம் திகதி நல்லடக்கம் செய்யப்பட்டது.
(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## 'உலக நாயகன்' என்ற பெயரை உபயோகிக்கக் கூடாது!

### கமல்ஹாசனுக்கு வந்த புதிய சோதனை

"விஸ்வரூபம்" திரைப்படம் தொடர்பாக பிரபல நடிகர் கமல்ஹாஸன் பெரும் வேதனையில் உள்ள நிலையில் அவரை இனி யாரும் 'உலக நாயகன்' என்று அழைக்கக் கூடாது என கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவரான வசீகரன் என்பவர் தமிழக அரசின் தலைமைச் செயலாளரை சந்தித்து மனுவொன்றைக் கொடுத்துள்ளார்.

அதில், "உலக நாயகன் என்ற பெயர் பிரபஞ்சத்தைக் காக்கும் இயேசுக் கிறிஸ்துவின் பெயர். இந்நிலையில், நடிகர் கமல்ஹாஸன் இயேசு பிரானின் பெயரை தனக்கு வைத்துக்கொள்வது



இயேசு நாதரையே இழிவுபடுத்துவதுபோல் உள்ளது. எனவே நடிகர் கமல்ஹாஸன் இனி உலகநாயகன் என்ற பெயரை உபயோகப்படுத்தக்கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மன்னார் வலய ஆரம்பப் பிரிவு வகுப்புக்களில் ஆசிரியர் பற்றாக்குறை

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ்ப் பாடசாலைகளில் உள்ள ஆரம்பபிரிவு வகுப்புக்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரியவருகின்றது என யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மன்னார் வங்காலை புனித ஆனாள் ம.வி பாடசாலையில் தரம் 01 வகுப்புக்கான ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படாததால் ஜனவரி 10ஆம் திகதி இடம்பெறவிருந்த தரம் 01 மாணவர்களைப் பாடசாலையில் அனுமதிக்கும் கால்கோள் விழா உரிய திகதியில் இடம்பெறமுடியவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். இதேவேளை வங்காலை புனித ஆனாள் ம.வி பாடசாலையில் தரம் 01இல் 95 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை மூன்று பிரிவு வகுப்புக்களில் இணைத்து கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வங்காலை கிராம மக்கள் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பல தடவை தெரிவித்தபோதிலும், எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். உடனடியாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாத பட்சத்தில் தாம் மன்னார் வலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமிழ்ப் பாடசாலையான பேசாலை புனித மரியாள் பாடசாலையில் இவ்வருடம் தரம் 1இல் சுமார் 100 க்கும் மேறபட்ட மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளபோதும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. இதேவேளை தாழ்வுபாடு புனித வளனார் ம.வி.பாடசாலையில் நீண்டகாலமாக ஆரம்பப் பிரிவுகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவருகின்றது. கடந்த ஒரு வருட காலமாக மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இதுபோன்ற பல குறைபாடுகள் நிலவி வருவதாகவும் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர் என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னார் மாவட்டத்தில் ஜேர்மன் தூதுவர்



### மன்னாரில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மடுக்கரை மக்களுக்கு ஜேர்மன் அரசின் நிவாரண உதவியை இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் வழங்கினார்

மடுக்கரை கிராம அலுவலகர் பிரிவிற்கு உட்பட்ட சுமார் 400ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு உலர் உணவு அல்லாத இதர உதவிப்பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி ஜுவர்ஜன் மொர்காட் (Dr. Juergen Morhard) அண்மையில் மன்னாருக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது அவர் மதத் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அத்துடன் மடுக்கரைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள்களை வழங்கினார். தமது நாட்டு அரசினதும், மக்களினதும் சிறிய அன்பளிப்பே இந்த உதவி எனவும் அவர் தெரிவித்தார்.

மடுக்கரை கத்தோலிக்க தேவாலய வளாகத்தில் இடம்பெற்ற நிவாரணப் பொருள்கள் கையளிக்கும் நிகழ்வில் டபிள்யூ. எச். எச். அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பாபரா சிலி, நானாட்டான் பிரதேச செயலாளர் திரு. சி. ஏ. சந்திரய்யா, சேவா லங்கா மன்றத்தின் வட பிராந்தியத்துக்கான விசேட திட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி அனற் றொய்ஷ், சேவா லங்கா மன்றத்தின் மன்னார் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சி. ஏ. குபேர குமார் மற்றும் அளவக்கை பங்குத்தந்தை அருட்திரு. சுரேஸ் றெவ்வல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



### பாலையடி புதுக்குளம், பாலைப்பெருமாள் கட்டு மக்களை சந்தித்த ஜேர்மன் நாட்டு தூதுவர்

ஜேர்மன் நாட்டு நிதியுதவியுடன் மன்னார் மறைமாவட்டத்தின் கறிற்றாஸ் வாழ்வுதயத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் பயனாளிகளை இலங்கைக்கான ஜேர்மன் நாட்டு தூதுவர் கலாநிதி ஜுவர்ஜன் மொர்காட் (Dr. Juergen Morhard) சந்தித்தார்.

மன்னார் மாவட்டத்தில் காத்தானடகுளம் பங்கில் அண்மையில் மீள்குடியமர்ந்த பாலையடி புதுக்குளம் மற்றும் பாலைப்பெருமாள் கட்டு ஆகிய கிராமங்களில் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் பயனாளிகளை அவர் சந்தித்தார். கறிற்றாஸ் அமைப்பு மூன்று மில்லியன் ரூபா செலவில் இந்த இரண்டு கிராமங்களிலும் நிலையான மலசலகூடங்களை அமைத்துள்ளது. மன்னார் கறிற்றாஸ் இயக்குனர் அருட்திரு. எம். ஜெயபாலன், காத்தான்குளம் பங்குத்தந்தை அருட்திரு. எஸ் வசந்தகுமார் ஆகியோர் தூதுவரை அழைத்துச்செல்வதை மேலே உள்ள படத்தில் காணலாம்.

## 'வேகம்' குறும்படம் விரைவில்

ஆசிரியர் திரு. அ. நிஷாந்தனின் கதை வசனம் இயக்கத்தில் உருவான 'வேகம்' என்னும் குறும்படமானது மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் வெளியீடாக வெகு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்களைக் குறைக்கும் நோக்குடன் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் இக்குறும்படமானது அமைந்துள்ளது. இக்குறும்படத்திற்கான ஒளிப்பதிவு இயக்கம் அ. யசிதரன், படத்தொகுப்பு பிரதீபன். தயாரிப்பு டிலான், இசை சத்தியன் என்பது குறிப்பிடத்தக்கது.

நிஷாந்தன் அவர்கள் ஏற்கனவே பல குறும்படங்களை தயாரித்து பலரது பாராட்டைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் ஜெபரெட்னம் அடிகளாரை வாழ்த்துகின்றோம்

யாழ் மறைமாவட்டக் குரு அருட்பணியாளர் ப. ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் தமது குருத்துவ வெள்ளிவிழாவை இவ்வாண்டில் நினைவுகூர்கின்றார்.

தற்போது புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உப அதிபராகப் பணியாற்றுகின்ற அடிகளார் கடந்த சில ஆண்டுகளாக உரோமாபுரியில் பாப்பிறையின் திருச்சிலுவை பல்கலைகழகத்தில் (Pontifical University of the Holy Croos) கோட்பாட்டு இறையியல் துறையில் கலாநிதிப் பட்டம் (Doctorate in Dogmatic Theology) பெற்றவர் ஆவார்.

அருட்தந்தை அவர்கள் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடந்த காலத்தில் கடமையாற்றியுள்ளார். சிறந்த நகைச்சுவை உணர்வும், அனைவரையும் மதித்து அன்பு செய்யும் உயரிய பண்புகளையும் கொண்டவர். குருத்துவ வெள்ளிவிழா ஆண்டில் முனைவர் பட்டம் பெறும் அடிகளாரை "மன்னா" வாழ்த்தி மகிழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவக்கால சிறப்பிதழ்

# அருள் மிகு காலம் - தவக்காலம்

அருட்சகோதரி யோகா SCJM, இரத்தினபுரி

'விசுவாச ஆண்டில்' பயணிக்கின்ற கிறிஸ்தவர்கள் எம்மனைவருக்கும் மீண்டுமொரு அருள்மிகு காலம் இந்தத் தவக்காலம். விபூதிப் புதனுடன் ஆரம்பமாகும் இத்தவக்காலமானது குருத்தோலை ஞாயிறு வரையான நாற்பது நாட்களைக் கொண்ட ஒரு உன்னத காலம். இந்நாற்பது நாட்களும் செப தபத்தில் ஈடுபட்டு இயேசுவின் பாஸ்காவில் பரிசுத்த வாரத்தில் இணைந்து கிறிஸ்துவின் உயிர்ப்பில் மகிழ்வோடு ஒன்றிணைய கிறிஸ்தவர்களுக்கு திருச்சபையின் வழிபாட்டுச் சக்கரத்தில் கிடைக்கும் அருமையான காலம்.

செபம், ஒறுத்தல், பரித்தியாகம் எனும் மூன்று புண்ணியங்களை இக்காலத்தில் கடைப்பிடித்து வாழ கிறிஸ்தவர்கள் எம்மனைவரையும் திருச்சபைத் தாய் அழைக்கின்றாள். இயந்திர மயமாகிப்போன இன்றைய உலக வாழ்வில் எம் ஊனுடலின் நலன்களை மட்டும் கவனியாது, என்றும் நிலைக்கக்கூடிய அழிவில்லா ஆன்மாவின் வாழ்விற்காகவும், வளர்ச்சிக்காகவும் சற்று நின்று சிந்திக்க, தியானிக்க, தெளிவான நேரிய பாதையில் எம் வாழ்வை முன்னெடுக்க இந்தத் தவக்காலம் பெரிதும் உதவுகின்றது.

மின்னலென மறைந்துபோகும் மனித வாழ்வானது படைத்த இறைவனின் வல்லமையை தம் வழ்வில் கண்டுணர, படைப்புக்களினூடாக இறைவன் நமக்கு விடுக்கும் செய்தியை துல்லியமாக புரிந்துகொள்ள, இறைமகன் கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையை வாழ்வில் அனுபவிக்க, நாளும பொழுதும் தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு எம்மை விட்டுக்கொடுக்கவும் அதனால், என்றும் இறைபிள்ளைகளாக இறைபராமரிப்பில் வாழவும் வளரவும் அருள் தரும் காலமாக இந்த தவக்காலம் அமைந்துள்ளது.




விபூதிப் புதனன்று நெற்றியில் சாம்பலினால் சிலுவையடையாளம் வரையப்பட்டு "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என குருவானவர் கூறுவது எம்மை மனமாற்றத்திற்கு அழைக்கும் ஆண்டவரின் அன்புக் குரலாகும். இக்காலத்தில் நாம் மனம் மாறவும், கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்தை ஆழப்படுத்தவும் வாய்ப்புள்ள உன்னத காலமாகும். அருள்மிகு காலமான இந்தத் தவக்காலத்தில் செபித்து, நோன்பிருந்து, ஒறுத்தல் முயற்சிகள் பல செய்து எம்மால் முடிந்தளவு அன்புக் காரியங்கள் செய்வதன் மூலம் நாம் எமது ஆன்மாவை நல்வழிப்படுத்திக்கொள்ளலாம்.

இக்காலத்தில் நாற்பது நாட்களும் தமது வசதிக்கேற்ப தனியாகவோ குழுவாகவோ குடும்பமாகவோ இயேசுக் கிறிஸ்துவின் பாடுகளை ஒவ்வொரு நிலையாகத் (14 நிலைகள்) தியானித்து அவர் இறைமகனாக இருந்தும் அந்நிலையிலிருந்து தன்னைத் தாழ்த்தி எம்மைப்போல் மனிதனாகி (பிலி. 2: 6 – 11) எமக்காகவே பாடுபட்டதன் காரணமாக அவரது அன்பை தியானித்தலும், அந்த இறையன்பிற்காக நாம் செய்யும் பிரதி அன்பு என்ன என சிந்தித்தலும் அதற்காக சில நல்ல முயற்சிகளை மேற்கொள்வதும் சாலச்சிறந்ததாகும். இயேசுவின் பாடுகள் பயனற்றுப் போய்விடவில்லை. அவை எமக்கு வாழ்வை, மீட்பைக் கொண்டுவந்தன.

தவக்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய மூன்று புண்ணியங்களில் முதலாவது புண்ணியமான செபமானது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாதது. தவக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் கடைப்பிடிக்கவேண்டிய இரண்டாவதான புண்ணியமானது ஒறுத்தல் முயற்சிகள். எமது புலன்களை அடக்கி அதன் மூலம் இறைவனுக்கு



துதியும் எமது பாவ நாட்டங்களுக்கு கட்டுப்போடக்கூடியதும் இந்த ஒறுத்தல் எனும் புண்ணியம். இறைவன் மனிதனை ஐம்புலன்களைக் கொண்ட முழுமையான உயிரினங்களின் சிகரமாகப் படைத்தார். எமது கண்களால் இறை வல்லமையை, அவரது பிரசன்னத்தைக் காணவும், எமது காதுகளால் இறை செய்தியை அவரது வல்ல செயல்களைக் கேட்கவும், எமது நாவால் இறைபுகழ் பாடவும் அவரது திருப்பெயரை மகிமைப்படுத்தவும், எமது கரங்களால் இறைவனுக்குரிய காரியங்களைச் செய்யவும், அவரது அன்புமிக்க இறையருளை நாம் நுகரவும் பல அவயங்களான முழு மனிதராக எம் வானகத் தந்தை எம்மைப் படைத்து இருக்கின்றார். ஆனால் மனிதரான நாம் எமது பலவீனங்களினால், பாவ நாட்டம் கொண்டோராய், எம் புலன்களை பல இச்சைகள் ஆட்கொள்ள விட்டுவிடுகிறோம்.

தீயனவற்றைப் பார்க்கவும், தீமையானதைக் கேட்கவும், தீயது பேசவும் செய்கின்றோம். இதனால் தூய ஆவியின் ஆலயமாயிருக்கவேண்டிய எமது உடலையும் உள்ளத்தையும் தீயவனது ஆட்சிக்கு விட்டுவிடுகின்றோம். இதனால் செய்ய வேண்டியவற்றை செய்யாமலும், செய்யக்கூடாதவற்றைச் செய்தும் இயேசுவின் திருஇருதயத்தை மேலும் மேலும் நோகச் செய்து எமது ஆன்ம பலனை இழந்து விடுகின்றோம். இதனால் இந்தத் தவக்காலமானது எமது புலன்களை புனரமைத்துக் கொள்ள இறைவனால் தரப்படுகின்ற ஒரு புண்ணிய காலமாகக் திகழ்கின்றது.

இத்தவக்காலத்தில் நாம் செய்யவேண்டிய மூன்றாவது புண்ணிய காரியமாவது பிறரன்புக் காரியங்கள். நாம் நோன்பிருக்கும் போது அதனால் கிடைக்கக்கூடிய பொருட்களை அல்லது உணவு வகைகளை நமக்கென பாதுகாத்து சேமித்து வைக்காது அவற்றை ஏழை எளியவர்களுக்கு கொடுத்துதவுதல் வேண்டும். நாம் உபவாசமிருக்கும்போது, எமக்கு ஏற்படக்கூடிய பசி அல்லது வலிகள் எமது ஏழைச் சகோதர சகோதரிகளின் நாளாந்த பசிக்கொடுமையை, வலிகளை அவர்களது நாளாந்த கஷ்ட துன்பகங்களின் வலியை சிறிதளவேனும் உணர உதவுகின்றது. ஆகவே, எமது சேமிப்பிலிருந்து சிறிதளவேனும் இல்லாதவரோடு பகிர்ந்து வாழ அழைக்கும் காலம் இத்தவக்காலம்.

இயேசு, திருமுழுக்கு யோவானினால் யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்ற ... பு யூதேயாப் பகுதியில் - கா... படக் கூடிய வனாந்தரப் ப... பில் நாற்பது இரவும், நாற்பது பகலும் உண்ணா நோன்பிருந்து செபித்தார். இறைதந்தையின் திட்டத்தை நி... வேற்ற வந்த இயேசு தனது மறைப்பணியை ஆரம்பிக்கும் மு... இந்த நீண்ட நாட்களை தனது பணியின் ஆயத்த நாட்களாகக்கொண்டு தனித்திருந்து செபத்திலும் தபத்திலும் தம்மை ஈடுபடுத்தினார். இதனால்தான் அலகையினால் சோதிக்கப்பட்டபோதும் இயேசுவால் தனது மனிதனானதின் நோக்கத்தை சரிவரச் செய்ய, தந்தையின் விருப்பம்போல் தனது பணியை இப்பூவுலகில் செய்ய தைரியம் கிடைத்தது. அதுபோல நாமும் செபம், ஒறுத்தல், பிறரன்புப் பணி எனும் மூன்று காரியங்களை இந்தப் பொன்னான காலத்தில் கடைப்பிடித்து எம் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊட்டம் பெற்றவர்களாக, இறைவனுக்குரிய பிள்ளைகளாக வாழ முயற்சிப்போம்.

# பண்ணும் பரதமும் தமிழர்களின் பாரம்பரியக் கலைகளாகும்

வண. பேராசிரியர் ஞா. பிலேந்திரன்
தலைவர்/ கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத்துறைகள், யாழ் பல்கலைக்கழகம்.

*யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற செல்வி எறின் பிறின்சி பீற்றர்தாஸ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வின்போது பேராசிரியர் ஞா. பிலேந்திரன் அடிகளார் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் இங்கு தொகுத்து தரப்படுகின்றது.*



பண்ணும் பரதமும் தமிழர்களின் பாரம்பரியக் கலைகளாகும். இவை எமது இனத்தின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் உலகெங்கும் பறைசாற்றி நிற்கும் உன்னதக் கலைகளாகும். எமது பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் வாழ்வியலையும் பிரதிபலித்து நிற்கின்ற இந்த உயர்ந்த கலைகளை அழியாது காத்து எதிர்காலத் தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது எமது கடமையும் காலத்தின் தேவையுமாகும்.

எமது பாரம்பரியக்கலைகளின் எதிர்காலம் என்னும் விடயத்தைச் சற்று ஆழமாக நோக்கும்போது உலகமயமாக்கல் என்னும் விடயம் பொருளாதாரத்தில் மட்டும் தாக்கம் செலுத்தும் காரணியாக மட்டுமன்றி பல இனக் குழுக்கள் தங்கள் தனித்துவத்தை இழக்கும் நிலைப்பாட்டையும் தோற்றுவிக்கின்றன. அனைவர்க்கும் ஒரே வகையான பண்பாடு, ஒற்றைப் பண்பாடு குறித்த திணிப்பு என்னும் விடயங்கள் பற்றி நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இப்பின்புலத்தில் நோக்கும்போது இன்றைய நவீன உலகில் இலத்திரனியல் சாதனங்களாலும், நவீன இசைக்கருவிகளாலும், வெளிநாட்டு ஆடல், பாடல், மோகத்தினாலும் எமது பாரம்பரியக் கலைகளையும் எங்கள் தனித்துவத்தையும் காக்க வேண்டியது எம் அனைவரதும் பொறுப்பாகும்.

நாட்டார் கலைப்பயில்வு அதிகம் நலிவடைகின்ற வேளையில், ஒப்பியல் நிலையில் செந்நெறி மரபு அல்லது பெரும் பாரம்பரிய மரபு சார்ந்த கலைப்பயில்பு தொடர்பான ஈடுபாடு அண்மைக் காலங்களில் சற்று அதிகரிப்பதையும் அவதானிக்க முடிகிறது. உயர் கல்வித்தகைமையுடன் சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகளாகிய பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், வீணை, மிருதங்கம், ஆகியவற்றில் ஒன்றிலாவது தம் பிள்ளைகள் பயிற்சி பெற்றிருப்பதைச் சமூக அந்தஸ்தின் குறியீடாக பெற்றோர் நோக்குகின்றனர். மேலும் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகிய செந்நெறி மரபுக்கலைகள் பல்கலைக்கழக பாடவிதானத்தில் இணைக்கப்பட்டுள்ளமை, புலம்பெயர்ந்த எம் மக்கள் மத்தியில் இக்கலைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு, தென்பகுதியில் வாழும் சகோதர மொழி பேசுபவர் இதனைக் கற்பது என்னும் காரணங்களை இதற்கு முன்வைக்கலாம்.

கத்தோலிக்க மறையும் நாட்டார் கலையும் என்னும் விடயத்தை நோக்கும்போது, இலங்கையில் கத்தோலிக்க மறை அறிமுகம் பெற்ற காலத்திலிருந்தே வழக்கிலிருந்த நாட்டார் கலை வடிவங்களைக் கத்தோலிக்கர் உள்வாங்கிக் கிறிஸ்தவ நாட்டார் கலைப்படைப்பாக்கம் செய்துள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக கத்தோலிக்கர் ஆக்கிய நாட்டுக்கூத்துக்களைக் குறிப்பிடலாம்.

எனினும் கிறிஸ்தவமும் செந்நெறிக்கலைகளும் என்னும் விடயத்தை நோக்குமிடத்து அண்மைக் காலங்களிலிருந்தே இக்கலைகளுடன் கிறிஸ்தவர்களுக்கு அதிகம் ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. கிறிஸ்தவ மதமும் பரதக்கலையும் என்னும் விடயம்பற்றி நோக்கும்போது, பாவம், ராகம், தாளம் என்பவற்றை நுட்பமாக இணைத்து உருவாகும் பரதக்கலை மனதிற்கு இன்பத்தினையும் உடலுக்கு உறுதியையும் தெய்வம்சம் பொருந்திய வாழ்வையும் அளிக்க வல்லது. நடனத்தில் வருகின்ற பல்வேறு முத்திரைகள் மற்றும் அபிநயங்கள் மூலம் தாம் சொல்ல வரும் செய்திகளைப் பார்வையாளர் மனதில் ஆழப்பதிய வைக்கும் நுட்பம் இக்கலையின் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

இந்து மதத்தினால் பேணி வளர்க்கப்பட்ட கலையை கத்தோலிக்க மக்களும் கற்று இக்கலையின் வளர்ச்சிக்கு ஆற்றும் பணி பாராட்டுக்குரியது. இந்து மத, புராண இதிகாச கருத்துக்களை மையமாகக் கொண்டு அளிக்கை செய்யப்பட்ட பரதக்கலையை கிறிஸ்தவர்கள், பயின்று அளிக்கை செய்யும்போது கிறிஸ்தவ மதம்சார் செய்திகளையும் முன்வைக்க மேற்கொள்கின்ற முயற்சிகள் பாராட்டுக்குரியவை. எனினும் கிறிஸ்தவ மதம்சார் செய்திகளை முன்வைப்பதற்குரிய அங்கீகாரம் பெற்ற முத்திரைகள் எவை என்னும் வினா எழச் செய்கின்றது. ஏனெனில் செமித்திய, கிரேக்க, உரோம கலாசாரப் பின்னணியில் தோற்றம் பெற்று ஐரோப்பியக் கலாசாரத்தை வளர்த்து தானும் அதிலே வளர்ந்த கிறிஸ்தவ மறைக்கேயுரிய சில தனித்துவமான பண்புகள் உண்டு. இப்பின்புலத்தில் கிறிஸ்தவ மறையின் படிப்பினைகள், கோட்பாடுகள், விசுவாச உண்மைகளை எடுத்துரைப்பதற்குப் பொருத்தமான முத்திரைகள் பற்றிய தேடல் முக்கியம் பெறுகின்றது.

இதற்காக இவ்விடயம் தொடர்பான கற்கைகள், ஆய்வுகள், செயற்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது விடயத்தில் பலரது பங்களிப்பு வேண்டப்படுகின்றது. இவ்வாறான முயற்சிகள் கிறிஸ்தவமும், பரதக்கலையும் ஒன்றையொன்று வளர்ப்பதற்குச் சிறந்த ஊடகமாக அமையுமென்பது எனது நம்பிக்கை. இவ்வாறான முயற்சியின்போது பல விமர்சனங்களையும், எதிர்ப்புக்களையும் எதிர்நோக்குகின்ற நிலை ஏற்படலாம். எனினும், இதுபோன்ற விடயங்களில் திருச்சி, கலைக்காவிரி நுண்கலைக்கல்லூரி, யாழ் திருமறைக்கலாமன்றம் ஆகிய நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

## மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும்

# மறையாசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த பங்குகளில் பல வருடங்களாக பணியாற்றிவரும் மறையாசிரியர் ஒருவர் ஒவ்வொரு பங்கிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 32 ஆண்டுகள் நிறைவு விழாத் திருப்பலி கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளியில் இடம்பெற்றது. விழாத்திருப்பலியின் இறுதியிலேயே இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கௌரவிப்புப் பெற்ற மறையாசிரியர்களின் பெயர் விபரங்களைக் கீழே காணலாம்.

01. செல்வி. இனற் றொசானி அந்திரேஸ் - அடம்பன்
02. திருமதி. விக்ரர் மேரி கலிஸ்ரா - விடத்தல்தீவு
03. செல்வி. எ. எமில்டா வசந்தி - எழுத்தூர் பங்கு
04. திருமதி. ஞா. அற்புத சிறோன்மணி - அளவக்கை
05. திருமதி. பி. அன்னம்மா குருஸ் - வங்காலை
06. திரு. ரி. சந்தியோகு - வஞ்சியன்குளம்
07. செல்வி. இருதயநாயகி பாக்கியநாதன் - காத்தான்குளம்
08. செல்வி. கில்டா அந்தோனி - கற்கிடந்தகுளம்
09. திரு. அருள்சீலன் டயஸ் - தலைமன்னார்
10. திரு. தேவராஜன் சில்வா - தாழ்வுபாடு
11. திருமதி. யூட்கரன் பெசில்லா - பண்டிவிரிச்சான
12. திருமதி. அன்ரனி அமலநாயகி - ஓமந்தை
13. திரு. சூ. அம்புறோஸ் குலாஸ் - பேசாலை
14. திருமதி. திசவீரசிங்கம் றெமிசியா - பள்ளிமுனை
15. செல்வி. மேசி பற்றிக் - மன்னார்
16. திருமதி. அன்ரனி றதி - வவுனியா
17. திருமதி. அல்வினஸ் மர்த்தீனம்மா - குஞ்சுக்குளம்
18. திருமதி. மா. பொன்றோஸ் - உயிலங்குளம்
19. திரு. பறுனாந்து அற்புதராஜ் - முருங்கன்
20. திருமதி. மத்தியூஸ் றீசா குருஸ் - அரிப்பு
21. செல்வி. சாந்தா பேதுரு - ஆட்காட்டிவெளி
22. திருமதி. புஸ்பரட்ணம் - வேப்பங்குளம்
23. திருமதி. பெனாண்டோ சூசையம்மா - தோட்டவெளி
24. திருமதி சகாயம் புஸ்பமலர் - தேவன்பிட்டி
25. திருமதி எ. பனிமயநாயகி - கீளியன்குடியிருப்பு
26. திருமதி செல்வநாயகி - கோமரசன்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# சிறைகளிலுள்ள பிள்ளைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்!



### சிறையில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர் மன்னார் ஆயருக்கு கடிதம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் வெறும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு 'தமிழ் அரசியல் கைதிகள்' என்கின்ற அடையாளப்படுத்தலுடன் மிக நீண்டகாலமாக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளிலிருந்து அவர்களை விடுவித்த அவர்களது உயிரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கைதிகளின் பெற்றோர் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகைக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

## மன்னார் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் வருடாந்த ஒன்றுகூடலும் விவிலிய கற்கைநெறி சான்றிதழ் வழங்கலும்

மன்னார் மறைமாவட்டத்தின் அன்பிய ஆணைக்குழுவின் வருடாந்த அன்பிய ஒன்றுகூடலும் விவிலிய கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த 14-01-2013 ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு மறைமாவட்ட அன்பிய விவிலிய ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு தலைமையில் அன்பியத் தொடர்பகத்தில் நடைபெற்றது. இவ்வொன்றுகூடலில் 90 அன்பிய இணைப்பாளர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டார்.

அன்பியத் தொடர்பகச் செயலர் திரு. டி. பி. எவ். ஞானப்பிரகாசம் அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அன்பிய விவிலிய ஆணைக்குழு இயக்குனர் டக்ளஸ் மில்ரன் லோகு அடிகளார் அன்பிய விவிலிய பணிகள் குறித்து உரையாற்றினார்.

அன்பியப் பணிகளுக்கு விவிலிய அறிவு அவசியத் தேவை என்பதனால் விவிலிய அறிவை அன்பிய பணியாளர்கள் ஓரளவாவது பெற்றிருக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஆயர் அவர்களின் அனுமதியுடன் ஏழு மாத (மாதாந்தம் இரு சனி தினங்களில்) விவிலியக் கற்கைநெறி வகுப்புக்கள் நடைபெற்றன. இவ்வகுப்புக்களில் விவிலியத்தில் 13 நூல் தொகுப்புக்கள் 14 ஆசிரியர்களினால் (குருக்கள், பொதுநிலைப் பணியாளர்கள்) கற்பிக்கப்பட்டது. 49 அன்பிய பணியாளர் முழுமையாக இவ்வகுப்புக்களில் பங்கேற்று தனியாள் செயற்திட்டத்தை சமர்ப்பித்து சான்றிதழுக்கு தகுதியுடையவரானர். ஆயர் தனதுரையில், அன்பியங்களில் மக்கள் தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தும் வண்ணம் சென்று கற்றதனைத்தையும் மற்றவர்களுக்கு அறிவித்து அன்பியங்களைக் கட்டியெழுப்புமாறு உற்சாகப்படுத்தினார். தொடக்கத் திருச்சபையில் பொதுநிலையினர் உயிர்த்த இயேசுமீது





கொண்டிருந்த விசுவாசத்தை அறிக்கையிட்டு சான்றுபகர்ந்ததையும் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து 2012ம் ஆண்டு முழுவதும் நடைபெற்ற விவிலிய பணிகள் குறித்த பணி அறிக்கையினையும், அன்பியப் பணிகள் குறித்த அறிக்கையினையும் அன்பிய மத்தியகுழு உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். எட்வேட், ரி. மரியதாஸ் ஆகியோர் வாசித்தளித்தனர்.

தொடர்ந்து விவிலிய கற்கைநெறியினை நிறைவுசெய்த 49 அன்பியப் பணியாளர்களுக்கு ஆயர் அவர்கள் சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவித்து அவர்களை வாழ்த்தினார். மன்னார், முருங்கன் அன்பிய மத்தியகுழு உறுப்பினர்களுக்கு அன்பிய ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்பளிப்புக்களை வழங்கி அன்பியப் பணிகளை ஆர்வமுடன் ஆற்றி வருவதற்கு பாராட்டும் தெரிவித்தார். பின்னர் விசுவாச ஆண்டினை மையப்படுத்திய இரு குறு நாடகங்கள்"இறை விசுவாசத்தில் வாழும் அன்பியங்கள்", "செவிசாய்க்கும் இறைவனில் நம்பிக்கை கொள்வோம்" என்னும் மையப்பொருளில் காட்சிப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து நன்றி உரையுடன் ஆயர் அவர்களின் ஆசீர் வழங்கப்பட்டு அன்பிய எழுச்சிப் பாடல் பாடப்பட்டு மாலை 5.10 மணியளவில் இந்நிகழ்வு இனிதே நிறைவெய்தியது.

## ஆட்காட்டிவெளிப் பங்கு சாளம்பன் கிராமத்தில் தியான நிகழ்வு

ஆட்காட்டிவெளிப் பங்கின் சாளம்பன் கிராமத்தில் புனித அடைக்கல மாதா ஆலயத்தில் இறை விசுவாசத்தை ஊக்குவிக்கும் புதுப்பித்தல் தியானம் கடந்த 16.01.2013 அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சாளம்பன் கிராம மக்கள் அனைவரும் ஆட்காட்டிவெளிப் பங்கின் அன்பிய ஊக்குவிப்பாளர்கள், நிரந்தர மறையாசிரியர்கள், தன்னார்வப் பணியாளர்கள் போன்றோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வானது காலை 8.30 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் அடிகளாரினால் தியானத்தின் நோக்கமும் மக்களின் பங்கேற்பும் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. தொடர்ந்து விசுவாச வாழ்வு பற்றிய தெளிவை வேதாகம விளக்கத்துடன் அருட்பணி. லக்கோன்ஸ் பிகிறாடோ அடிகளார் எடுத்துக்கூறினார். "அன்பிய வாழ்வு" என்னும் தலைப்பில் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்களும், அவர்களின் குழுவினரும் சிறிய நாடகங்களை முன்வைத்தும் பாடல்கள் பாடியும் தெளிவுபடுத்தினார்கள். 'கிறிஸ்தவ வாழ்வு' என்னும் தலைப்பில் அருட்சகோதரி. றெஜினா அவர்கள் பல கருத்துக்களை முன்வைத்தார்.

தொடர்ந்து மதிய உணவிற்கான இடைவேளை விடப்பட்டு மீண்டுமாக 2.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. திரு. பிரான்சிஸ் அவர்களால் இறையாசிரும் சாபமும் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. அருட்சகோதரர் சிறிதரன் அவர்கள் பாவ வாழ்வும் மனமாற்றமும் பற்றிய தன் அனுபவங்களை எடுத்துக் கூறி விளக்கினார்.

தொடர்ந்து அதே தலைப்பின்கீழ் அருட்தந்தை யூட் குரூஸ் அடிகளார் உரையாற்றினார். சகோதர உறவை வளர்க்கும் பல கருத்துக்களையும் அவர் தெளிவுபடுத்தினார். இறுதியாக நற்கருணை ஆசீரோடு மாலை 5.30 மணிக்கு புதுப்பித்தல் தியானம் நிறைவுபெற்றது. இதற்காக தங்களை அர்ப்பணித்து பணி செய்த அனைத்து இறை உள்ளங்களையும் நன்றியுடன் நினைக்கின்றோம்.

தகவல்:- ஞா. கிறிஸ்ஷாந்தா (குயின்சி), சாளம்பன்.


## வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயம் நிர்வாகத்தெரிவும் ஒன்றுகூடலும்

வேப்பங்குளம் பங்கின் பிரதான ஆலயமாகிய புனித சூசையப்பர் ஆலயத்தின் 2013 – 2014 ஆண்டு காலப்பகுதிக்கான புதிய நிர்வாகத் தெரிவு மார்கழி மாதம் 16ம் திகதி பங்குத்தந்தை அருட்பணி அ. ரஜனிக்காந் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்குத்தந்தை அவர்கள் ஆலய சபையின் நோக்கம், குறிக்கோள் என்பவற்றை தெளிவுபடுத்தியதுடன் பங்கின் வளர்ச்சிப் பாதையில் ஆலய சபையினரினருடைய பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். நாம் அனைவரும் இயேசுவை இவ்வுலகில் பறைசாற்றும் கருவிகளாக மாற வேண்டும் எனவும் கருத்துரைத்தார். புதிய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் விபரம் வருமாறு :

எ. யோய். ஜயந்தன் - செயலாளர், செ. வெ. ராச்குமார் - பொருளாளர், செ. ஜேசுநேசன் - உபசெயலாளர். மேற்படி உறுப்பினர்களுடன் வேப்பங்குளம் ஆலயத்திற்குட்பட்ட அன்பியங்கள், பணிக்குழுக்கள், பக்திச்சபைகள், பங்கில பணிபுரியும் துறவற சபைகள், பங்குத்தந்தையின் விசேட பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய 2013ம் ஆண்டிற்கான முதலாவது ஒன்றுகூடல் நடந்த 06.01.2013 அன்று பங்குத்தந்தையின் தலைமையில் நடைபெற்றது.

தகவல்:- [illegible]

## மன்னார் சிறுவர் பூங்கா விரைவில் திறக்கப்படும்



மன்னார் நகரில் யூ.எஸ்.எயிட். நிறுவனத்தினால் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா விரைவில் பாவனைக்கு திறந்துவைக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான சிறுவர் பூங்கா யூ. எஸ். எயிட். நிறுவனத்தால் கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து நவீன முறையில் புனரமைக்கப்பட்டு தற்போது குறித்த புனரமைப்பு பூர்த்தியடைந்துள்ளதாக நகர சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 15 மில்லியன் ரூபா செலவில் குறித்த சிறுவர் பூங்கா நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், சீனாவில் இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் இந்தப் பூங்காவில் பொருத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விரைவில் சிறுவர்களின் பாவனைக்கு திறந்துவைக்கப்படவுள்ள பூங்காவின் திறப்பு விழாவினை விமர்சையாக நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை மன்னார் நகரசபை மேற்கொண்டு வருகின்றது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தாம் வெற்றியடையும் பட்சத்தில் மன்னார் சிறுவர் பூங்காவை நவீன முறையில் மாற்றம் செய்து தருவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடமேல்மாகாண கடற்படை தளபதி மன்னார் ஆயரிடம் விடைபெற்றார்

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வடமேல் மாகாண கடற்படை கட்டளையிடும் தளபதியாக முள்ளிக்குளம் பகுதியில் இருந்து பணியாற்றிய றியல் அட்மிரல் றோகண பெரேரா அவர்கள் தன் பணியை நிறைவுசெய்துகொண்டு மாற்றலாகிச் சென்றுள்ளார். இவர் மன்னாரிலிருந்து விடைபெற்றுச் செல்லும்முன் மன்னார் ஆயர் இல்லத்திற்கு வருகை தந்து மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையைச் சந்தித்து ஆசீர்பெற்று விடைபெற்றுச் சென்றார்.

இவர் முள்ளிக்குளம் பகுதியில் இருந்து பணியாற்றிய காலப்பகுதியில் மக்கள் சார்ந்த பல மனிதாபிமானப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டியிருந்தார். முள்ளிக்குளம் மக்கள் மீளவும் தங்கள் இடங்களில் குடியேற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைமன்னார் முதியோர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

தலைமன்னார்
புனித லோறன்சியார்
ஆலயம்



தலைமன்னார் புனித லோறன்ஸ் முதியோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 25.11.2012 அன்று இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ப. டெஸ்மன்ட் குலாஸ் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார். நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர் :- திரு. க. சவிரி கூஞ்ஞ
செயலாளர் :- திருமதி. இ. செபஸ்ரியம்மா டலிமா
பொருளாளர் :- திரு. வெ. அ. றெஜினோல்ட் பீரிஸ்
உபதலைவர் :- திரு. வெ. அருள்சீலன் டயஸ்
உறுப்பினர்கள் :- திருமதி. அ. வெற்றிமேரி பெர்ணாண்டோ திரு. ம. அந்தோனிப்பிள்ளை, திருமதி செ. மரியை, திரு. அ. சூசை குரூஸ், திருமதி. அ. புஸ்பம் கூஞ்ஞ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

சிறப்புக் கட்டுரை

### திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் நம்பிக்கையின் ஆண்டை அறிவித்து வெளியிட்ட

# நம்பிக்கையின் வாயில் (Porta Fidei)

### எனும் திருத்தூது மடல் (Apostolic Letter)




1. இறைவனோடு உறவுகொள்ளவும் திருச்சபையினுள் நுழையவும் வகைசெய்யவும் நம்பிக்கையின் கதவு (திப 14:27) எப்போதும் திறந்தே உள்ளது. இறைவார்த்தை அறிவிக்கப்படும்போது அருளினால் நாம் மாற இதயம் அனுமதிக்கும்போது, நாம் இந்த கதவைத் தாண்டி வரமுடியும். இந்தக் கதவின் வழியே வருவதென்பது நமது வாழ்நாள் பயணமாகும். இது நாம் இறைவனை அப்பா என அழைக்க உரிமை தரும் திருமுழுக்கில் (காண். உரோ 17:22) தொடங்கி நிலை வாழ்வுக்குள் நுழைவதில் முடிகின்றது. இந்த நிலைவாழ்வு தம்மீது நம்பிக்கைகொள்வோரை தனது மகிமைக்குள் (காண். யோவா 12:22) தூய ஆவியை கொடையாக அருளிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் பயனாகும். நம்பிக்கையை அறிக்கையிடுதல் என்பது தந்தை மகன் தூய ஆவியாகிய அன்பே உருவான மூவொரு இறைவனை நம்புவதாகும். தந்தையாகிய இறைவன் காலம் நிறைவுற்றபோது தம் மகனை நமது மீட்புக்காக அனுப்பினார். இயேசுக் கிறிஸ்து தனது மரணம் உயிர்ப்பு எனும் மறைப்பொருள் வழியாக உலகை மீட்டார். தூய ஆவி, ஆண்டவரின் மகிமையின் வருகைக்காக காத்திருக்கும் திச்சபையை காலம்தோறும் வழிநடத்தி வருகின்றார்.

2. புனித பேதுருவின் வழித்தோன்றலாக நான் எனது பணியை ஆரம்பித்தது முதல் ஆண்டவர் இயேசுவைச் சந்திப்பதால் வரும் மகிழ்ச்சி மற்றும் புதிப்பிக்கப்பட்ட உற்சாகத்தினை வெளிக் கொணரும் பொருட்டு நம்பிக்கையின் பயணத்தை மறு பார்வை செய்வது பற்றி பேசி வந்திருக்கிறேன். எனது பாப்பிறைப் பணியை தொடங்கிவைத்த திருப்பலியின் மறையுரையில் நான் இவ்வாறு கூறினேன் : திருச்சபையும் அதன் மேய்ப்பர்களும் இயேசுவைப்போல பாலைவனத்திலிருந்து வாழ்வின் இடத்திற்கும், இறைமகனோடு கொள்ளும் நட்புறவிற்கும், வாழ்வளிப்பவரும், அதை நிறைவாக அளிப்பவருமாகியவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். கிறிஸ்தவர்கள் நம்பிக்கை என்பது சமூக வாழ்வுக்கு அடிப்படையானது என எண்ணி தங்களின் அர்ப்பணத்தால் வரும் சமூக, கலாச்சார, அரசியல் விளைவுகளைப்பற்றி அதிகம் கவலைகொள்கின்றனர். இந்த அடிப்படையானது சாதாரண வாழ்வில் கண்டுகொள்ளப்படுவதில்லை அல்லது மறுக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் நம்பிக்கையின் தொகுப்பையும் (Content of Faith) அதன் ஆதாரமான மதிப்பீடுகளையும் (Values) ஒருங்கிணைந்த கலாச்சார செயல்பாடுகளில் காணமுடிந்தது. இன்று பெரும்பான்மையான மக்களை பாதிக்கின்ற நம்பிக்கை சிக்கலால் (Crisis of Faith) இவற்றை சமூகத்தில் காண முடிவதில்லை.

3. உப்பு சாரமற்று போவதையோ, விளக்கு மறைத்து வைக்கப்படுவதையோ (காண். மத் 5:13-16) நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றும் மக்கள் சமாரியப் பெண்ணைப்போல தம்மீது விசுவாசம் வைக்கவும், அவரிடமிருந்து பொங்கிவரும் வாழ்வின் நீரினை முகர்ந்துகொள்ளவும், இயேசுவை நோக்கிவரும் அனுபவத்தைப் பெறுகின்றனர். திருச்சபையில் பாரம்பரியமாக அளிக்கப்படும் இறைவார்த்தையாலும் அவரின் சீடர்களின் வாழ்வாதாரத்திற்காக (காண்: யோவான் 6:51) அளிக்கப்படும் வாழ்வின் அப்பத்தையும் சுவைக்கின்ற அனுபவத்தை நாம் மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும். இயேசுவின் படிப்பினைகள் இன்றும் அதே வல்லமையோடு எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன. அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். (யோவா 6:27) இயேசுவுக்கு செவிமடுத்த மக்கள் கேட்ட அதே கேள்வியை இன்றும் நாம் கேட்கிறோம். எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? (யோவா 6:27) இயேசுவின் பதிலும் நமக்குத் தெரியும். கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுக்கேற்ற செயல் (யோவா 6:29) இயேசு கிறிஸ்துவை நம்புவதே மீட்புக்கான நிச்சயமான வழி.

4. இவை அனைத்தின் அடிப்படையில் நான் நம்பிக்கையின் ஆண்டை அறிவிக்க தீர்மானித்தேன். இரண்டாம் வத்திக்கான் சங்கம் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் நிறைவடையும் இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டு அக்டோபர் பதினோராம் நாள் தொடங்கி அனைத்துலக அரசராம் இயேசுக் கிறிஸ்துவின் பெருவிழாவன்று அதாவது இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு நவம்பர் 24ம் தேதி இது நிறைவடையும். நம்பிக்கையின் ஆண்டின் தொடக்க நாள் இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டு அக்டோபர் பதினோராம் நாளானது இறைமக்கள் அனைவருக்கும் நம்பிக்கையின் ஆற்றலையும் அழகையும் வலியுறுத்துவதற்காக எமக்குமுன் சென்ற வணக்கத்திற்குரிய (Blessed) இரண்டாம் ஜான் பால் அவர்கள் வெளியிட்ட கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechiam of the catholic church) எனும் ஏடு வெளிவந்து இருபதாம் ஆண்டின் நிறைவையும் குறிக்கிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் உண்மையான கனியாகிய இந்த ஏடு ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு மறைக்கல்விக்கான உதவியாக இருக்க ஆயர்களின் உதவியோடு தயாரிக்கப்பட்டது. மேலும் இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டு அக்டோபர் திங்கள் நான் கூட்டியிருக்கும்ஆயர்களின் பெருமன்றத்தின் (General Assembly of the Synod of Bishops) கருத்தும் "கிறிஸ்தவ நம்பிக்கையை வழங்குவதற்கான புதிய மறைபரப்பு" என்பதாகும் (The New Evangelization for the Teansmission of the Christian Faith). அகில உலக திருச்சபை நம்பிக்கையைப்பற்றி சிந்திப்பதற்கும் அதை மீண்டும் கண்டுகொள்வதற்கும் உந்தித் தள்ளுவதற்கு ஒரு உன்னதமான வாய்ப்பாக நம்பிக்கையின் ஆண்டை கொண்டாட திருச்சபை அழைக்கப்படுவது இது முதல் முறையன்று. புனித பேதுரு மற்றும் பவுல் ஆகியோர் தங்களின் சாட்சியத்திற்காக மறைசாட்சியான பத்தொன்பதாம் நூற்றாண்டின் நினைவைக் கொண்டாட ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஏழாம் ஆண்டு எனது மதிப்பிற்குரிய முன்னோடி இறை அடியார் ஆறாம் சின்னப்பர் இதை அறிவித்திருந்தார். இது அகில உலக திருச்சபை உளப்பூர்வமாகவும் உண்மையாகவும் இந்த நம்பிக்கையை அறிக்கையிடும் ஒரு உன்னத நேரமாக இருக்கும் என அவர் நம்பினார். மேலும் அது தனி நபர் சார்ந்ததாகவும் குழுமமானதாகவும், வெளிப்படையாகவும், தாழ்ச்சியோடும், உண்மையோடும் அமைய வேண்டும் என விரும்பினார். இவ்வாறாக அனைத்துலக திருச்சபையும் நம்பிக்கையைப்பற்றி சரியான அறிவைப் பெற்று அதன் வழியாய் நம்பிக்கை புத்துணர்ச்சி பெறும், தூய்மையடையும், உறுதிப்படுத்தப்படும் மற்றும் அறிக்கையிடப்படும் என்று நம்பினார். அந்த ஆண்டில் ஏற்பட்ட புத்தெழுச்சி இத்தகைய ஓர் ஆண்டைக் கொண்டாடுவதற்கு காரணமாய் அமைந்தது. பழங்காலத்திலிருந்து வேறுபட்ட அன்றைய வரலாற்று காலத்தில் சரியான சான்று பகர்வதற்காக அந்த ஆண்டு இறைமக்களின் விசுவாசப் பிரமாணத்தோடு நிறைவுபெற்றது. இது பல நூற்றாண்டுகளாய் விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட ஒரு பொக்கிஷம். இது உறுதிப்படுத்தப்பட வேண்டும். புரிந்துகொள்ளப்பட வேண்டும். மேலும் புதிதாய் தோண்டியெடுக்கப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்தியது.

5. எனது மதிப்பிற்குரிய முன்னோடி அந்த ஆண்டை திருச்சங்கத்தை அடுத்து வந்த காலங்களின் விளைவு எனவும் தேவை எனவும் கண்டார். உண்மையான நம்பிக்கைகளை அறிக்கையிடவும், அதைச் சரியாக விளக்கவும் அன்றைய சூழலில் இருந்த பிரச்சினைகளால் அத்தகைய ஆண்டில் தேவையை அவர் உணர்ந்திருந்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஐம்பதாம் ஆண்டிலே நம்பிக்கையின் ஆண்டை அறிவிப்பதன் வழியாக வணக்கத்திற்குரிய இரண்டாம் ஜோன் போல் கூறியதுபோல திருச்சபையின் தந்தையர் நம்மிடம் ஒப்படைத்துள்ள ஏடுகள் அவற்றின் மதிப்பையும் பிரகாசத்தையும் இழந்துவிடவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமையும். அவை சரியாக வாசிக்கப்பட வேண்டும். பிரபல்யப்படுத்தப்படவேண்டும். திருச்சபையின் பாரம்பரியத்தில் இந்த ஏடுகள் முக்கியமான மற்றும் சட்டப்படியான ஆசிரியம் என உள்ளத்தில் ஏற்கப்பட வேண்டும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை இருபதாம் நூற்றாண்டில் திருச்சபையின்மீது பெழியப்பட்ட அருள் என சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். தொடங்கியிருக்கின்ற புதிய நூற்றாண்டில் நம்மை வழிநடத்துகிற பாகை மாணியாக இது செயல்படும். வத்திக்கான் சங்க ஏடுகளை நாம் சரியாக விளக்கி முறையாக நடைமுறைப்படுத்தினால் திருச்சபையை புதுப்பிப்பதற்கு சக்தியான கருவியாக இருக்கும் என புனித பேதுருவின் வழித்தோன்றலாக நான் பொறுப்பேற்ற சில மாதங்களுக்குப் பிறகு கூறியதை இங்கு அறுதியிட்டு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

திருச்சபையை புதுப்பிப்பது விசுவாசிகளின் சான்றான வாழ்க்கையினாலும் சாத்தியமாகிறது. ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து விட்டுச்சென்ற உண்மையின் வார்த்தையை விசுவாசிகள் உலகில் வாழ்வதன் வழியாக அவர்கள் அதை ஒளிரச் செய்கிறார்கள். திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டிலும் இது கூறப்பட்டுள்ளது. புனிதர், குற்றமில்லாதவர். மாசற்றவர், (எபி 7:26) என விளங்குபவரும் பாவமே அறியாதவருமான கிறிஸ்து (2கொரி 5:21) மக்களின் பாவங்களுக்குக் கழுவாயாகுமாறு வந்தார் (காண எபி 2:17). திருச்சபையோ பாவிகளைத் தன்னுள் கொண்டிருப்பதால் தான் புனிதமானதாயிருப்பினும் எப்பொழுதும் தூய்மைப்படுத்தப்பட வேண்டிய தேவையைத் தன்னில் கொண்டு தவம், சீர்திருத்தம் என்ற பாதையிலேயே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. ஆண்டவர் வரும்வரை அவரது சிலுவையையும் மரணத்தையும் அறிக்கையிட்டு (காண் 1 கொரி 11:26), உலகின் துன்பங்கள் இறைவனின் ஆறுதல்கள் இவற்றின் நடுவிலே திருச்சபை வழிநடந்து முன்னேறிச் செல்கிறது. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் ஆற்றலால் உள்ளிருந்தும் வெளியிருந்தும் தனக்கு வரும் இன்னல்களையும் இடுக்கண்களையும் பொறுமையாலும், அன்பாலும் மேற்கொள்ளவும் இறைவனின் மறைபொருள் இறுதியில் தன் முழு மாட்சியுடன் தெளிவாக வெளியிடப்படும் வரை, மங்கிய முறையினாலும் பிரமாணிக்கத்துடன் அதை உலகிற்குக் காட்டவும் திருச்சபை உறுதிபெற்றிருகிறது. (திருச்சபை எண் 8) இத்தகைய கண்ணோட்டத்தில் நம்பிக்கையின் ஆண்டு உலகின் ஒரே மீட்பராகிய நமதாண்டவரை நோக்கி உண்மையாகவும் புதுப்பிக்கப்பட்ட விதத்திலும் திரும்பி வருவதற்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் ஆகிய மறைபொருட்களின் வழியாக கடவுள் தமது மீட்கும் அன்பின் முழுமையை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் பாவ மன்னிப்பின் வழியாக (காண் திப 5:31) மனமாறிய வாழ்வுக்கும் நம்மை அழைக்கின்றார். புனித பவுலடியாரின் கண்ணோட்டத்தில் இந்த அன்பு நம்மை புது வாழ்வுக்குள் உந்தித்தள்ளுகிறது. இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். (உரோ 6:4) நம்பிக்கையின் வழியாக இப்புதுவாழ்வு மானுட வாழ்வு முழுவதையும் உருவாக்குகிறது. மனிதன் ஒத்துழைக்கும் அளவுக்கு ஏற்ப அவனது சிந்தனைகள், பாச உணர்வுகள், மனநிலை மற்றும் செயல்பாடுகள் ஆகியவை கொஞ்சம் கொஞ்சமாக தூய்மைப்படுத்தப்பட்டு மாற்றம் அடைகின்றன. இப்பயணம் இந்த வாழ்க்கையில் முழுமையடைந்து விடுவதில்லை. அன்பின் வழியாய் செயலாற்றும் நம்பிக்கை (கலா 5:6) மானுட வாழ்வு முழுவதையும் மாற்றும் புதிய அடிப்படையாக அமைகின்றது. (காண்: உரோ 12:2, கொலோ 3:9-10, எபே 4:20-29, 2 கொரி 5:17)

6. கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்கிறது (2கொரி 5:14). கிறிஸ்துவின் அன்பே நமது இதயங்களை நிரப்பி நம்மை மறைபரப்புப் பணிக்கு உந்தித்தள்ளுகிறது. கடந்த காலங்களைப் போலவே இன்றும் உலகின் மக்கள் அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்க உலகிற்கு நம்மை அனுப்புகிறார் (காண் மத் 28:19). தனது அன்பின் வழியாக இயேசுக் கிறிஸ்து எல்லாத் தலைமுறையின் மக்களை தன்பால் ஈர்கின்றார். எப்போதும் புதிய கட்டளையின் வழியாக நற்செய்தி அறிவிக்கும் பணியை தந்து எல்லா காலங்களிலும் அவரே திருச்சபைக்கு அழைப்பு விடுக்கின்றார். நம்பிக்கை கொள்வதன் மகிழ்ச்சியையும் அதை அறிவிப்பதற்கான உற்சாகத்தையும் கண்டுபிடிப்பதற்காக இன்றும் புதிய நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு திருச்சபை தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டிய தேவையில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் அவரின் அன்பை கண்டடைவதிலே விசுவாசிகளின் மறைபரப்பிற்கான அர்ப்பணம் புதிய ஆற்றலையும் தெம்பையும் பெறுகிறது. இது என்றும் குன்றிப்போகாது. தான் பெற்றுக்கொண்ட அன்பு அனுபவபூர்வமாக வழங்கப்படும்போதும், இரக்கம் மற்றும் மகிழ்ச்சியின் அனுபவமாக பிறருக்கு தெரிவிக்கப்படும்போதும் நம்பிக்கை வளர்கிறது. அது நமது இதயங்களை எதிர்நோக்கில் விரிவுபடுத்தி வாழ்வளிக்கும் சாட்சிய வாழ்வுக்கு உதவுவதால் அது நம்மை பலன் தருபவர்களாக மாற்றுகிறது. அதாவது ஆண்டவரின் அழைப்பான இறைவார்த்தைக்கு செவிமடுத்து அவரின் சீடர்களாகும் எண்ணமுடையோரின் இதயங்களையும் மனதையும் அது திறந்து விடுகின்றது. புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்வதன் வழியாக நம்பிக்கைகொள்வோர் தங்களை திடப்படுத்திக்கொள்கின்றனர். ஹிப்போ நகர் புனித ஆயர் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் இருந்தது. நாம் அறிந்ததுபோல ஆண்டவரில் அமைதிக்கொள்ளும்வரை அவரது இதயம் நம்பிக்கைகொள்ளுதலின் அழகைத் தேடிய ஒரு தொடர் தேடலாக இருந்தது. நம்பிக்கைகொள்வதின் அவசியத்தையும் நம்பிக்கை மற்றும் உண்மைத் தன்மையையும் விளக்கும் அவரது பரந்துபட்ட படைப்புகள் குறிப்பிட முடியாத சொத்தாக, பொக்கி'மாக இன்றும் விளங்குகின்றன. அவை இன்றும் கடவுளைத் தேடும் மக்கள் சரியான நம்பிக்கையின் வாயிலை கண்டடைய பெரிதும் உதவுகின்றன. நம்பிக்கைகொள்வதன் வழியாகத்தான் நம்பிக்கை வளர்கிறது, திடம் பெறுகின்றது.

ஒருவர் தன்னையே கையளிப்பதன் வழியாக அன்றி வேறெந்த வழியிலும் ஒருவர் எத்தகைய உறுதிப்பாட்டையும் பெறமுடியாது. கடவுளிடமிருந்து ஊற்றெடுத்து தொடந்து வளரும் அன்பிற்கு அர்ப்பணிப்பதில் இது அடங்கியுள்ளது.

7. இந்த மகிழ்ச்சியான தருணத்தில் உலகெங்கும் உள்ள எம் சகோதர ஆண்களை, புனித பேதுருவின் வழித்தோன்றலோடு சேர்ந்து, ஆண்டவர் அருளும் இந்த ஆன்மீக அருளின் காலத்தில் இந்த உன்னத நம்பிக்கை எனும் கொடைக்கு அழைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டை தகுதியான பயனுள்ள விதத்தில் கொண்டாட விரும்புகிறோம். மானுடம் வேரோட்டமான மாற்றங்களை சந்தித்துக்கொண்டிருக்கிற இக்கால் கட்டத்தில் கிறிஸ்துவில் நம்பிக்கைகொள்வோர் அனைவரும் நற்செய்தியை உறுதியுடன் பற்றிக்கொள்ள உதவும் பொருட்டு நமது வீடுகளிலும், இல்லங்களிலும் உயிர்த்த ஆண்டவர்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையை அறிக்கையிட நமக்கு வாய்ப்புகள் கிடைக்கும். துறவற இல்லங்களும், பங்குத் தளங்களும், பழைய புதிய திருச்சபையின் இ பக்கங்களும், சபைகளும் இந்த ஆண்டில், பகிரங்கமாக நமது விசுவாச பிரமாணத்தை அறிக்கையிட வழிவகைகள் கண்டறிய வேண்டும்.

(அடுத்த மாத இதழில் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல நூதனசாலை

கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல நூதனசாலையானது கடந்த 13.01.2013 அன்று மாலை 6.00 மணிக்கு கொழும்பு உயர் மறை மாவட்டப் பேராயர் அதிவந்தனைக்குரிய கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. இது இலங்கையின் அந்தோனியார் பக்திப்பாரம்பரியத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வு எனக் கருதப்படுகின்றது,

இத்திறப்பு விழாவிலே திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி அதிவந்தனைக்குரிய ஜோசப் ஸ்பிட்டரி ஆண்டகை, இத்தாலியில் இருந்து வருகை தந்த ஆயர் அதிவந்தனைக்குரிய ரியா லிஜீனோ ஆண்டகை, பாதுவா நகர புனித அந்தோனியார் பசிலிக்காவின் இயக்குனர் அருட்பணி. மின்கார்டி மாரியோ அடிகளார், முன்னாள் பாதுவா நகரப் பசிலிக்காவின் இயக்குனர் அருட்பணி. என்சோ பொய்யானோ அடிகளார், இலங்கையின் முதற் பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் கடற்படைத்தலைமை அதிகாரி ஜயனாத கொலப்பாகே, மொன்சிஞ்ஞோர் நெவில் ஜோ பெரேரா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

முதலிலே பாதுவா நகரிலே இருந்து இத்திருத்தலத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த தூய அந்தோனியாரின் 4½ அடி உயரமான மரத்தினால் ஆன சுரூபம் கொட்டாஞ்சேனை தூய லூசியா பேராலயத்திலிருந்து பவனியாக ஜெம்பட்டா வீதி அரச மரச்சந்திவரை கொண்டுவரப்பட்டது. அங்கிருந்து பாடசாலை மாணவ மாணவியரின் பாண்ட் வாத்தியக்குழுவின் பாண்ட் வாத்திய இசையோடும் கடற்படையினரின் பாண்ட் வாத்திய இசையோடும் திருத்தல முன்றலில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு எடுத்துவரப்பட்டது. அதேவேளை பேராயரும் இத்தாலியில் இருந்து வருகை தந்திருந்த அருட்தந்தையர்களும் இலங்கைப் பாரம்பரியத்தின்படி வரவேற்கப்பட்டு மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

பின்னர் மங்கள விளக்கேற்றப்பட்டு திருச்சுரூபமானது பேராயரால் ஆசீர்வதிக்கப்பட்டது. ஆசீர்வதிக்கப்பட்ட தூய அந்தோனியாரின் சுரூபமானது அதற்கென விசேடமாக அமைக்கப்பட்டிருந்த கூட்டினுள் வைக்கப்பட்டது. தொடர்ந்து நூதனசாலையின் முகப்புத் தோற்றம் திரைநீக்கம் செய்யப்பட்டு நூதனசாலை ஆசீர்வதிக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் அதிதிகளோடு அழைக்கப்பட்ட அனைவரும் நூதன சாலையினைப் பார்வையிட்டனர். இந்நூதனசாலை இவ்விடத்திலே அமைக்கப்பட்டமைக்கான காரணம் பற்றித் தற்போதைய நிர்வாக அருட்தந்தை அருட்பணி. இளமென்ற் ரொசைரோ அடிகளாரிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது, "தூய அந்தோனியார் பக்தி, அவரது வாழ்க்கை வரலாறு, எமது திருத்தல வரலாறு பற்றித் தெரியாத பலர் இவற்றை அறியவேண்டும் என்ற தாகமுள்ளவர்களாகச் செல்வதை கண்ணுற்றோம். இம்மக்களின் விசுவாசத்தை இன்னும் பெருக்கிக்கொள்ள ஆவல்கொண்டு இம்முயற்சியில் இறங்கினோம்" என்றார்.

இவரோடு இணைந்த குழுவினர் இத்தாலியில் உள்ள புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள பாதுவா நகர் சென்றபோது அங்குள்ள நூதனசாலையைப் பார்வையிட்டனர். அங்கு மக்கள் உல்லாசப் பயணிகளாக வருகை தந்து அந்த நூதனசாலையைப் பார்வையிடுகின்றனரே தவிர விசுவாசம், சாட்சிய வாழ்வு என்பன குறைவாகவே காணப்பட்டதை அவதானித்தனர்.

ஆயினும் கொழும்பு கொச்சிக்கடையில் உள்ள இத்திருத்தலத்திற்கு வருகை தரும் பக்தர்கள் இன, மத, மொழிப் பாகுபாடு இன்றித் தாகம் உள்ளவர்களாக விசுவாசத்தோடு வருகின்றனர். எனவே இவர்கள் தாகத்தைப் போக்கி விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றச்செய்ய இந்நூதனசாலை அமைக்கப்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டது. அதற்காக இத்திருத்தலத்திற்கு வருகைதரும் பக்தர்களால் தாராளமாக வழங்கப்பட்ட நிதியுதவியுடன் இந்நூதனசாலை மிக விரைவில் கட்டிமுடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சிக்கு காரணகர்த்தாவாக இருந்து இதை செவ்வனே செய்து முடித்த திருத்தல நிர்வாக இயக்குனர் அருட்பணி. இளமென்ற் ரொசைரோ அடிகளாருக்கு தூய அந்தோனியார் பக்தர்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளனர்.

## மடுத்திருப்பதியில் வீடுகளைப் பெறுவது தொடர்பாக

மடுத்திருப்பதியில் இடம்பெறும் பல்வேறு திருவிழாக்களுக்கு வீடுகளைப் பெற விரும்பும் யாத்திரிகர்கள் தங்கள் விண்ணப்பங்களைகளை பின்வருமாறு அனுப்ப வேண்டும்:

'வீட்டுக்கான விண்ணப்பம்" என்று கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். (உதாரணம் :- விட்டுக்கான விண்ணப்பம் - பெப்ரவரி 2)

தபால் அட்டைகள், தந்திகள், காசுக்கட்டளைகள் போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- ■ பெப்ரவரி 2 திருவிழாவுக்கான விண்ணப்பங்கள் 2013 ஜனவரி 2 - 2013 ஜனவரி 15 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ■ மார்ச் 10, மார்ச் 15, உயிர்ப்பு ஞாயிறு, மே 1ம் ஞாயிறு, மே 19 (நீர்கொழுப்பு திருவிழா) ஆகிய திருவிழாக்களுக்கான விண்ணப்பங்கள் 2013 ஜனவரி 2 – 2013 பெப்ரவரி 10 வரையான காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ■ யூலை 2 திருவிழாவுக்கான விண்ணப்பங்கள் 2013 மே 1 – 2013 மே 31 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ■ ஓகஸ்ட் 15 மற்றும் செப்ரம்பர் 8 திருவிழாவுக்கான விண்ணப்பங்கள் 2013 யூன் 1 – 2013 யூன் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ■ ஒக்ரோபர் திருவிழாவுக்கான (மாதத்தின் முதலாவது சனி) விண்ணப்பங்கள் 2013 யூலை 3 - 2013 யூலை 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
- ■ டிசம்பர் 8, ஜனவரி 1 திருவிழாவுக்கான விண்ணப்பங்கள் 2013 செப்பரம்பர் 10 – 2013 செப்பரம்பர் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### குறிப்பு

- வீடுகள் பெறுவதற்காக இந்த நாட்களில் மடுவுக்கு தொலைபேசி அழைப்புக்களை எடுக்க வேண்டாம்.
- இந்த நாட்களுக்கு முன்னர் எமக்கு வீடு கேட்டு கடிதம் எழுத வேண்டாம்.
- வீடுகள் சொற்பமாகவும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் உள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவும்.
- ஒவ்வொரு திருவிழாவுடனும் வீடுகளுக்கான விண்ணப்பங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.
- இப்படியானதொரு சூழ்நிலையில் அனைத்து வேண்டுகோள்களையும் நாம் நிறைவேற்ற முடியாது.
- பரிபாலகர், மடுத்திருப்பதி, மடு என்ற முகவரிக்கு அனைத்துத் தொடர்புகளைப் பேணும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

- பரிபாலகர், மடுத்திருப்பதி.

### புனித பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சகோதரர்களின்

# மேனிலை முதல்வர் இலங்கை வருகை

புனித பிரான்சிஸ்கன் மறைபரப்புச் சகோதரர்களின் மேனிலை முதல்வரான (Superior General) அருட்சகோதரர் ஜோஸ் வலேறா, உப மேனிலை முதல்வரான அருட்சகோ. ஜோர்ஜ் தொட்டில், பொதுச்சபையின் ஆலோசகரான அருட்சகோ. சவரிமுத்து அம்புறோஸ் ஆகிய மூவரும் எதிர்வரும் மாசி மாதம் 09ம் திகதியிலிருந்து 16ம் வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

இவர்கள் பெப்ரவரி மாதம் 11ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரை மாத்தளையில் உள்ள மரிய ஜோசப் அருட்சகோதரர்களின் இல்லத்தில் மாகாண சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டு புதிய மாகாணத் தலைவரை மூன்று வருடங்களுக்கு தேர்ந்தெடுக்க உள்ளார்கள்.

அருட்சகோதரர்களாகிய நாங்கள், அவர்களை எங்கள் மத்தியில் இதயபூர்வமாக வரவேற்கின்றோம். அவர்களின் வருகையானது எமக்கு ஊக்குவிப்பாக விளங்கும் என நம்புகிறோம்.



*அருட்சகோ. ஜெயராஜ் அருளானந்தன் (சி.எம்.எஸ்.எப்), செயற்குழு செயலாளர்*
*Pho. 077-7400260 bro.arulan@yhoo.com.au*

## ஆலயத்தினுள் இசை நிகழ்ச்சிகள் தொடர்பாக கொழும்பு பேராயரின் அறிவித்தல்

அண்மையில் நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு ஒளிபரப்புச் செய்யப்பட்ட நத்தார் தின நிகழ்ச்சி நீர்கொழும்பு கடற்கரைத் தெரு தூய செபஸ்தியார் ஆலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுபற்றி எனக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அதாவது இங்கு இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் நத்தார்ப் பாடல்களைப் பல பாடகர்கள் பாடியிருக்கின்றனர். அதேவேளை அப்பாடல்களுக்கு நடனங்களும் இடம்பெற்றிருக்கின்றன. இவையனைத்தும் பீடம் அமைந்துள்ள பகுதியிலேயே இடம்பெற்றது.

எனவே இதுபற்றி இறைமக்களுக்கு நான் தெரியப்படுத்துவது என்னவென்றால் இந்த நிகழ்ச்சி பற்றி எனக்கு முன்னரே அறிவிக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது என்னிடம் இதனால் பலர் குழப்பம் அடைந்துள்ளீர்கள் என நினைக்கிறேன். எனவே மிக வினையமாகவும் அன்புடனும் உங்களிடம் அந்நிகழ்வுக்காக மன்னிப்பு வேண்டுகின்றேன். அதுமட்டுமல்லாது கடற்கரைத் தெரு தூய செபஸ்தியார் ஆலய பீடத்தை அண்டிய பரிசுத்த பகுதி இப்பொழுது மீண்டும் ஆசீர்வதிக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த வேளையில் அனைத்து கத்தோலிக்க இறைமக்களுக்கும், கொழும்பு உயர் மறைமாவட்ட அருட்பணியாளர்கள் அனைவருக்கும் நான் தெரியப்படுத்துவது யாதெனில் இவ்வாறான நிகழ்ச்சிகள் இனிமேல் எக்காரணம் கொண்டும் ஆலயத்தினுள் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது. பங்கிலே வழமைபோல கறோல் கீதங்கள் கறோல் பாடற் போட்டிகள் நடத்தப்படுவதாக இருந்தால் உங்கள் பாடகர் குழாமினரும் அல்லது வெளியில் இருந்து அழைக்கப்பட்ட பாடகர்களும் பாடுவதற்கான அனுமதியை முன்கூட்டியே பெற வேண்டும். அதைத் தவிர்த்து எந்தவொரு இசை நிகழ்ச்சியும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது. இதுபற்றி என்னால் 2009ம் ஆண்டு வெளியிடப்பட்ட திருவழிபாட்டுக்கான வழிகாட்டி என்ற மடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆலயம் இறைவன் வாழும் இல்லம். நற்கருணை ஆண்டவர் குடிகொள்ளும் பரிசுத்த இடமாக அது இருக்க வேண்டும். இவ்வறிவித்தலை அனைத்து இறைமக்களும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## சகோதரர் எனும் வார்த்தைப் பிரயோகம் தொடர்பான அறிவித்தல்

'சகோதரர்' என்னும் வார்த்தைப் பிரயோகம் தொடர்பாக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் சில கத்தோலிக்க சபைகள் இயக்கங்களின் "சகோதரர்" (Brother) எனும் சொல் பொது நிகழ்வுகளில் பாவிக்கப்படுவதை பலரும் என்னிடம் முறையிட்டுள்ளனர். மேலும் அருட்தந்தை, அருட்சகோதரர், அருட்சகோதரி அல்லது தந்தை, சகோதரர் மற்றும் சகோதரி எனும் பதங்கள் வாக்குத்தத்தம் எடுத்த துறவிகள், திருநிலைப்படுத்தப்பட்டவர்கள், பெரிய குருமட மாணவர்கள் என்பேரால் மட்டுமே முறைப்படி பயன்படுத்தப்பட முடியும்.

மேலும் இப்பதங்களை பொதுநிலையினருக்கு பயன்படுத்தும்போது இது திருச்சபையில் அவருக்கு இருக்கும் பதவியையோ, பட்டத்தையோ அல்லது பணியையோ குறிப்பதில்லை என்பதை இத்தால் அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் சிறுவர் தினம்

கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் சிறுவர் தினம் இம்முறை பங்குனி மாதம் 02ஆம் திகதி 2013 சனிக்கிழமை தேவத்தை பசிலிக்காவில் கொண்டாடப்படவுள்ளதாக கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையம் அறிவித்துள்ளது.

### ஐ.நா. தமிழர்களைக் கைவிட்டது தவறானது!

## யாழ். ஆயரிடம் ஐ.நா. குழுவினர் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபை தமிழ் மக்களை இறுதி நேரத்தில் கைவிட்டமையைத் தவறு என ஏற்றுக்கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் இத்தகைய தவறுகள் இடம்பெறாது பார்த்துக்கொள்ளப்படுமென யாழ் ஆயரிடம் ஐ.நா.வினுடைய ஆசிய பிராந்திய அபிவிருத்தி நிறுவனத்தின் தெற்காசியப் பிராந்தியங்களுக்கான குழுவின் சிரேஷ்ர உறுப்பினர் கிற்ரோக்கி டோன் யாழ்ப்பாணத்தில் உறுதியளித்தார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றினை மேற்கொண்டு கடந்த 28.11.2012 அன்று யாழ் வருகை தந்திருந்த ஐ.நா. குழுவினர் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடும்போது இவ்வாறு தெரிவித்ததாக யாழ் ஆயர் தெரிவித்தார்.

## புலனாய்வு அறிக்கையிடல் நூல் வெளியீடு

அருள்திரு ரூபன்மரியாம்பிள்ளை அடிகளாரின் ஊடகவியல் சார்ந்த 10வது நூலான 'புலனாய்வு அறிக்கையிடல்' எனும் நூல் பிசப் சௌந்தரம் மீடியா செனரறில் யாழ் பல்கலைகழக ஊடகவியல் மாணவர்களுடன் அண்மையில் வெளியிடப்பட்டது. முதற் பிரதியை யாழ் பல்கலைகழக ஊடக விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா பேராசிரியர் சிவலிங்கராஜாவிடம் பெற்றுக் கொண்டார்.

## சில்லாலையில் யோசவ்வாஸ் அடிகளாருக்கு நினைவாலயம்



சில்லாலை புனித கதிரைமாதா ஆலய வளாகத்தில் அருளாளர் யோசவ்வாஸ் அடிகளாருக்கு நினைவாலயம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி அன்று மாலை 4.30 மணிக்கு யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இந்த நினைவாலயத்தை திறந்துவைத்தார்.

ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலத்தில் சில்லாலையில் யோசவ்வாஸ் அடிகளார் தங்கியிருந்து பணி செய்த இடத்தில் இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13)

# இயேசு எடுத்தாண்ட உப்பு பற்றிய உவமானத்தின் விஞ்ஞான மற்றும் வேதாகம விளக்கம்

அருட்சகோதரி றூபராணி ஜோசப்,
புனித பிரான்சிஸ்குவின் மறைபரப்பாளர் சபை, மன்னார்.

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13) எம் அன்பர் யேசு ஆற்றிய அமுத மொழியாம் மலைப்பொழிவின் இறுதிப்பகுதியில் மொழிந்த பொன் மொழியாக இவ்வசனம் அமைந்துள்ளது. விஞ்ஞானம் விண்ணையும் எட்டி அதற்குள்ளும் புகுந்து செவ்வாய்க் கிரகத்தையும் அலசி ஆராய்கின்றது. அத்துடன் எம் யுகத்தை அணு யுகமாக மாற்றி கடலின் அடியிலும் புகுந்து புவியின் மையப்பகுதியினை அதிரவைக்கும், அழிவைத்தேடும் ஆராய்ச்சிகள் ஒருபுறம். உலகத்தையே உள்ளங்கையில் அடக்கி கணனி இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்று கங்கணம் கட்டி மனுக்குலத்தை அடிமைப்படுத்தும் கணணி வலைப்பின்னல்கள் மறுபுறம். இத்தனைக்கும் மத்தியில் அன்று இயேசு கூறிய "மண்ணுலகிற்கு நீங்கள் உப்பாய் இருக்கிறீர்கள்" என்ற சொற்பதத்தை விஞ்ஞான ரீதியிலும் வேதாகம ரீதியிலும் அலசி ஆராய்வோம்.



## விஞ்ஞான ரீதியில் உப்பின் உற்பத்தி

உப்பு உற்பத்திக்கான மூலப்பொருள் கடல் நீர் ஆகும். சாதாரண கடல் நீரின் செறிவு 3 டிகிரியாக இருக்கின்றது. சூரிய வெப்பத்தினால் கடல் நீர் ஆவியாகும்போது முறையே அக்கடல் நீரின் செறிவு 10 டிகிரி, 15 டிகிரி, 20 டிகிரி, 25 டிகிரியாக உயர்த்தப்படுகின்றது. 45 நாட்களுக்குள் உப்பு நீரின் செறிவு 25 டிகிரியாக மாறும்பொழுது அக்கடல் நீரில் இருந்து உப்பு விளையும்.

## செய்முறையின் விபரம் :

1. உப்பு விளைவதற்குப் பயன்படும் பாத்திகளைத் துப்பரவு செய்தல்.
2. இயந்திரம் மூலம் கடல்நீரைப் பெற்றுக்கொள்ளல்.
3. 5 பாத்திகளினூடாக கடல் நீர் செலுத்தப்பட்டு அதன் செறிவு 25 டிகிரியாக உயர்த்தப்படுதல்.
4. விளைந்த உப்பை தலைச்சுமையின் மூலம் உப்பு மேடைக்கு கொண்டு செல்லுதல்.
5. மேடையில் குவிக்கப்படும் இந்த உப்பைப் பாதுகாக்க அவை கிடுகுகளால் மூடப்படும்.
6. சேர்க்கப்பட்ட உப்பின் ஒரு பகுதி இயந்திரத்தினால் கறி உப்புத் தூளாகவும், மறுபகுதி அயடின் சேர்க்கப்பட்ட கறி உப்பாகவும் பொதி செய்யப்படும்.
7. இறுதியில் அவைகள் தேவையான இடங்களுக்கு சந்தைப்படுத்தப்படும்.
8. ஒரு மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்ய ஏற்படும் செலவு ரூபாய் 3,700 - 4,000 ரூபாய் வரை ஆகும்.

இறைவனால் படைக்கப்பட்ட நீரின் விந்தைகளை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வு செய்த நாம் வேதாகமத்திலும் நீரின் முக்கியத்துவத்தை உற்றுநோக்குவோம்.

## வேதாகமத்தில் நீர் :

நீர் - இறைவன் எமக்கு அளித்த கொடை.


1. ஆண்டவரின் ஆவி நீர்த்திரள்மேல் அசைந்தாடிக் கொண்டிருந்தது. (தொ.நூல் 1: 2)
2. இஸ்ராயேல் மக்களுக்கு பாறையில் இருந்து பருகுவதற்கு இறைவன்தாமே நீர் கொடுத்தார் (வி.ப 17:6).
3. இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்தது (வி.ப 4:1-31).
4. இயேசுவின் திருமுழுக்கு (மத் 3:13-17)
5. நிக்கதேமுவோடு உரையாடல் - ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும், பிறந்தாலன்றி .... (யோ 3:5).
6. சமாரியப் பெண்ணோடு வாழ்வளிக்கும் தண்ணீர் பற்றிய உரையாடல். "இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி, நிலை வாழ்வு அளிக்கும்" (யோவா 4:12-14).

"ஒருவர் தண்ணீராலும், தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது.".

தண்ணீர் மூவொரு இறைவனின் மறைபொருளை எமக்கு விளக்கி நிற்கின்றது. நீரின் இரசாயனக் குறியீடு $H_2O$ ஆகும். அதாவது 2 ஐதரசன் மூலக்கூறுகளும், 1 ஒட்சிசன் மூலக்கூறும் பிரிக்கமுடியாத ஒன்றிணைந்த இரசாயனக் கலவை. திண்மம், திரவம், வாயு என்ற நிலைகட்டு மாற்றமடைவதில்லை. இம்மூன்று நிலைகளிலும் நீரானது பல வழிகளில் மாபெரும் சக்தியாக பயன்படுத்தப்படுகின்றது. இதேபோன்று தந்தை, மகன், தூய ஆவி மூவொரு இறைவனாக எம்மோடு ஒன்றிணைந்து எம் வாழ்வில் இருந்து அவர்களைப் பிரிக்க முடியாத வண்ணம் மாபெரும் வல்லமையோடு எம்மில் செயல்படுகின்றனர்.

ஐதரசன், ஒட்சிசன், மூலக்கூறுகளின் சேர்க்கையை எம் மனிதக் கண்களினால் நாம் ஒருபோதும் காண முடியாது. ஆனால் அறிவுக்கண்களினால் இதனை ஏற்று இரசாயனவியல் கற்கை நெறியை நாம் கற்கின்றோம். இதற்கு ஒத்ததாகவே கிறிஸ்தவ வாழ்வின் புகுமுக அருட்சாதனங்களில் ஒன்றாகிய திருமுழுக்கை நாம் பெறும்போது மூவொரு இறைவன் தம் அன்புப் பிள்ளைகளாக நாம் மாறுகின்றோம். தந்தை மகன், தூய ஆவியின் ஆற்றல் பெற்று 'கிறிஸ்தவம்' என்னும் மறையில் இணைக்கப்படுகின்றோம். இம்மறையில் உறுதியாக நடைபயில விசுவாசம் என்னும் கொடை எமக்கு அருளப்படுகின்றது. அத்துடன் சென்ம பாவக்கறை நீக்கப்பட்டு மூவொரு இறைவனின் உரிமைப்பிள்ளை எனும் அழியாத ஞான முத்திரையை நாம் பெற்றக்கொள்கின்றோம். இது எவராலும் அழிக்க முடியாத கிறிஸ்தவ விசுவாச சத்தியம்.

இன்றைய நவீன யுத்தத்தில் நுகர்வுக் கலாச்சாரத்தில் வாழும் எமக்கு இத்திருவருட்சாதனம் வெறும் ஆடம்பரச்சடங்காக மட்டுமே அமைந்துள்ளது. முன்னைய காலங்களில் எம் பெற்றோர் தமது பிள்ளைகள் புனிதமாக வாழவேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு தம் பிள்ளைகளுக்கு திருமுழுக்கின்போது புனிதர்களின் பெயர்களைச் சூட்டினர். இன்று எமது கத்தோலிக்க கிறிஸ்தவப் பெற்றோர்கள் எண் சாஸ்திரம் பார்த்து பிள்ளைகளுக்கு நடிகர் நடிகைகளின் பெயர்களைச் சூட்டுகின்றனர். நாகரீகம் என்ற பெயரில் குழந்தைப் பருவம் தொடங்கி அநாகரீகமான ஒழுக்கக்கேடான ஆடை, அலங்காரங்களை அணிவித்து திருமுழுக்கில் பெற்ற அருளாடையை இழந்து இறை உறவினின்று பிரிந்து உலகப் போக்கில் வாழ்வதற்குக் கற்றுக்கொடுக்கின்றனர். பிள்ளைகள் வளரும்போது நாம் எப்படியும் வாழலாம் என்னும் மனநிலைக்குத் தள்ளப்பட்டு இறைவனால் அருளப்பட்ட மனித வாழ்வின் அர்த்தத்தை இழந்து இன்று வாழ்ந்து வருகின்றனர். நாம் பிறக்கும் குடும்பம், எமது பெற்றோர், நாம் ஆணாகப் பிறப்பதா? பெண்ணாகப் பிறப்பதா? நாம் எத்தனை சகோதரர்களுடன் பிறப்பது? நாம் எந்த நாட்டில் பிறப்பது? நாம் எந்த மதத்தில் இணைவது? இவையனைத்தும் இறைவனின் திட்டத்திற்கும், வரையறைக்கும் உட்பட்டதாகவே எம் மனித வாழ்வில் அமைகின்றது. எம் வாழ்வின் ஒவ்வோர் கட்டத்திலும் நாம் இறைத்திட்டத்தின்படி வாழ்வதற்காகவே திருவருட்சாதனங்களைத் தகுந்த முறையில் பெறுகின்றோம். இத்திருவருட்சாதன வாழ்வின் உட்பொருளை உணர்ந்து வாழ்வது ஒவ்வோர் கிறிஸ்தவனினதும், கிறிஸ்தவளினதும் மாபெரும் பொறுப்பாகும்.



3 டிகிரி தண்ணீர் சூரிய வெப்பத்தினால் படிப்படியாக அதன் செறிவை 10 டிகிரியாகவும், 15 டிகிரியாகவும், 20 டிகிரியாகவும், 25 டிகிரியாகவும் 45 நாட்களிற்குள் மாற்றம் பெறுகின்றது. இப்பாத்தியின் முதற்பகுதியை அதாவது கடல்நீர் 3 டிகிரியாக இருக்கும் ஆரம்பநிலையை நாம் பெறும் திருமுழுக்குத் திருவருட்சாதனத்திற்கும் 10 டிகிரி செறிவை ஒப்புரவுத் திருவருட்சாதனத்திற்கும் 15 டிகிரி செறிவை திவ்விய நற்கருணைத் திருவருட்சாதனத்திற்கும், 20 டிகிரி செறிவை உறுதிப்பூசுதல் திருவருட்சாதன வாழ்விற்கும் ஒப்பிடலாம். இப்பாத்திகள் எம் வாழ்வில் இறைத்திட்டத்தை எமக்கு வலியுறுத்தி நிற்கின்றது. அனைத்து கடல் நீரும் உப்பாக மாறுவதில்லை. மாறாகக் கடலில் இருந்து பிரித்தெடுத்துப் பாத்திகளில் கட்டப்பட்ட நீரே உப்பாக மாறுகின்றது.

அதேபோல் எம் வாழவும் இறைத்திட்டம் என்ற வரையறைக்கு உட்பட்டதாக அமையும்போது மட்டும்தான் நாம் கிறிஸ்து கூறிய உப்பாக மாறமுடியும். எம் வாழ்வில் ஒவ்வோர் பருவத்திலும் நாம் இறைத்திட்டத்தின்படி வாழ்வதற்காகவே திருவருட்சாதனங்களை வெவ்வேறு வயதடிப்படையில் பெறுகின்றோம். எம்மைப் படைத்த இறைவன் எம் வாழ்வில் எமக்கென ஓர் திட்டத்தை வகுத்திருக்கின்றார். நாம் எந்நிலையில் இருந்தாலும் கிறிஸ்துவின் சீடத்துவ வாழ்வில் பங்குகொண்டு அவருக்குச் சாட்சியாக வாழ்வதே இம்மாபெரும் இறைத்திட்டம். இத்திட்டத்தை நாம் முழுமையாக அறிந்துகொள்ள உபபு நீர் 25 டிகிரி செறிவாக மாறும் நிலையை அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

3 டிகிரி செறிவில் வாழப்பழகிய கடல்வாழ் உயிரினங்கள், கடல் நீரின் செறிவு 25 டிகிரியாக மாறும்போது அவை இறக்கின்றன. இதேபோன்று திருவருட்சாதனங்களைப் பெறும் நாமும் எம்மில் இருக்கும் பலவீனங்களுக்கு இறந்து இறைவாழ்விற்குள் எம் வாழ்வை ஆழப்படுத்த வேண்டும். கடல் நீரின் செறிவு 25 டிகிரியாக மாறும்போது மட்டும் கடலில் வாழும் "அல்கீன்" என்னும் நுண்ணங்கி இறந்து இக்கடல் நீரின் நிறத்தை அதன் இரத்தத்தால் இளம் செந்நிறமாக மாற்றுகின்றது. இதேபோல் இறைவனின் திட்டத்தை நாம் முழுமையாக அறிய 'நான்' என்ற தன்னலத்திற்கு இறந்து கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் முற்றும் முழுதாகக் கழுவப்பட்டு உண்மையான மனமாற்றம் அடைந்து எமது திருவருட்சாதன வாழ்விற்கு பிரமாணிக்கமாக இருக்கும்போது மட்டுமே எம்மில் கிறிஸ்து எனும் தூய்மையான, செறிவான, உப்பை இறைவன் விளையச் செய்வார்.

## கடல் நீரில் இருந்து பெறப்படும் பிற உப்புக்களும் பயன்பாடுகளும் :

1. 7-14 டிகிரி செறிவில் கல்சியம் காபனேற் ($CaCO_3$) என்னும் உப்பு படியும். இது வயிற்றுக் கோளாறுகளிற்குப் பயன்படும்.
2. 14-22.5 டிகிரி செறிவில் கல்சியம் சல்பேற் ($CaCO_3$) என்னும் உப்பு படியும். இது சீமெந்து தயாரிப்பதற்காகப் பயன்படும்.
3. 23-28 டிகிரி செறிவில் சோடியம் குளோரைட் ($NaCl$) என்னும் கறியுப்பு படியும்.
4. 29 டிகிரி செறிவில் மக்னீசியம் சல்பேற் ($MgSO_4$) என்னும் உப்பு படியும். இது வெடி மருந்தாகப் பயன்படும்.

கடல் நீரின் வல்லமையை உணர்ந்த யேசு, உலகில் எவ்வளவோ பொருட்கள் இருந்தபோதும் உப்பிற்கு எமது வாழ்க்கையை எடுத்துக் கூறியதன் பூரண விளககதையும், அர்த்தத்தையும் நாம் எம் மனதில் பதித்து அதன்படி வாழ வேண்டும்.


இத்தகைய வாழ்விற்கு எமக்கு முன் உதாரணமாக விளங்குபவர்கள்தான் புனிதர்கள். இன்று புனிதர்கள் தேவையில்லை, மரியன்னையின் பக்தி தேவையில்லை, எனக்கூறும் பிரிவினைவாதிகள் கிறிஸ்து கூறிய உப்பின் உவமையை உணராதவர்களாகவே இருந்து பிரிவினைகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தி, கிறிஸ்தவத்தையும், கிறிஸ்துவையும் துண்புறுத்திக்கொண்டிருக்கின்றனர். இதை உணராத கத்தோலிக்கர் எத்தனை பேர் உறுதியான விசுவாசம் அற்றவர்களாக பிரிவினைச் சபைக்குள் இணைத்துகொள்கிறார்கள். வேறு சிலர் போன போக்கில் வாழ்ந்து தம் வாழ்வை அழித்துக்கொள்கின்றனர்.

புனித மரிய கொறற்றி, புனித டொன் பொஸ்கோ, புனித டோமினிக் சாவியோ, புனித அந்தோனியார், புனித சின்னத் திரேசம்மாள் போன்ற பல புனிதர்கள் தமது சிறு பராயத்திலேயே இறைவனின் திட்டத்திற்கு அடிபணிந்து உப்பாக மாற்றமடைந்து எமக்கு முன் உதாரணமாக விளங்குகின்றார்கள். அவர்கள் மேல் நாம் கொள்ளும் பக்தியினால் எம்மையும் புனிதர்களாக்க எமக்காக மூவொரு இறைவனிடம் பரிந்து பேசுகின்றனர். நாமும் அவர்களைப் போன்று இயேசு காட்டிய சிலுவை வழியில் உறுதியுடன் நடக்க எம்மை ஊக்குவிக்கின்றார்கள். எத்தனை துன்பங்கள் எம்மைச் சூழ்ந்தாலும் "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்" என்று எமக்குக் கற்றுக்கொடுத்து உறுதியுடன் வாழ எம் விசுவாச வாழ்விற்கு உரம் இடுகின்றார்கள். உப்பு உலகில் வாழும் அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்படும் பொருளாகும். "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது பழமொழி.

1. உப்பு வழிபாடுகளில் தூய பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது.
2. உப்பு தூய்மையானது.
3. உப்பு எப்போதும் மற்றைய பொருட்களைப் பாதுகாக்கின்றது.
4. உப்பு சுவையூட்டுகின்றது.
5. நீரில் எளிதாகக் கரைந்து தன்னை இழக்கின்றது.

"நீங்கள் உலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்" என்ற வார்த்தை மிகவும் ஆழமானதும், செறிவு பொருந்திய வார்த்தையுமாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும், தன்னகத்தே சொல்லிலும், செயலிலும், தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். இன்று பாவச்சேற்றில் வாழ்பவர்களுக்கு நாம் செறிவான உப்பாக மாறி அவர்களின் வாழ்வையும் தூய்மையாக்கும் பாரிய அர்ப்பண வாழ்விற்கு எம்மை அழைக்கின்றது. எம் வாழ்வில் எச்சூழ்நிலையிலும் உப்பைப் போன்று தூய்மையான திடமனம் உள்ளவர்களாக மூவொரு இறைவனோடு ஒன்றிணைந்து வாழ வேண்டும். மனுக்குலத்தின் மீட்பிற்காக எம்மைத் தாழ்த்தி எம் வாழ்வைத் தியாகம் செய்ய வேண்டும். உப்பானது மீண்டும் நீரில் கரைவது போன்று இம்மையிலும் மறுமையிலும் எம்மைப் படைத்த மூவொரு இறைவனில் சங்கமமாகுவோம்.

"ஜாதி மதபேதமெல்லாம் அலகையின் நிறங்கள்
நற்செய்தி வாழ்க்கைதானே இயேசுவின் நிஜங்கள்
ஒன்றுபட்டு வாழும்போது இயேசு வாழ்கின்றார்.
பிளவுபட்டு வீழும்போது இயேசு சாகின்றார்.
இறையரசின் கனவுகளும் மலர வேண்டுமே
இனிமைதரும் புதுவுலகம் விடிய வேண்டுமே
உப்பாகி உவர்ப்பாகி எம் வாழ்விலே
இறையரசை மலர வைப்போம் இம்மண்ணிலே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

### முதல் இந்தியப் பொதுநிலையினர்

# தேவசகாயம் பிள்ளைக்கு முத்திப்பேறுபெற்ற நிலை!



தென் இந்தியாவின் பொதுநிலையினரின் முதல் மறைசாட்சி இறை ஊழியர் தேவசகாயம் கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி அருளாளராக (முத்திப்பேறுபெற்றவராக) அறிவிக்கப்பட்டார்.

தமிழ் நாட்டின் நாகர்கோவில் கார்மேல் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் இவர் முத்திபேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார். திருப்பீட புனிதர் பட்டமளிப்புப் பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த முத்திப்பெற்ற நிலை அறிவிப்புத் திருப்பலியில் இந்தியாவின் அனைத்துக் கர்தினால்கள், நாடு முழுவதிலிருந்தும் 50க்கும் அதிகமான அருட்பணியாளர்கள் 1500க்கும் அதிகமான அருட்சகோதரிகள் உட்பட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுநிலையினர் கலந்துகொண்டதாக கோட்டாறு ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு குறித்து ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் ஆண்டகை மேலும் கூறுகையில், நம்பிக்கை ஆண்டின் இந்த அறிவிப்பு அருள் கொடை என்று கூறினார். 1712ம் ஆண்டு ஏப்ரல் 23ம் திகதி கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தில் இந்துக் குடும்பத்தில் பிறந்த நீலகண்டன்பிள்ளை திருவிதாங்கூர் அரசவையில் முக்கிய பணியாற்றி வந்தார். கிறிஸ்தவராக மனம் மாறியதால் பல கொடுந் துன்பங்களுக்கு பின்னர் 1752ம் ஆண்டு ஜனவரி 14ம் நாளன்று ஆரல்வாய் மொழிகாற்றடி மலையில் மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார்.

## 2012ல் 20 இலட்சம் திருப்பயணிகள் திருத்தந்தையைக் கண்டனர்

கடந்த 2012ம் ஆண்டு திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கலந்துகொண்ட நிகழ்வுகளில் 20 இலட்சம் திருப்பயணிகள் அவரைக் கண்டனர் என்ற தகவலை திருத்தந்தையின் இல்ல அலுவலகம் வெளியிட்டுள்ளது.

திருத்தந்தையின் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் 23, 51, 200 பேர் என்றும், இவர்களில் 12,56,000 பேர் திருத்தந்தை வழங்கிய மூவேளை செப உரைகளிலும், 4,47,000 பேர் திருத்தந்தை வழங்கிய புதன் பொது மறைபோதகங்களிலும் கலந்துகொண்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

திருத்தந்தை தலைமையேற்று நடத்திய திருவழிபாடுகளில் கலந்துகொண்டோர் 5,01,000 என்றும், ஏனையக் கூட்டங்களில் கலந்துகொண்டோர் 1,46,800 பேர் என்றும் கூறப்படுகிறது.

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் தலைமைப் பொறுப்பேற்ற 2005ம் ஆண்டிலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஒரு கணக்கெடுப்பின்படி அவரது நிகழ்வுகளில் கடந்த எட்டு ஆண்டுகள் பங்கேற்றோரின் எண்ணிக்கை 2 கோடியே 5 இலட்சத்து 44,970 பேர் என்ற விவரம் வத்திக்கான் நாளிதழான L'Osservatore Rpmanoவில் வெளியாகியுள்ளது.

## ஓர் அருட்சகோதரியின் நூல் யப்பானில் அமோக வரவேற்பு



ஜப்பானில் 65 ஆண்டுகள் மறைப்பணியாற்றிய பின்னர் 96 வயதாகும் ஓர் அருள்சகோதரி எழுதியுள்ள நூல், அந்நாட்டில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது என்று ஆசியச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

"புன்சிரிப்பு மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது" என்ற தலைப்பில் அருள்சகோதரி Jesanne Bosse எழுதியுள்ள நூல், நற்செய்தியின் அடிப்படையில் வாழும் முறையைச் செம்மைப்படுத்துவதற்கு உதவி வருகிறது.

இதுவரை நான்கு பதிப்புகளில் 19 ஆயிரம் நூல்கள் விற்பனையாகியுள்ளன. மேலும், ஜப்பானில் அதிக அளவில் விற்பனையாகும் Asahi Shimbun என்ற தினத்தாளும் இந்த நூல் குறித்து செய்திகளை வெளியிட்டுள்ளது என ஆசியச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

உலகில் பொருளாதார வளமிக்க நாடுகளில் மூன்றாவதாக விளங்கும் ஜப்பானில் பிறப்பு விகிதம் மிகவும் குறைவு அதேநேரம் தற்கொலைகள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'அப்பா' அனுபவம்


அருட்சகோதரி மேரி றுவினா, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.



ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 'தந்தை பேசுகிறார்' என்ற ஒரு புத்தகத்தைப் படித்ததிலிருந்து 'அப்பா' அனுபவத்தைப் பெற்றுக் கொண்டேன். 'அப்பா' என்று அன்போடு அவரை அழைப்பதைத்தான். 'தந்தை' விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். இதனால் இறைதந்தையின் மக்கள் எல்லோரும் 'அப்பா' என்று அழைக்க அவருடைய ஆசீரைப்பெற நான் விரும்புகிறேன். எனவே நான் பெற்றுக்கொண்ட 'அப்பா' அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பி இக்கட்டுரையை எழுத முன் வந்துள்ளேன்.

'அப்பா' என்று அழைத்த போதெல்லாம் என் அருகிலிருந்து எல்லாவித பயங்கள், அச்சங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும் அவர் விடுவித்துக்கொண்டிருக்கிறார். சிறப்புடன் பணிகளைச் செய்வதற்கு வேண்டிய அறிவுரைகளையும், சக்தியையும் திடத்தையும் தந்து வழிநடத்திவருகிறார். உள்ளத்திற்கு மகிழ்ச்சியை, விடுதலையைத் தந்துகொண்டிருக்கின்றார். அவர் என்னோடு என் அருகில் இருப்பதை உணர்கின்றேன்.

எனவே 'அப்பா' என்ற சொல் உள்ளத்தைக் குளிரவைக்கும் இனிமைமிகு சொல்லாகும். அருகில் இருப்பவராக, அன்பு செய்பவராக மகிழ்ச்சியைத் தருபவராக இருக்கிறார். 'தந்தை' என்று சொல்லும்பொழுது தொலைவில் இருப்பவராக, பார்க்க முடியாதவராக அனுபவிக்க முடியாதவராக, உள்ளத்திற்குத் தாக்கத்தைத் தரக்கூடியதாக தென்படவில்லை. வி.ப.3: 7 – 8ல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்ணால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், பாலும் தேனும் பொழியும் நல்லதோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்." இறங்கி வந்த இறைவன், 'அப்பா' எம் மத்தியில், எம் உள்ளத்தில் எம்மோடு இருக்கிறார். வி.ப. 3: 11-12இல் மோசே, "பாரவோனிடம் செல்வதற்கும், இஸ்ராயேல் மக்களை அழைத்துப் போவதற்கும் நான் யார்?" என்று கூறியதற்கு 'அப்பா'வின் பதில் "நான் உன்னோடு இருப்பேன்." என்பதாகும்.





"நீ இஸ்ராயேல் மக்களிடம் சொல்ல வேண்டியது "இருக்கிறவராக, இருக்கின்றவர் நானே என்பவர் என்னை உங்களிடம் அனுப்பினார்". (வி.ப. 3:14) மோசே "எனக்குப் பேசத் தெரியாது வாய் திக்கும் நாவும் குழறும்" (வி.ப. 4:12) என்று கூறியதற்கு 'அப்பா'வின் பதில், "நான் உன் நாவில் இருப்பேன். நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன்." என்பதாகும். "அஞ்சாதே, உன்னை விடுவிக்க உன்னோடு இருக்கிறேன்" (எரே 1:8) என்கிறார்.

இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய இறைத்தந்தை அப்பா இன்றும் புதிய இஸ்ராயேல் மக்களாகிய எம்மோடு எமது அருகிலிருந்து வழிநடத்தி வருகிறார் என்பதை நாம் மறுக்க முடியாது. அப்பாவை பழைய ஏற்பாட்டோடு மறந்து விடுகிறோம். இருக்கின்றவராக அவர் எப்போதும் இருக்கின்றார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

'அப்பா' என்றால் அருகில் இருப்பவர், அரவணைப்பவர் அன்புள்ளம் கொண்டவர், மன்னிப்பவர், பிள்ளைகளின் தேவையை அறிந்து நல்லதெனக் காண்பவற்றைக் கொடுப்பவர், நல்வழிப்படுத்துபவர், நல்லறிவு புகட்டுபவர், என்றும் மாறாதவர் சினங்கொள்ளத் தாமதிப்பவர், அளவற்ற நன்மைத்தனமுடையவர், தேடிவருபவர், தேற்றுகிறவர், பிள்ளைகள் தன்னை அறியவேண்டும், அன்பு செய்யவேண்டும் என்று விரும்புபவர், தனது கட்டளைகளின்படி ஒழுகவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்.

இறைத்தந்தை அப்பாவின் பண்புகளை வர்ணிக்க முடியாது. இவ்வுலகத் தந்தையை நாம் பார்க்கும்போது மாறக்கூடியவர், நன்மை செய்யத் தாமதிப்பவர், சினங்கொள்பவர், தண்டிப்பவர், இப்படியான பல குணவேறுபாடுகளை உடையவராக இருக்கிறதை நாம் கண்ணால் காண்கின்றோம், அனுபவிக்கின்றோம்.

ஆனால் இயேசு நற்செய்தியில் 'அப்பா' எப்படிப்பட்ட பண்புகளை உடையவரென்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். மத். 5:48இல் "உங்கள் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள். 'அப்பா'வைப்போல் பிள்ளைகளும் இருக்க வேண்டுமென்று யேசு கூறுகிறார். மத். 6ஆம் அதிகாரம் முழுவதும் 'அப்பா'வின் பண்பை எடுத்துக்காட்டுகிறார். "தருமம் செய்யும்பொழுது வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும், மறைவாயுள்ளதைக் காணும் 'அப்பா' உங்களுக்குக் கைமாறு அளிப்பார். செபிக்கும்போது அப்பா தந்தையே என அழைக்கக் கற்றுக்கொடுக்கிறார். மனிதர் செய்யும் குற்றங்களை மன்னிப்பீர்களாகில் உங்கள் தந்தையும் உங்களை மன்னிப்பார்" (மத். 12:50) "அப்பா"வின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்தான் என் தாயும் சகோதரரும் என்று யேசு கூறுகிறார். லூக் 15: 11-32இல் காணாமற்போன மகன் உவமையில் 'அப்பா'விடம் விளங்குகிற சிறப்புமிக்க பண்புகளை தெளிவாக ஆழமாக எடுத்துக்காட்டுகிறார். இயேசு சிலுவையில் தொங்கியபொழுதும் "அப்பா, தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என்று பரிந்துபேசுகிறார்.



யோவான் 6:57இல் "வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன்." என்று கூறப்படுகின்றது. எனக்கு அருகிலிருந்து வாழ்வு கொடுப்பவர், வாழ வைப்பவர் 'அப்பா' என்பதை யேசு தெளிவாகக் காட்டுகிறார். "நான் கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல, என்னை அனுப்பிய 'அப்பா' அவருடையது" (யோவான் 7:16) என்று வெளிப்படுத்துகிறார். யோவான் 16:32இல் "என்னைத் தனியே விட்டுவிடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை 'அப்பா' என்னோடு எனது அருகில் இருக்கிறார்" என்று சுட்டிக்காட்டுகிறார். மாற். 10:18இல் "கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் ஒருவருமில்லை" என்று உள்ளது. நல்லவர், நன்மைத்தனம் நிறைந்தவர், 'அப்பா' ஒருவர்தான். இப்படியே நற்செய்தி முழுவதையும் புரட்டிப்பார்க்கும்பொழுது 'அப்பா'வின் அனுபவத்தைப்பெற முடியும், அப்பாவைப்போல் வாழலாம், வாழ்வைப் பெறலாம், மற்றவர்களையும் வாழவைக்கலாம் என்பது உறுதி. "அப்பா எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" (தி.பா.34:8).

## சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்தநாள்

இந்திய ஆன்மீகத் துறவி சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்தநாள் இவ்வாண்டு (2013) ஜனவரி 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது.

1863ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் தேதி கொல்கத்தாவில் பிறந்த சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தத்துவங்களை அதிலும் குறிப்பாக வேதாந்த சிந்தனைகளை மேற்குலகுக்கு கொண்டு சென்ற முதன்மையானவர்களில் ஒருவராகப் பார்க்கப்படுகிறார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் சிக்காகோவில் 1893ம் ஆண்டு நடைபெற்ற உலக சமயப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை இன்றளவும் பெருமையாகப் பேசப்படுகிறது.

இராமக்கிருஷ்ண பரஹம்ஷரின் சீடரான விவேகானந்தர் தனது குருவின் பெயரில் கல்வி, மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக இராமகிருஷ்ண மிஷனை நிறுவினார். கிறிஸ்தவ மதப்பாணியில் அது இறைத் தொண்டு மற்றும் மக்கள் தொண்டை ஆற்றி வருகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல தலைவர்கள் விவேகானந்தரின் பேச்சாலும் எழுத்தாலும் கவரப்பட்டதாகக் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 16.

மரியாதை!

ஜேர்மனியில் கிட்லறின் சர்வாதிகார ஆட்சி இடம்பெற்றுக்கொண்டிருந்த காலம் அது. ஒரு தடவை கிட்லர் மாறுவேடத்தில் சினிமா பார்க்கச் சென்றிருந்தான். திரையரங்கில் திரைப்படம் முடிந்ததும் அவனது உருவப்படம் தோன்றும்போது அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தவேண்டும் என்ற எழுதப்படாத சட்டம் இருந்தது. மாறுவேடத்தில் இருந்த கிட்லர் மட்டும் எழுந்துநின்று வணக்கம் செலுத்தவில்லை. அருகில் இருந்தவன் எழுந்து நின்று வணக்கம் செலுத்தியபடி கிட்லர் என்று தெரியாமல் மாறுவேடத்தில் இருந்த கிட்லறிடம், "நண்பா, அமர்ந்திருந்து அவனை அவமரியாதை செய்ய ஆசைதான். ஆனால், வெளிப்படையாக அப்படிச் செய்தால் என் தலை போய்விடுமே! அதனால்தான், நீ அமர்ந்திருந்து செய்யும் அவமரியாதையை நான் எழுந்துநின்றே செய்கிறேன்" என்றானாம்.

**"இராணுவத் தலையீடு ஏன்?"**

"அபிவிருத்தியின் அடையாளங்களைவிட போரின் வடுக்கள் பெரிதாய் உள்ளன" என ஐக்கிய நாடுகள் அதிகாரிகளுடனான சந்திப்பில் யாழ். ஆயர் எடுத்துரைத்ததாக வலம்புரி 18.09.2012இல் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது. மேலும், "நாட்டில் யுத்தம் ஏற்படக் காரணமாக இருந்தது எது என்பதை ஆராய்வதை விடுத்து அபிவிருத்தி செய்தால் மட்டும் போதும் என்ற எண்ணப்பாட்டுடன் அரசாங்கம் செயற்படுகின்றது. யுத்த காலத்தில் இறந்தவர்களுக்காக அஞ்சலிகூட செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்" என யாழ். ஆயர் கவலையோடு தெரிவித்துள்ளார். "வடக்கில் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது. மக்களை ஒன்றுதிரட்டிக் கூட்டங்கள் நடத்துவதற்குக்கூட அனுமதியில்லை. வடக்கில் தமிழ் மக்களின் பேச்சுச் சுதந்திரத்திற்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டைகள் ஏற்படுத்தப்படுகின்றன" என யாழ். ஆயர் பிரான்ஸ் தூதுவரிடம் 09.01.2013 அன்று காலை 10.30 மணிக்கு நடந்த சந்திப்பில் கூறியுள்ளதாக உதயன் பத்திரிகை "வடக்கில் தமிழர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மறுப்பு" என்ற தலைப்பில் 10.01.2013 அன்று செய்தி வெளியிட்டிருந்தது.

"சிவில் நிர்வாக விடயத்தில் இராணுவத் தலையீடு ஏன்?' என யாழ். வந்த பிரான்சுத் தூதுவர் கேள்வி" என உதயன் பத்திரிகையில் தலைப்புச்செய்தி வெளியிடப்பட்டிருந்ததும், "யாழ். பல்கலை மாணவரின் விவரம் - திரட்டுகிறது இராணுவம்" என்ற தலைப்பில் இதேநாளில் 10.01.2013அன்று வெளியிடப்பட்ட செய்தியும் யாழ். ஆயரின் கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதாகவே தெரிகிறது.

**ஆயர்களின் வடபகுதி வருகை**

இவை இவ்வாறு இருக்க, இலங்கை கத்தோலிக்க ஆயர்கள், போரின் பின்னரான காலத்தின் கள நிலமைகளை நேரில் கண்டறியும் நோக்கில் நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு இவ்வாண்டு தைமாதம் 08, 09, 10, 11ஆம் திகதிகளில் வடக்கிற்கு வந்திருந்தார்கள். முதலில் மன்னார் சென்று அங்குள்ள நிலமைகளை ஆராய்ந்துவிட்டு முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கும் பயணம் செய்து மக்களுடனான சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார்கள்.

**"அவர்கள் கண்கள் திறந்தனவா?"**

இச்சந்திப்புக்களின் வழியாக எம்மாவு சீடர்களின் பயணத்தில், "அப்போது அவர்கள் கண்கள் திறந்தன" (லூக்கா24:31) என்பது போன்ற ஓர் அனுபவம் குறிப்பாக நம் தென்பகுதி ஆயர்களுக்கு போரின்பின் வன்னிப் பகுதியைப் பார்த்தபின்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றுதான் கூறவேண்டும்.

அவ்வாறெனில், "இத்தனை நாள்களும் அவர்கள், கண்களை, மூடிக்கொண்டா இருந்தார்கள்?," அல்லது "அவர்கள் கண்கள், மூடப்பட்டா இருந்தன?" என யாரும் கேட்கத் துணியலாம். மேலும், "சரி, இப்போதாவது திறந்திருக்கிறது: இப்போது திறந்த கண்கள், இனி எப்போது மீண்டும் மூடிக்கொள்ளும்!" என்பவை போன்ற ஆதங்கங்கள் நிறைந்த கேள்விகள் இயல்பாக எழுவது புரிகிறது. அவற்றுக்கான பதில்களை 'அவன்தான்' அறிவான்!

**கொஞ்சம் காரமான கலந்துரையாடல்தானாம்!**

ஆயர்களுடன் நடந்த கலந்துரையாடல் மன்னாரில் 'சூடு பிடித்ததாகத்தான்'! சொல்லுகிறார்கள். "பிடிக்கத்தானே வேண்டும்! நாங்கள் இங்கு செத்து மடிந்துகொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் அரசின் தப்புத் தாளங்களுக்கு ஏற்றால்போல நடந்துகொண்டதையும் அறிக்கை விடுத்ததையும் நாங்கள் எப்படி மறப்பது?" என்று இவர்கள் வருகை குறித்துப் பேசிக்கொண்டிருந்த ஒருவர் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. மன்னாரில் இடம்பெற்ற மேற்சொன்ன கலந்துரையாடலில் இக்கட்டுரை ஆசிரியர் கலந்துகொள்ளவில்லை. அதனால், எத்தனை பாகைச் சூட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது என்பதை துல்லியமாகக் கணிக்க முடியவில்லை.

எனினும், கிளிநொச்சியில் நடந்த கலந்துரையாடலில் ஏனைய அருள்பணியாளர்களோடு இக்கட்டுரை ஆசிரியருக்கும் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. ஆர்ப்பாட்டம் இல்லாமல் காத்திரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன என்றுதான் சொல்லவேண்டும். இக்கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கிய யாழ். ஆயர் இன்னும் கொஞ்ச நேரத்தை ஒதுக்கியிருந்தால் இன்னும் காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்த்திருக்கலாம்.

குறிப்பாக, கிளிநொச்சியில் இடம்பெற்ற பொதுநிலையினர் - பொதுமக்கள் ஆகியோருடனான கலந்துரையாடலில் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு, இராணுவ மயமாக்கலை நிறுத்துதல், சிவில் நிர்வாகத்தை உருவாக்குதல் போன்ற கருத்துக்கள் தெளிவாக ஆயர்களிடத்தில் முன்வைக்கப்பட்டன. பொதுநிலையினரின் கருத்துக்கள் ஆயர்களினால் கூர்ந்து நோக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறுநாள் ஆயர்களைச் சந்தித்தபோது உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

**இராணுவத்தின் நில ஆதிக்க ஆக்கிரமிப்பு**

முல்லைத்தீவுப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய ஆயர்களுடன் மறுநாள் கிளிநொச்சி பங்குப் பணிமனையில் அருள்பணியாளர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. வடபகுதியில் வெளிப்பார்வைக்கு 'சிவில்' கட்டமைப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், உண்மையில், இராணுவ ஆட்சிதான் நடக்கிறது என்பது பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக் கூறப்பட்டது. நில ஆக்கிரமிப்பினால் தம் சொந்த கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்குச் சென்று வாழமுடியாமல் இருக்கும் துர்ப்பாக்கிய நிலமைகள் சுட்டிக்காட்டப்பட்டன. உதாரணமாக யாழ். வலிகாமம் பிரதேச செயலர் பிரிவில் இருபத்திநான்கு (24) கிராம சேவையாளர் பிரிவுகள், முல்லைத்தீவு கேப்பாப்புலவு கிராமம் போன்றவை இன்னமும் இராணுவப் பிடியில் இருப்பது மட்டுமல்லாது இக்குடியிருப்பு இடங்களில் நிரந்தர இராணுவ படை முகாம்கள் அமைக்கப்படுவதும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

வடபகுதியின் வெற்று நிலங்களில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் போன்றவை ஆயர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன. மேலும் மக்களின் அன்றாட அலுவல்களில் இராணுவத்தின் அத்துமீறல்கள் மிகமோசமாக அதிகரித்துவிட்ட நிலை, பாடசாலைகள், ஏனைய அலுவலகங்களில் இராணுவத்தின் அத்துமீறிய தலையீடு உதாரணங்களுடன் முன்வைக்கப்பட்டன.

**பொறுப்புக்கூறல் வேண்டும்**

இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள், போரின்போது கைதுசெய்யப்பட்டுக் காணாமல் போனவர்கள், சிறைகளில் உள்ளவர்களின் விபரம் பற்றிய பொறுப்புக்கூறல் இன்னமும் வெளிப்படுத்தப் படாதவைகளாகவே உள்ளன. அருள்பணியாளர்களான பிரான்சிஸ் யோசப், ஜிம்பிறவுண் போன்றவர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்பவை பற்றிய தெளிவுகள் வேண்டும் என்பதும் எடுத்துக் கூறப்பட்டன.

**துன்புறும் மக்களின் குரலாக மன்னார் ஆயர்**

இறுதிப் போரில் 'பூச்சிய இழப்பு' (Zero Casualty) என அரசின் பொய்யான பிரச்சாரத்தை உலக நாடுகள் ஒரு நேரத்தில் நம்பின. ஆனால், இன்று இறுதிப்போரில் இறந்துபோன அல்லது காணாமல்போனவர்கள் என மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் தெரிவிக்கப்பட்ட கருத்தை படிப்படியாக ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகி வருகிறது. துன்புறும் தமிழ் மக்களின் குரலாக மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை விளங்குவது (ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அந்நேரத்தில் அங்கு பிரசன்னமாக இல்லாதபோதும்) ஏனைய ஆயர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

**அரசியல் தீர்வு இன்றியமையாதது**

மேலும் இனப்பிரச்சனைக்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்படாமல், அவற்றைத் தீர்க்காமல் அரசு அபிவிருத்தி வேலைத்திட்டங்களோடு இப்பிரச்சனைக்கு முடிவுகாண நினைக்கிறது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அபிவிருத்தி வேலைத்திட்டங்களோடு நின்றுவிடாமல் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முதன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டது.

'நாங்கள் வென்றவர்கள்', 'தமிழர்கள் தோற்றுப்போனவர்கள்' (Victor and Vanquished Mentality) என்ற மனநிலையைக் கைவிட்டு எல்லா மக்களையும் சமத்துவமாய் நோக்குகின்ற பார்வை அரசுக்கு இருக்கவேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

**தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர்கள்**

தமிழர்கள், தனித்துவமான ஒரு தேசிய இனத்தவர். தங்களுக்கென்று கலை, கலாசார, பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டு வாழ்பவர்கள். தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்வடையாளத்தை அழிக்க தற்போதைய அரசு பலதரப்பட்ட இன அடையாள அழிப்பினை மேற்கொள்கிறது. அதன் வெளிப்பாடுதான் இராணுவமயமாக்கம், நில ஆக்கிரமிப்பு போன்றவையாகும் என எடுத்தியம்பப்பட்டது.

**நேருக்கு நேர்!**

இக்கட்டுரை ஆசிரியரால் கருதினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையிடம் அவரால் வெளியிடப்படும் செய்திக் குறிப்புக்கள் பற்றி விசனம் தெரிவிக்கப்பட்டது. கருதினால் அவர்கள் இரத்தினபுரி ஆயராக இருந்தபோது சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் உழைத்து வருபவர் போலத் தென்பட்டார். ஆனால், தற்போது கருதினாலின் கருத்துக்கள் தமிழர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளிக்கின்றன. உண்மையைக் கூறவேண்டும், நீதி நிலைநாட்டப் பாடுபட உழைக்க வேண்டும் என நேருக்கு நேராக அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**தனி மறைமாவட்டக் கோரிக்கை**

வன்னிப் பிரதேசமானது மறைமாவட்டமாக வேண்டிய மேய்ப்புப்பணித் தேவை இருப்பது அழுத்தம் திருத்தமாக ஆயர்களிடத்தில் முன்வைக்கப்பட்டது. போரின் பின்னரான வன்னி மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி மேம்படுத்துவதற்கும் அவர்களுக்கு உரித்தான மேய்ப்புப்பணி அலுவல்களை முறையாக முன்னெடுப்பதற்கும் நாளடைவில் வன்னிப் பிரதேசமானது மறைமாவட்டமாக வேண்டிய அவசியம் பொதுநிலை அவையினராலும் திருநிலை அவையினராலும் எடுத்துக்கூறப்பட்டது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## புனித ஸ்கொலஸ்திக்கா

துறவினி – (கி.பி. 480 - 547)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

இத்தாலியில் செல்வந்தர்களான பெற்றோருக்கு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தவர்கள் ஸ்கொலஸ்திக்காவும் அவர் சகோதரர் பெனடிக்டும்.

இளவயதிலிருந்தே இருவரும் பெற்றோரின் செல்வங்களை குப்பையென மதித்து வந்தனர். இச்சூழலில், பெனடிக்ட் முதலில் சுபியாக்கோவுக்கும், அங்கிருந்து மோன்டே காசினோவுக்கும் சென்றபோது, பெனடிக்ட் தொடங்கிய துறவு மடத்திற்குச் சற்று அப்பால் ஸ்கொலஸ்திக்காவும் ஒரு மடத்தை கட்டி முடித்தார். இவரோடு வாழ்ந்த

தயாரித்த துறவு வாழ்வு ஒழுங்குகளையே பின்பற்றினர்.

ஆண்டுக்கு ஒருமுறை தவக்காலம் தொடங்கும்முன் இரட்டைப்பிள்ளைகள் ஆன்மீகம் பற்றிப் பேசிப் பரவசம் அடைய ஒன்றாக வந்து சந்திப்பது வழக்கம். அவர்களின் கடைசி சந்திப்பைப் பற்றிப் புனித பெரிய கிரகரி அழகாக விபரிக்கின்றார். "சந்திப்பு முடிந்தபின் மாலை நேரமாகி விட்டதென்று தங்கையிடம் விடைபெற முயல்கிறார். பெனடிக்ட். தமது இறுதி நேரம் அண்மையில் இருக்கிறது என்பதை உணர்ந்த ஸ்கொலஸ்திக்கா "இரவு முழுவதும் தங்குங்கள், ஆசைதீர

காரியங்களைப் பற்றிப் பேசி மகிழ்வோம்" என்று அண்ணனிடம் கூறுகின்றார். அண்ணனோ, "இது நம் சபை ஒழுங்குக்கு எதிரானது" என்று சொல்லித் தம் துறவிகளுடன் விடைபெற முயல்கின்றார். அண்ணனை வற்புறுத்துவதில் இனிப் பயனில்லை என்று முடிவு செய்து இறைவனிடம், மிக உருக்கமாக மன்றாடுகின்றார். உடனே இடிமின்னலுடன் கூடிய பெரு மழை பெய்யத் தொடங்கியது. பெனடிக்ட் புறப்பட முடியாத நிலையில், "சகோதரியே, என்ன செய்து விட்டாய்? இறைவன் உன்னை மன்னிக்கட்டும்" என்றார். "நான் உங்களிடம் ஒரு விருப்பத்தைத் தெரிவித்தேன், நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை அதே விருப்பத்தை, எல்லாம் வல்லவரிடம் சமர்ப்பித்தேன் என் மன்றாட்டும் கேட்கப்பட்டது." என்று பதில் உரைத்தார். ஸ்கொலஸ்திக்கா.

மறுநாள் காலையில் பெனடிக்ட் தம் தோழர்களுடன் விடைபெற்றுச் சென்றார். மூன்று நாட்கள் உருண்டோடின. பெனடிக்ட் தம் மடத்து ஆலயத்தில் செபித்துக்கொண்டிருந்தார். அவ்வேளையில் தம் தங்கையின் ஆன்மா வெண்புறா வடிவில் விண்ணில் பறந்து செல்வதாகக் காட்சி கண்டார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது கிறிஸ்தவ வாழ்வின் சில நடைமுறைகள் குறித்து

# சிந்திக்க வேண்டிய சில விடயங்கள்

திரு. ச. மாட்டீன் டயஸ், பேசாலை

### வெளிவாயில் கிறீஸ்தவர்கள்

நமது பங்குகளில் - ஆலயங்களில் 'வெளிவாயில் கிறீஸ்தவர்கள்' என்று ஒரு கூட்டம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். ஒரு பங்கில் உள்ள மக்களில் 15% - 20% மக்கள் ஞாயிறு பலிப்பூசைக்கு வருவதில்லை. பூசைக்கு வருகிறவர்களில் 10% - 15% வீதமானோர் வெளிவாயில் கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். பூசைக்கு வருவதோடு திருப்திப்பட்டுக் கொள்வார்கள். பூசைப்பலியில் பங்குகொள்வதே இல்லை. கோயில் வாயில்களின் வெளிப்புறங்களிலும் முற்றங்களிலும் மரநிழல்களிலும் நின்று தங்கள் சொந்தப்பிரச்சினைகள், தொழில்கள்பற்றி அளவளாவிவிட்டுச் சென்றுவிடுவார்கள். ஆரம்ப நிலைகளில் ஆண்கள் இளைஞர்கள் மட்டும்தான் இவ்விதமாகச் செய்தார்கள். இப்போது குடும்பங்களாக மனைவி பிள்ளைகளுடன் வெளியே இருக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பூசைக்கு வந்தீர்களா என்று கேட்டால், 'வந்தேனே' என்பதுதான் அவர்கள் பதிலாக இருக்கும். அவர்கள் சொல்வதிலும் தப்பில்லை. பூசைக்கு வந்தார்கள் பலியில் பங்குகொள்ளத்தான் இல்லை.

இதற்கு முற்றுமுழுதாக அவர்களைக் குறைசொல்ல முடியாது. பாடசாலையில் அவர்கள் கற்ற நாட்களில் பலியின் மகத்துவம், அதன் நன்மைத்தனங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. குடும்பங்களில் ஆலய நிகழ்வுகள் வழிபாடுகள் பற்றிய முக்கியத்துவம் உணர்த்தப்படவில்லை. பல குடும்பங்கள் இவற்றில் அக்கறையற்று இருக்கின்றன.

என்னை 10ம் 11ம் வகுப்புகளில் கற்பித்த ஆசிரியர் - அவர் தலைமை ஆசிரியராகவும் 10 வருடங்கள் இருந்தார். அவருடைய ஞாபகம் வருகிறது. பி. ஏ. சிங்கராயர் என்பது அவர் பெயர். ஊர்காவற்றுறை நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாங்கள் ஒவ்வொருவரும் நாட்பூசைக்கு வரவேண்டும் என்று கற்றுத்தந்தார். பூசை வேளைகளில் எங்களோடு இருப்பார். நாளாந்தம் தேவநற்கருணை உட்கொள்வார். பூசைக்கு மட்டுமல்ல ஆலயத்தில் நடைபெறுகின்ற மாலை வழிபாடுகளுக்கும் வருவார். எம்மையும் வரச்செய்தார். அவரின் வழிநடத்தலில் நாம் வளர்ந்தோம். வழிபாட்டு வேளைகளில் ஆலயத்துக்கு வெளியே நிற்பதை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

ஒரு பங்கில் ஞாயிறு பூசைக்கு வந்த கிறீஸ்தவர்களில் பலர் ஆலயத்துக்கு வெளியே நிற்பதைக் கவனித்த பங்குத்தந்தை மாற்று வழியைச் சொன்னார். அதன்படி அடுத்த வாரம் திருப்பலிக்கான மேடை ஆலய முன்றலில் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆலயத்துக்கு வெளியே நின்றுவிட்டுச் செல்பவர்கள் அன்று மதிலுக்கு வெளியே நின்றுவிட்டுப் போய்விட்டார்கள்.

இவர்களும் கடவுளின் பிள்ளைகள்தான். கடவுளிடம் வந்து சேரவேண்டியவர்களே. ஆலய மறையுரை மூலமாகவோ அறிவுறுத்தல் மூலமாகவோ இவர்களை உள்ளே கொண்டு வர முடியாது. இவர்களை உள்ளே கொண்டுவரவேண்டியது அவர்களுடைய நண்பர்கள்தான. பலிகளும் வழிபாடுகளும், வேண்டுதல்களும் நம் வாழ்வில் அர்த்தமுள்ளவை என அவர்களை உணரச்செய்ய வேண்டிய பொறுப்பும் நம்மிடத்தில் உண்டு.

### அர்ச்சேசிஸ்ட்ட மரியாயே என்பதா புனித மரியாயே என்பதா?

செபங்களை பொருளுணர்ந்து சொல்லும்போதுதான் பலன்தரும். எல்லாச் செபங்களும் ஆரம்ப நாட்களில் மந்திரம் என்ற வார்த்தை இணைக்கப்பட்டுத்தான் வந்தன என்பது நமது புதிய தலைமுறையினருக்கு தெரியாது. பிரியதத்த மந்திரம், பரலோக மந்திரம், கிருபைதயாபர மந்திரம் திரிகால மந்திரம்.

இந்த மந்திரம் என்ற பதம் எப்படி பாவனைக்குள் வந்தது என்று அறிவதற்கு நாம் சில நூற்றாண்டுகள் பின்நோக்கிப் பார்க்க வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது முன்னோர் இந்துக்களாகவே இருந்தனர். 15ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே போர்த்துக்கேயரினாலேயே கிறீஸ்தவம் ஆசிய நாடுகளுக்கு சிறப்பாக தெற்காசிய நாடுகளுக்கு இந்தியா இலங்கை கிழக்கிந்திய தீவுகளுக்கு கொண்டுவரப்பட்டது. போர்த்துக்கேய வீரர்கள் கத்தோலிக்கர்களாக இருந்தனர். அவர்களின் ஆன்மீகத் தேவைகளை ஒட்டி போர்த்துக்கேய குருக்களும் அவர்களோடு வந்தனர். அக்குருக்கள் கிறீஸ்துவை நம் முதாதையர்களுக்கு வழங்குவதற்காக தமிழைப் பயின்றனர். செபங்களை மக்களுக்கு ஆக்கித்தரவேண்டியேற்பட்ட போது இந்து மதத்தில் செபங்களுக்குப் பாவனையிலிருந்த வார்த்தையான மந்திரத்தை செபம் என்பதற்குப் பாவித்தனர்.

முதலில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நற்செய்தியில் இன்று எங்களால் இராயப்பர் பேதிரு என்று அழைக்கப்படும் சீமோனின் பெயர் மலையப்பன் என்றிருந்தது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். மொழி மெருகூட்டப்படும்போது புதிய சொற்கள் பதிலீடுகளாக வந்து செபங்களை நவீனப்படுத்துகின்றன.

ஆரம்பத்தில் 'பிரியதத்த மரியாயே' என்றிருந்த செபம் 'அருள் நிறைந்த மரியாயே' என மாறி வாயிலும் நெஞ்சிலும் இனிக்கிறது. அதன் இரண்டாம் பகுதியில் "அர்ச்சேசிஸ்ட மரியாயே சருவேசுரனுடைய மாதாவே....." என்றுதான் நாம் சொல்கின்றோம். அர்ச்சேசிஸ்ட் என்று சொல்லும்போது அதன் பொருள் பளிச்சென்று நமக்குப் புலப்படுவதில்லை. அதற்குப் பதிலாக 'புனித மரியே' என்று சொன்னால் பளிச்சென்றும் மதுரமாகவும் உள்ளது. புனிதம் ஓர் உன்னதமான சொல் - தூய்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது. ஆகவே 'புனித மரியே' என்று சொல்லி மாதாவைப் புகழ்வோமா?

### திருப்பலி நிறைவுற்றதா அன்றேல் முடிவுற்றதா?

திருப்பலியின் நிறைவில் சொல்லப்படுகின்ற வாக்கியம் பல்வேறு விதமாகச் சொல்லப்படுகின்றது.
சென்று வாருங்கள் திருப்பலி முடிவுற்றது.
சென்று வாருங்கள் திருப்பலி நிறைவேறியது.
கிறீஸ்துவின் சமாதானத்தில் சென்று வாழுங்கள்
இப்படிப் பல!

திருப்பலி முடிவுறுமா என்றால் அது ஒரு பெரிய கேள்வி. கிறிஸ்துவின் பலி ஒரு முடிவுறாத பலி. முடிவுறாத பலியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் யேசு "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" எனத் தம் சீடர்களுக்குச் சொன்னார் (லூக் 22:19). இப்பலி நிறைவுறாத பலியாக எழுவான் தொடக்கம் படுவான்வரை ஒப்புக்கொடுக்கப்படுவதால்தான் மனுக்குலத்தின் பாவங்கள் நேற்றும் இன்றும் நாளையும் மன்னிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பிறிதொருவிதமாக நோக்கினால் பலி ஒரு வழிபாடாக இல்லாமல் வாழ்வாக மாறவேண்டும் என்பதே ஆகும். கிறீஸ்து பலியில் மானிட இனத்துக்காக மட்டுமல்ல அண்ட சராசரங்களின் நலனுக்காகவும் தன்னைப் பகிர்ந்தளிக்கின்றார். பகிர்ந்தளித்தல்தான் பலியின் அடிப்படைத் தத்துவம்.

பலியில் பங்குபெறும் நாம் கிறீஸ்துவின் உடலிலும் பகிர்ந்தளித்தலிலும் பங்குபெறுகின்றோம். அதனால் நாமும் நம்மைப் பகிர்ந்தளிக்க வேண்டியவர்களாகின்றோம்.

இரத்தம் சிந்தத் தேவையில்லை. சிலுவையில் அறையப்படதேவையில்லை. மரிக்கத் தேவையில்லை. இவை எல்லாம் இல்லாமலே நாம் நம்மைப் பகிர்ந்தளிக்க முடியும். நம் செல்வங்களை, உடைமைகளை, ஆற்றல்களை, திறமைகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்.

இது ஒரு தொடர் கதை. ஒரு தீபத்திலிருந்து மற்றத் தீபங்களை ஏற்றுவதுபோல. ஆக, எப்படிப்பார்த்தாலும் அது ஒரு முடிவுறாத பலி; நிறைவேறிக்கொண்டே இருக்கின்ற ஒருபலி.

எனவே "திருப்பலி நிறைவேறிற்று" என்று சொல்வது "திருப்பலி முடிவுற்றது" என்று சொல்லுவதையும்விடச் சாலச் சிறந்தது.

அவ்வாறே "எல்லோரும் எழுந்து நின்று முடிவுக்கீதத்தில் பங்கு பெறுவோம்" என்று சொல்வதைவிட "நிறைவுக் கீதத்தில் பங்கு பெறுவோம்" எனச் சொல்வது நன்று.

### ஞானஸ்நானமா அல்லது ஞானஸ்ஞானமா?

கிறீஸ்து திருவருட்சாதனங்களை ஏற்படுத்தினார் அல்லது அந்நாட்களில் சடங்குகளாக மட்டும் இருந்த நிகழ்வுகளை திருவருட்சாதனங்களாக உயர்த்தினார். திருமணம் ஒரு சடங்காக யூத மக்களிடையே இருந்தது. மோயீசன் தந்த சட்டப்படி ஒரு மனிதன் தன் மனைவியை விலக்கிவைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. கிறீஸ்து அதை ஒருத்திக்கு ஒருத்தன் என்றாக்கி "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்ற நியதியையும் ஏற்படுத்தினார்.

ஆரம்ப நாட்களில் நாம் சிறுவர்களாக இருந்தபோது திருவருட்சாதனங்களை நாம் 'தேவதிரவிய அனுமானங்கள்' என்று அழைத்தோம். தேவதிரவிய அனுமானத்தை நாம் பதம் பிரித்துப்பார்த்தால் தேவ+திரவிய+அனுமானம் என்று பிரிக்கலாம். அனுமானம் என்பது மருந்து என்பதற்காகப் பாவிக்கப்பட்ட ஒரு சொல். அனுமானம் எதைக் கொண்டு ஆக்கப்படும் என்றால் - மிளகு, கொத்தமல்லி, சுக்கு, அரிசித் திப்பிலி, அதிமதுரம் போன்ற மருந்துகள் அல்லது திரவியங்களைக் கொண்டு- பொருத்தமானவற்றைக் கொண்டு ஆக்கப்படும். தேவனுடைய அருளைத் தருகின்ற திரவியங்களான நற்பண்புகள் அன்பு – மன்னிப்பு - இரக்கம் - உதாரகுணம் - விட்டுக்கொடுத்தல் - தாழ்ச்சி போன்ற திரவியங்கள் சேர்ந்த அனுமானம் - மருந்து ஆகும்.

இப்போது இவை திருவருட்சாதனம் என அழைக்கப்படுகின்றன. இதற்குப் பொருள்படுத்திப் பார்த்தால் தேவனுடைய அருளைத் ((முன் சொல்லப்பட்டவை) தருகின்ற – சாதனம் என்றால் வழி அல்லது ஊடகம். தேவ அருள்நிறைந்த வழி அல்லது ஊடகம் என்று ஆகும். ஆக பொருள் உணர்ந்து சொன்னால் மட்டுமே நமது செபங்கள் வாயிலும் சிந்தனையிலும் இனிக்கும். நமக்குக் கடவுளின் அருளையும் கொண்டுவரும். பொருள் நோக்காது சொல்லப்படுவதாலேயே சிலவேளைகளில் சில வார்த்தைகளைத் தப்பாகச் சொல்லி விடுகின்றோம். உதாரணமாக திருமுழுக்கு என்ற திருவருட்சாதனம் முன்பு ஞானஸ்நானமாக இருந்தது. இப்போது நம்மில் பலர் இதை ஞானஸ்ஞானம் என்று அர்த்தமற்றுச் சொல்லிவிடுகின்றோம். குருக்களில் சிலரும்தான்!

ஞானஸ்நானம் ஞானம்+ஸ்நானம் எனப்பிரியும். ஞானம் என்ற பதத்திற்கும் ஸ்நானம் என்ற பதத்திற்கும் நான் பொருள் சொல்லத் தேவையில்லை. ஞானஸ்ஞானம் என்ற சொல்லைப் பிரித்தால் ஞானம்+ஸ்ஞானம் எனப்பிரியும். ஸ்ஞானம் என்ற ஒரு சொல் தமிழில் இல்லை. அதை ஞானம்+ஞானம் எனப் பகுத்தால் அதுவும் பொருள் தருவதாக இல்லை பொருளுணர்ந்து சொல்லும்போது மட்டுமே இவற்றை நாம் இனம் கண்டுகொள்ளமுடியும்.

குறைகாணும் நோக்கமாக அல்ல நிறைவாக்கும் எண்ணத்துடனேயே இச்சிந்தனைகள் எழுதப்பட்டன.

## நம்பிக்கை வாழ்வு பற்றிய தெளிவு வேண்டும்!

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி.) வவுனியா

### அறிமுகம்

இது நம்பிக்கை ஆண்டு. எம் நம்பிக்கை வாழ்வைப் பற்றி தெளிவுபெறவேண்டியது காலத்தின் கட்டாயம். நம்பிக்கை ஆண்டிலே மறைமாவட்ட மட்டத்திலும், பங்கு மட்டத்திலும் பல்வேறு செயற்பாடுகளுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் இத்திட்டங்கள் வெளியரங்கத்தில் நம்பிக்கை வாழ்வைப் பறைசாற்றுவதாக அமையலாம். ஆனால் உள்ளார்ந்த ரீதியாக எதுவித மாற்றமும் இல்லாமல் மறைக்கல்வி ஆண்டைப்போல் செயற்திட்ட அறிக்கையோடு இதுவும் கடந்துவிடலாம்.

எமது வாழ்வின் இருப்பாக இருப்பது நம்பிக்கை என்று சொன்னால் மிகையாகாது. நம்பிக்கை என்றால் என்ன என்பது பற்றி தெளிவில்லாதவரைக்கும் எமது வாழ்க்கையில் எதுவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இன்று இறைநம்பிக்கை அருகிப் போய்க்கொண்டிருப்பதற்கு உள்ளரங்க வெளியரங்க காரணிகள் உண்டு என்பதை மறுக்கமுடியாது. குறிப்பாக உள்ளரங்கத்தில் நம்பிக்கை வாழ்வு வெறும் கோட்பாடாக, பக்தியாக இன்னும் சடங்காக புரிந்துகொள்ளப்படுவதனால் மனித இதயங்களில் இறை நம்பிக்கை ஆழமாக வேரூன்றவில்லை என்று கூறலாம். இன்று மதங்கள் உண்டு. ஆனால் ஆன்மீகம்தான் மனிதர்களிடையே இல்லை. எமது தேசத்தில் நான்கு மூத்த மதங்கள் உண்டு. ஆனால் அவை வெறும் மதங்களாக, வாழ்வைத் தொடராதவையாக இருப்பதனால் அமைதியை சமாதானத்தை அனுபவிக்க முடியாதுள்ளது. நம்பிக்கை பற்றிய பார்வை மாறும்போதுதான் நம்பிக்கை வாழ்வும் உயிரோட்டமுள்ளதாக, வேரோட்டமுள்ளதாக மாறும்.

### பார்வையில் மாற்றம் தேவை

இன்று நாம் வாழும் சூழல் நம்பிக்கையை வழப்படுத்துவதாக இல்லை. வன்முறைகளும், வன்புணர்வுகளும் பெருகி ஒரு வன்முறைக் கலாச்சாரம் உருவாகியிருப்பதைக் காணலாம். சுயநலமும் அதிகார அரசியலும் அநீதிகளை வளர்ப்பதைக் காணுகின்றோம். சந்திக்கு சந்தி கோயில்களும், மத அடையாளங்களும் பெருகிய அளவு ஆன்மீகமும், இறை நம்பிக்கையும் அதிகரித்ததாகத் தெரியவில்லை. அத்துடன் மதங்களும் வெளியரங்க அடையாளங்களுக்கும், வழிபாடுகளுக்கும், சடங்குகளுக்கும் முன்னுரிமை அளித்து வளர்த்து வருவதால் இறை நம்பிக்கை அருகி வருகின்றது. இறைநம்பிக்கையை பக்திமயப்படுத்தி வெளியரங்க கொண்டாட்டங்களையும், திருவிழாக்களையும் மையப்படுத்தியதாகவே நம்பிக்கை வாழ்வைப் பார்க்கின்றோம். இன்றும் எத்தனையோ கிறிஸ்தவர்கள் இத்தகைய ஆழமற்ற மேலோட்ட பார்வையே கொண்டுள்ளனர். அடிப்படையில் எமது நம்பிக்கை (விசுவாச) வாழ்வை இத்தகைய மேலோட்டமான பார்வையிலிருந்து விடுவிக்க வேண்டும். ஆன்மீகத்தை வளர்க்காத மதக்கோட்பாடுகளையும், சடங்குகளையும் இறுக்கமாகப் பின்பற்றுவதால் கிறிஸ்தவம் தன் நம்பகத்தன்மையை இழந்துகொண்டு வருகின்றது. மதக்கோட்பாடுகளின் மட்டில் உள்ள அறிவு மட்டும் இறைநம்பிக்கையை வளர்க்கப்போவதில்லை (உ+ம்: விசுவாசப் பிரமாணத்திலுள்ள போஞ்சியு பிலாத்து - இவரை ஏன்? விசுவாச பிரமாணத்தில் சேர்த்தார்கள்) எனவே விசுவாசப் பிரமாணத்தை வார்த்தைகளால் அறிக்கையிடுவதாலோ கடவுள் பற்றிய அறிவை வளர்ப்பதாலோ மட்டும் இறை நம்பிக்கை வளம் பெறப்போவதில்லை என்ற உண்மையை புரிந்துகொள்ளவேண்டும்.

### நம்பிக்கை என்றால் என்ன?

நம்பிக்கை என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள அதன் இரு முகங்களை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். முதலில் நம்பிக்கையை இறை – மனித உறவாக அடிப்படையில் நோக்கப்பட வேண்டும். அடுத்ததாக நம்பிக்கையின் உள்ளீடு (Content) பற்றியதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் இதயத்திற்குள் உறைந்திருக்கும் இறைவனோடு ஏற்படுத்தும் உறவே உண்மையில் நம்பிக்கையாகும். நம்பிக்கையின் உள்ளீடாக இருப்பவைதான் விசுவாசக் கோட்பாடுகளும், மறைக்கல்வியும், அருட்சாதனங்களும் ஆகும். வெறுமனே விசுவாசக் கோட்பாடுகளை அறிக்கையிடுவதாலும், மறைக்கல்வியைக் கற்பதாலும் நம்பிக்கை வளர்ந்துவிடாது. இதை எமது கிறிஸ்தவ வாழ்க்கையில் பார்க்கின்றோம். ஆனால் இறைவனோடு தனிப்பட்ட முறையில் உறவைக் கட்டியெழுப்புவதே இறைநம்பிக்கை வாழ்வாகும். இது ஒரு நீடிய உறவுப்பயணமாகும். என்னோடும், இறைவனோடும் அடுத்தவரோடும் இணைந்து வாழும் உறவுப் பயணம்தான் நம்பிக்கை வாழ்வு என்பதில் தெளிவுபெறாதவரைக்கும் ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி காணமுடியாது. ஒரு முக்கோண உறவாகவே நம்பிக்கை (விசுவாசம்) வாழ்வு நோக்கப்பட வேண்டும். இறைவனைப்பற்றிய தேடலும், தாகமுமே இறையுறவை, இறைப்பற்றை வளர்க்க உதவுவதாகும்.

கிறிஸ்துவோடு கொள்ளும் நெருங்கிய உறவுப்பரிமாற்றமாக அனுபவமாக மாறும்போதே நம்பிக்கை ஆழம் பெறுகின்றது. இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய வறுமை ஆன்மீகத்தை (Poverty of Spirtuality) சார்ந்ததாகும். அமைப்பு ரீதியான திருச்சபையும் பங்கும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆன்மீகத்தை ஆழப்படுத்த உறவின் அடித்தளத்தில் நோக்கப்படும் நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். சீடத்துவம் என்பது கிறிஸ்துவோடு வாழும் உண்மைத்தனமான நெருங்கிய உறவிலேயே தங்கியுள்ளது. எனவே இன்றைய நம்பிக்கை வாழ்வை நோக்கும்போது உண்மையான நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் நம்பிக்கை வாழ்விலிருந்து நாம் தொலைவில் வாழுகின்றோம் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும். (தொடர்ச்சி 15 ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## பெற்றோரைப் பேணுவோம்

பு. ஆன்ஷர்மி,
இல. 95, முதலியார்குளம், செட்டிகுளம்.



சொந்தங்கள் யாருமில்லை
வந்துவிட்டோம்
வயோதிபர்சாலைக்கு.
முத்து முத்தாய்ப் பெற்றெடுத்த
இரத்தினங்கள் யாவும் இன்று
முழுமனதாய் அனுப்பிவிட்டார்
முதியோர் சாலைக்கு!

ஆசையுடன் பிள்ளை பெற்று
பெயர் வைத்துச் சீராட்டி
அன்னை மடியது
பஞ்சணையாய்
சீராட்டிய பிள்ளையது
வருவானோ ...
வருவானோ என்று
ஏங்குதொரு தாய்மனது.

அழகாக பள்ளிக்கு
அனுப்பிவைத்து
ஆசையுடன் படிக்க வைத்து
அனைத்தையும் அவனுக்காய்
தியாகம் செய்து
பட்டதாரிப் பட்டம்பெற பார்த்துப்
பார்த்து
மகிழ்ந்த என்னை
சொற்ப நேரத்தில்
முதியோர் பட்டம்
தந்து என்னை
அனுப்பிவிட்டான்!

மண்ணில் வாழும்
மானிட உயிர்களே
எண்ணிப்பார் ஓர் நிமிடம்.
கருவறையில் பத்துமாதம்
கனிவுடனே சுமந்தவளை
தனிமரமாய் தனிமையிலே
விட்டுவிட்டாய் சரிதானா?

உனக்கின்று ஒளிகொடுக்க
உருகிய மெழுகாக
தன்னையே உருக்கிவிட்டு
உன் தந்தை உருமாறி
உன்னையும் யாரென்று
தெரியாமல்
தடுமாற விட்டுவிட்டாய்

பெற்ற கடன் தீர்க்காமல்
முதியோர் இல்லம்
அனுப்புகின்ற
கடன்காரப் பாவிகள்தான்
மானிடர் நீயும் நானும்.

அனுப்பாதே அனுப்பாதே என
மனதாலே கதறுகின்ற
பெற்றோரை
முதியோர் இல்லங்களிற்கு
அனுப்புகின்றாய்
அக்கணமே நீத்துவிட்டார்
உயிர்தனை.
நீ அனுப்பியது வெறும்
உடலைத்தான்.

கர்ணனை ஆற்றில்விட்ட
குந்தியா உன் அன்னை?
இல்லையே!
பொக்கிஷமாய்
உனை எண்ணி
பொத்திப் பொத்தி
வளர்த்தாளே!
அவளுக்காக ஒதுக்கு ஓர்
இடத்தை உன் வீட்டில்!

அன்னை தந்த காணியடா
தந்தை தந்த பொருட்களடா
அத்தனையும் உனக்களித்து
ஆண்டியான அவர்களுக்கு
ஒதுக்காயோ
உன் வீட்டில் ஓர் இடத்தை!

அன்னையும் பிதாவும்
முன்னறிந்த தெய்வங்கள்.
அவர்களுக்கு
ஓர் இடம் ஒதுக்கி
கோயில் கட்டு உன் வீட்டில்.
நீ அவர்கள் முகம் பார்த்து
என்றென்றும் வென்றிடுவாய்!

## உன்னை அன்னையெனக் காட்ட என்ன செய்யப் போகிறாய்?

பி. மதுஷாளினி, கனடா



எனக்கு பாடசாலை தொடங்குவதற்கு முன்
உனக்கு வேலை தொடங்கி விடுகிறதே அம்மா
ஒவ்வொரு நாளும்!

எனக்கு பள்ளி முடிந்தாலும் - உனக்கு
வேலை முடிவதில்லையே அம்மா
யாருமே இல்லாத வீட்டைப் பார்க்கையில்
எதுவுமே இல்லாததுபோல் தோன்றுகின்றது எனக்கு!
இரவு 10 மணிக்குள் வந்துவிடும் உன்னையும்
அப்பாவையும் நினைக்கையில் - உங்கள்
உருவமே எனக்கு நினைவில்லையே

இப்பொழுதெல்லாம் உன்னை எனக்கு பிடிக்கவே இல்லை
வேலைத்தளத்தை நேசிக்கத் தெரிந்த உனக்கு
உன் அன்பிற்காக, உன் அரவணைப்பிற்காக
ஏங்கும் என்னை ஏனம்மா? நேசிக்க முடியவில்லை!

வேலைத்தளத்திலே பண்பாகவும் அன்பாகவும்
நடக்கத் தெரிந்த உனக்கு
உன் பிள்ளைமீது அன்பு காட்ட முடியவில்லையே அம்மா!

நான் ஏழைத்தாய் வயிற்றில் பிறந்திருந்தால்கூட
அன்பான வார்த்தைகளால் என்னை அரவணைத்திருப்பாளே
அவள்மீதில் அமைதியாய் உறங்கிப் போயிருப்பேனே
நான் நல்ல கெட்டிக்காரி என ஊர் அறிய மார் தட்டுகிறாயே
– ஆனால் அம்மா ..........!
உன் அரவணைப்பிற்காய் ஏங்கும் எனக்கு
உன்னை அன்னையெனக் காட்ட என்ன செய்யப் போகிறாய்?

# சிறுகதை

என். இராஜேஸ்வரி,
மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி,
மன்னார்.

## நன்றிக்கடன்



கடற்கரை மணலில் அமர்ந்து கடலலைகளை இரசித்துக்கொண்டிருந்த வசந்தன் தன் கடந்தகால நினைவலைகளினுள் மூழ்கினான்.

வசந்தன் ஒரு அழகிய கிராமத்தில் வசித்து வந்தான். வசந்தனிற்கு 4 வயது இருக்கும்போதே அவனுடைய தந்தை இறந்து விட்டார். தாயார் மிகவும் கஷ்ரப்பட்டு கூலி வேலை செய்து வசந்தனைப் படிக்க வைத்தார். அவருடைய ஆசை, கனவு எல்லாம் வசந்தனை ஒரு டாக்டர் ஆக்கிப் பார்க்க வேண்டும் என்பதே. வசந்தனும் தாயின் கஷ்ரத்தை உணர்ந்து நன்றாகப் படித்தான். வகுப்பில் எப்போதும் முதல் மாணவனாகவே வருவான்.

வசந்தன் பத்தாம் வகுப்புப் படிக்கும்போது ஒரு நாள் அவனுடைய தாயார் வேலைத்தளத்தில் நெஞ்சு வலியில் துடிதுடித்து மயக்கமுற்றார். அப்பொழுது அங்கிருந்தவர்கள் அவளை வைத்தியசாலையில் சேர்த்தனர். வசந்தனிற்குச் சொல்லியனுப்பினர். பதறியடித்தவாறு வைத்தியசாலைக்கு வந்தான். தன் தாய் படுத்த படுக்கையாய்க் கிடப்பதைப் பார்த்து அவன் கண்ணீர் வடித்தான். தாயின் அருகே இருந்து அவளது தலையைத் தடவினான். அப்பொழுது வைத்தியர் வசந்தனை அழைத்துச் சென்று வசந்தனிடம் "உன் தாயின் உடல் நிலை மிகவும் மோசமாய் உள்ளது. அவருக்கு இருதயத்தில் ஓட்டை இருப்பதால் உடனடியாக ஆப்பிரேஷன் செய்ய வேண்டும். அதற்கு எப்படியும் ஒரு இலட்சம் வரை செலவாகும்" என்று கூறினார்.

வசந்தனிற்கு சொந்த பந்தம் எவரும் இல்லை. அவனுக்கு ஆறுதலாகத் தாயும் தாய்க்கு ஆறுதலாக அவனும் என்று இருந்தனர். இப்போது ஒரு லட்சம் ரூபாய்க்கு எங்கு செல்வது? என்ன செய்வது? என்று தெரியாத நிலையில் தன்னுடைய படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்வதற்கு முடிவு செய்தான்.

ஒரு கடையில் வேலைக்குச் சேர்ந்து இரவு பகல் பாராது கடுமையாக உழைத்தான். தன்னுடைய முதலாளிக்கு விசுவாசமாயிருந்தான். அவனுடைய சுறுசுறுப்பையும் நேர்மையையும் கண்ட கதிரேசன் முதலாளி வசந்தனின் நிலையறிந்து அவனுக்கு உதவ முன்வந்தார். அவனுடைய தாயின் ஆப்பிரேஸனுக்குத் தேவையான பணத்தை அவரே கொடுத்தார். மேலும் வசந்தன் மேற்கொண்டு படிக்க உதவி புரிந்தார். வசந்தன் பகலில் பாடசாலை செல்வதும் இரவில் கடையில் வேலை செய்வதுமாக இருந்து தன் தாயைக் கவனித்து வந்தான்.

அவனுடைய தாய் ஆசைப்பட்டதைப்போலவே வசந்தன் நன்றாகப் படித்து ஒரு டாக்ரர் ஆனான். ஏழை மக்களிற்கு இலவசமாகச் சிகிச்சை புரிந்தான். மேலும் தான் இந்நிலைக்கு வர காரணமாய் இருந்த கதிரேசன் முதலாளியை அவன் ஒருபோதும் மறக்கவில்லை. அவருடைய முதுமைக் காலத்திலே தன்னுடைய சொந்தத் தகப்பனைப்போல அவருக்குப் பணிவிடை புரிந்தான்.

திடீரென தன் நினைவலைகளிலிருந்து மீண்ட வசந்தனுக்கு முதலாளிக்கு மருந்து கொடுக்க வேண்டும் என்ற நினைவு வர விரைவாக அங்கிருந்து சென்றான்.

## கொஞ்சம் சிரிங்க

**கணவன்** :- எங்கட அப்பா ஐம்பத்தைந்து வயதிலேயே இறந்துவிட்டார். எனக்கு இப்ப அறுபத்தைந்து வயது. நான் இன்னும் உயிரோடதானே இருக்கிறேன்.
**மனைவி** :- இரண்டுமே வருத்தப்பட வேண்டிய விடயம்தான்.
*ம. காமலின் சௌமியா குரூஸ், அரிப்பு*

**பெண்வீட்டார்** :- மாப்பிள்ளை என்ன செய்கிறார்?
**தரகர்** :- அவர் நின்றால் ரயில் ஓடும்; ரயில் நின்றால் அவர் ஓடுவார்.
**பெண்வீட்டார்** :- அய்யோ பிஸியா?
**தரகர்** :- பின்னே ஸ்ரேசன்ல முறுக்கு விக்கிறதுன்னா சும்மாவா?

........................................................

**அவன்** :- காதல் வந்தால் சொல்லியனுப்பு.
**அவள்** :- போடா லூசு .......... கல்யாணமே வந்தாச்சு இந்தா அழைப்பிதழ் ......! உயிரோடு இருந்தால் வந்து தொலை .....!!
*செ. றொக்சி பவித்திரா, ஆட்காட்டிவெளி.*

**டாக்டர்** :- உங்க மாமியாருக்கு இனிமேல் காது கேடகாதும்மா.
**பெண்** :- அதே மாதிரி வாய்க்கும் ஏதாவது வைத்தியம் இருந்தா செய்திடுங்க டாக்டர்!

........................................................

**ஒருத்தி** :- கண்டக்டரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டது தப்பாய் போச்சடி!
**மற்றவள்** :- ஏன்?
**ஒருத்தி** :- குறட்டை சத்தம்கூட விசில் சத்தம்போல வருது.
*க. மெர்லின், இத்திக்கண்டல், அடம்பன்.*

**தாய்** :- டாக்டர் மயக்கமாய் இருக்கிற என் பையன் எப்போ கண்திறந்து பேசுவான்.
**டாக்டர்** :- பேசவே மாட்டான்
**தாய்** :- ஏன்? **டாக்டர்** :- யாரும் கண்ணால் பேசமாட்டார்கள்
*ச. டெலாகினி சிலோஜனா, தேவன்பிட்டி.*

## நல் வாழ்விற்கு சில ஆலோசனைகள்

- இரகசியத்தை பாதுகாத்தல்.
- இருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடையில் பேசாதிருத்தல்.
- குறித்த நேரத்தில் கடமைகளைச் செய்தல்.
- வாக்கு தவறாதிருத்தல்.
- தினமும் இறைவனை வழிபடுதல்.
- பெற்றுக்கொண்டதை தவறாது மீண்டும் கொடுத்தல்.
- நல்ல கருத்துக்களை, பயன்தரக்கூடிய புனிதர்களின் கதை போன்ற புத்தகங்களை வாசித்தல்.
- பிறருடைய நன்மைத்தனங்களைப்பற்றி மாத்திரம் கதைத்தல்.
- 'முடியாது' என்ற சொல்லையும் 'இல்லை' என்ற சொல்லையும் குறைவாகப் பாவித்தல்.

## மன்னா விளம்பரப் பலகை

ஆயுதங்களைவிட அன்பே வலிமையானது. கடமை செய்; பலனை எதிர்பாராதே
*றே. சதிசன், கன்னாட்டி, அடம்பன்.*

அனைவரையும் நேசி நேசிக்க முடியாவிட்டால் அவர்களைவிட்டு விலகி நில். ஆனால் அவர்களோடு பகைக்காதே.
நகம் வளர்ந்தால் வளர்ந்த நகத்தை வெட்டி விடுகிறோம். ஆனால் நகத்தையே பிடுங்கி எறிவதில்லை. அதுபோலதான் வாழ்க்கையில் தோல்விகள் வளரும். அதை விலக்கிவிட வேண்டுமே தவிர தோல்விகளுக்காக வாழ்க்கையையே முடித்துக் கொள்ளக்கூடாது.
*பீ. ஒகஸ்ரினா, இறம்பைக்குளம், வவுனியா.*

அடுத்த வீட்டார் பசியோடு இருக்கும்போது தான் மட்டும் உண்பவன் உண்மையான கடவுள் பற்று உடையவன் அல்ல.
*ஜி. கிறிஷாந்தன், சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

"மனிதத்தை தேடும் ஒருவனைக் கண்டேன். எனக்குள் நானே சொல்லிக்கொண்டேன்; பாவம் முட்டாள்! இல்லாத ஒன்றை இருட்டிலே தேடுகின்றான்."
*எ. டிலுசா சாளினி, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.*

நீ இறைவனைப் பற்றி அறிய விரும்பினால் உன்னைச் சுற்றி நோக்குவாயாக. அவர் சிறுவர்களுடன் விளையாடுவதையும் மலர்கள் மத்தியில் புன்னகைப்பதையும் காண்பாய்.

ஒரு நீதிபதிக்கு நான்கு வகைக் குணங்கள் தேவை: பொறுமையுடன் செவிசாய்ப்பது, புத்திசாலித்தனமாகப் பதில் சொல்வது, தீர்க்கமாக ஆலோசனை செய்வது, பாரபட்சமற்ற தீர்ப்பளிப்பது. - சோக்ரட்டீஸ்
*ஜெயபாலாஜி, முருங்கன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

— ஆங்கில மூலம் —

அமரர். அருட்கலாநிதி பப்பிரிஸ் குருஸ் FSC

அத்தியாயம் – 24

தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.

# சரியான தீர்மானம்



சிறுவர் பாடசாலைப் பிள்ளைகள் கிரிக்கட் ஆட்டம் ஆடுவதைப் பார்த்துக்கொண்டு விளையாட்டு மைதானத்தில் இருந்த ஒரு இருக்கையின் ஓரத்தில் மெதுவாக வந்து அமர்ந்தாள் மாலினி. அவள் அந்த விளையாட்டை ரசித்துக்கொண்டிருக்கையில் ஒரு வீரன் அடித்த பந்து எல்லையைத் தாண்டி வந்து அவளுடைய காலடியில் வந்து வீழ்ந்தது. பால்வடியும் அழகான முகத்தையுடைய ஒரு பையன் அந்தப் பந்தை எடுக்க அவள் அருகே ஓடிவந்து நின்றான். அவள் அந்தப் பந்தை எடுத்து அவனிடம் நாகரிகமாக நீட்டினாள். "எவ்வளவு அன்பு உங்களுக்கு, மிக்க நன்றி அம்மணி" என்று கூறிவிட்டு அவளைப் பார்த்து கவர்ச்சியாக புன்னகைத்தான். அது ஒரு சாதாரண நிகழ்வாயிருந்தாலும் அந்த அழகான சிறு பையனைக் கண்டதும் அவளுடைய தாய்மை உணர்வு தூண்டப்பட்டு அந்த ஆட்டம் முடிந்துவிட்ட பின்பும் தன்னை மறந்து ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டாள்.

குமாரை அவள் திருமணம் முடித்த நாள் தனது வாழ்க்கையில் விசேடமானதும் மறக்கமுடியாததுமான ஒரு நிகழ்வாகும். அவளுடைய எல்லா உறவினர்களும், நண்பர்களும் நலன் விரும்பிகளும் வந்து தங்களுடைய பரிசுகளினாலும், செபத்தினாலும் அவளுக்கு உற்சாகமூட்டினர். தேனிலவுகூட குறிப்பிடத்தக்கதாக இருந்தது. முதல் வருடம் மிக நன்றாகக் கடந்து சென்றது. அதன்பின் குமாருடனான அவளது உறவில் சற்று வெறுப்பு ஏற்படத்தொடங்கியது. கடந்த மூன்று வருடங்களாக அவளுக்கு பிள்ளைப்பாக்கியம் இல்லாதது அவளை மிகுந்த கவலைக்குள்ளாக்கியது. அவளது கணவன் குமார் ஆரம்பத்தில் அவள்மீது வைத்திருந்த மிகுந்த அன்பு, கவனிப்பு, ஆதரவு எல்லாம் குறைந்துகொண்டு வருவதைப்போல் தெரிந்தது. தற்பொழுது தங்களுடைய திருமண உறவு முறிந்து விவாகரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை உணர்ந்தாள். அவளைப் பொறுத்தமட்டில் அவளது வாழ்வு தலைகீழாக மாறிவிட்டதாகத் தெரிந்தது. கன்னங்களிலே கண்ணீர் வழிந்தோடியது. தனது கைப்பையில் இருந்த ஒரு கைக்குட்டையை எடுத்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

அவள் இருக்கையில் இருந்து மிகுந்த மனவேதனையுடன் எழுந்து விளையாட்டு மைதானத்தின் சற்றுத் தொலைவில் இருந்த தனது வீட்டை நோக்கிச் சென்றாள். வழமையாக அவளை வரவேற்க குமார் அங்கு இருப்பான். ஆனால் தற்பொழுது அவர்கள் இருவருக்கிடையிலான பாதிக்கப்பட்ட உறவின் துன்பத்தை அனுபவித்தாள். யாரைக் குறை கூறுவது? அவளது இதயத்தைத் தாக்கி அதிகமாக நோகவைத்த சொல் 'மலடி' என்பதுதான். குமார் அவளை மலடி என்று குற்றம் சாட்டி அவளுக்கு பிள்ளைபெறத் தகுதியில்லை என்று அவமானப்படுத்தினான். இந்தக் கொடுமையான, இரக்கமற்ற குற்றச்சாட்டு அவளை மிகவும் பாதித்தது. அவள் தனது கவலையைப் பொறுத்துக்கொண்டு தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தைரியத்துடன் ஏற்றுக்கொண்டாள். அவள் இறைவேண்டுதலில் தனது நேரத்தைச் செலவளித்தாள்.

விவாகரத்துச் செய்யமுடிவு எடுக்குமுன் ஒரு திருமண ஆலோசகரின் ஆலோசனையைப்பெற வேண்டும் என்று குமாருக்கு யோசனை கூறினாள் மாலினி. குமார் இந்த விடயத்தைத் தவிர்க்க விரும்பினாலும் மாலினியின் தொடர்ச்சியான வேண்டுதலாலும், கெஞ்சுதலாலும் திருமண ஆலோசகரின் ஆலோசனை பெறுவதற்கு கடைசி வேளையில் சம்மதித்தான்.

குறிக்கப்பட்ட நாளில் மாலினியும் குமாரும் ஆலோசகரைச் சந்திக்கச் சென்றனர். அவர் ஒரு இரக்கமுள்ள வயதான அறிவு நிறைந்த மனிதர். இப்படியான சோடிகளின் முரண்பாடான நிலைகளில் அறிவுரை கூறி திருத்தும் அனுபவசாலியாக இருந்தார். அவர், அவர்களது கதையை அவதானமாகவும் பொறுமையுடனும் கேட்டுவிட்டு அவர்கள் இருவரையும் தங்கள் சரீர ஒற்றுமை பற்றி வைத்திய பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் இது எப்பவோ செய்திருக்க வேண்டிய ஒன்று என்றும் ஆலோசனை வழங்கினார்.

அந்த பண்பான ஆலோசகர் வழங்கிய அறிவுரைப்படி தாங்கள் இருவரும் வேறுவேறாக தங்களைப் பரிசோதனை செய்யச் சென்றனர். மாலினி தனக்கு நடைபெற்ற வைத்திய பரிசோதனையில் மலடி என்பதற்கு எதிர்மாறாக பிள்ளைப்பெறும் தகுதி தனக்கு இருப்பதைத் தெரிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். மறுபக்கம் குமாரின் வைத்திய அறிக்கை அவனைப் பிரமிக்க வைத்தது. அவன் ஆண்மையற்றவன் என்று வைத்திய அறிக்கை கூறியிருந்தது. அவன் தன்மீது மூர்க்கமும் கோபமும் கொண்டான். இத்தனை நாட்களாக மாலினி மலடி என்று சந்தேகப்பட்டு அவளை வசைபாடி நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் அவளைப்பற்றி குறைகூறிவிட்டான். மாலினி தன்மீது காட்டிய அசாதாரணமான, உண்மையான அன்புக்கு எதிராகத் தான் அவளைக் காட்டிக்கொடுத்ததை எண்ணி மிகுந்த கவலை அடைந்தான். என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் மனக்கிளர்ச்சியாலும் குற்ற உணர்வாலும் கலவரம் அடைந்திருந்தான். மாலினியைத்தான் தவறாக எடைபோட்டதற்காக அவளிடம் மன்னிப்பு கேட்க அவளைத் தேடி தனது காரை அஜாக்கிரதையாக செலுத்திக்கொண்டிருந்தான். குமார் கடைசியாக பங்குத் தேவாலயத்தில் அவள் இருக்கக்கூடும் என்று எண்ணி அங்கே விரைந்தான். அங்கே அதிபரிசுத்த கன்னி மரியாளின் சுருபத்துக்கு முன்பாக தலைகுனிந்து கைகளை விரித்து செபமாலையை சொல்லிக்கொண்டிருந்தாள் மாலினி.

"நான் தவறு செய்துவிட்டேன் மாலினி! தயவுசெய்து என்னை மன்னித்து விடு, நான் உன்னுடன் வாழ வேண்டும். என்னைத் தள்ளிவிடாதே" என்று இரந்தான். மாலினி ஒரு கையில் செபமாலையை பற்றிக்கொண்டு எழுந்து அவனை அன்போடு கட்டி அணைத்துக்கொண்டாள். இருவரும் சில நேரம் அழுதனர். "அவை எல்லாம் சரி, குமார் நீங்கள் இன்னும் என்னுடைய கணவன்தான். நான் உங்களை அதிகமாக அன்பு செய்கிறேன். நல்லாயன் சகோதரர்கள் மடத்தில் இருந்து ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கொள்ளலாமா என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன்." என்று அமைதியாகக் கூறினாள். "இதற்கு நான் முழுமையாகச் சம்மதிக்கிறேன். மாலினி உனது யோசனை மிகச் சிறந்தது. நீ செய்தது சரியான தீர்மானம்."

வாழ்க்கை ஒரு பயணம். வாழ்க்கை என்பது ஒரு புகையிரதத்தின் ஒவ்வொரு யன்னல் பக்கங்களிலும் இருந்துகொண்டு பிரயாணம் செய்யும் இரு உடன் பயணிகளைப் போன்றது. பிரயாணம் முழுவதும் நான் உன் அருகில் இருக்கலாம். அல்லது உன்னை ஒருபோதும் அறியாமல் நான் வேறு எங்கேயாவது இருக்கலாம். ஆனால் விதி உன் அருகில் இருக்கும்படி செய்கிறது. நாம் மனத்திற்கிசைந்த பிரயாணிகளாய் இருப்போம். இது ஒரு குறுகிய சவாரி.■

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 114

*தொகுப்பு : திரு ச. மாட்டின் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்களை 119ம் திருப்பாடலிலிருந்து ஆரம்பிக்கின்றோம். 119ம் திருப்பாடலில் 176 திருவசனங்கள் உள்ளன. இதுதான் அதிகமான திருவசனங்களைக் கொண்ட திருப்பாடல். இத்திருப்பாடலில் திருச்சட்டங்களைப்பற்றியும் நியமங்களைப்பற்றியும் அவற்றைப் பின்பற்றி வாழ்வதற்கான உறுதிமொழிகள் பற்றியுமே கூறப்படுகின்றன. இப்பாடல் பல தலைப்புகள் இட்டு வழங்கப்படுகின்றன.

இப்பாடல் யாரால் பாடப்பட்டதாக இருக்கும் என்று எண்ணிப்பார்த்தால் தாவீதரசனே நம் கண்முன்னால் பளிச்சென்று தெரிகின்றார். அவர் எவ்வளவுக்கெவ்வளவு மேன்மையோடு இருந்தாரோ அதே அளவுக்கு வாழ்வின் தாழ்நிலை அனுபவங்களையும் கொண்டிருந்தார் என்பது அவரின் பாடல்களிலிருந்து தெளிவாகப் புலனாகின்றன.

இனி நமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 123ம் திருவசனங்கள் வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

01. "என் கண்களைத் திறந்தருளும்" எனப் பாடகர் இறைவனை வேண்டுகின்றார். ஏன்?

02. 119ம் திருப்பாடலில் பாடகர் இறைவனிடம் பல வேண்டுதல்களை முன்வைக்கின்றார். கீழே குறிப்பிடப்படும் நான்கு வேண்டுதல்களில் ஒன்று பாடகரால் முன்வைக்கப்படாதது. அது எது?
- உமது விதிமுறைகள் காட்டும் வழியை எனக்குக் கற்றுத்தாரும்.
- என்னை உம் வான்வீட்டில் சேர்த்தருளும்.
- உம் திருச்சட்டப்படி நடக்க எனக்கு மெய் உணர்வு தாரும்.
- வீணானவற்றைப் பாராதபடி என் கண்களைத் திருப்பியருளும்.

03. என் வாயினின்று உண்மையின் சொற்களை நீங்க விடாதேயும். ஏன்?

04. உள்ளன/பாக்களாய்/விதிமுறைகள்/பயணத்தில்/புகழ்/என்/உம்/வாழ்க்கைப்/எனக்கு ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குங்கள்.

05. இறைவனிடம் தலைமுறை தலைமுறையாய் உள்ளது எது?

06. நமது காலடிக்கு விளக்கும் பாதைக்கு ஒளியுமாய் இருப்பது இறைவனின் வாக்கே எனத் திருப்பாடல் சொல்வதன் பொருள் என்ன?

07. இரவுச் சாமவேளைகளில் நான் ஏன் கண்விழித்துள்ளேன்?

08. எங்கிருந்து எனக்கு உதவிவரும்?

09. நான் என் சகோதரர் சார்பிலும் என் நண்பர்கள் சார்பிலும் உன்னை எப்படி வாழ்த்துகின்றேன். (நான்கு வாழ்த்துக்கள்)

10. விண்ணுலகில் வீற்றிருப்பவரே உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன். எதைப்போல?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 112 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

க. கிறிஸ்ரலின், இத்திக்கண்டல், அடம்பன்.

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. கே. கத்தறீன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
2. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
3. ஞா. கிறிஷாந்தா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.
4. எஸ். பாஸ்கர் றோச், பள்ளிமுனை, மன்னார்.
5. வி. ஜெயாளின் டெயான்சி, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு
6. பு. டனிஸ் ஷர்மிலன், இல.95, முதலியார்குளம், செட்டிகுளம்.
7. கே. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
8. என்.சி. யூலியானி, பள்ளிமுனை, மன்னார்.
9. எம். தேவி, எமில்நகர், மன்னார்.
10. இருதயராசா கிஷான், அச்சங்குளம், நானாட்டான்.

# நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 06 1985 — உதிர்வு 01 02 2003



**மனோகரன் ரத்னா டயஸ்**

(தாழ்வுபாடு)

அழகு தேவதையாய் புவியினில் அவதரித்து
ஏழு ஞாயிறுபோல அனுதினமும் பிரகாசித்து
இளமைப் பருவம்வரை எம்மோடு வாழ்ந்து
இறையோன் கரம்தனை நாடியே ஆண்டுகள் பத்தானதே!
விழிமூடித் தூங்கிய இதயத்தரசியே
உளமதில் துயர் மிகுந்து நினைந்துருகும் யாமின்று
அழியாது உனதான்மா இறைவனில் சங்கமிக்க
விழிநீரைக் காணிக்கையாய் தந்துயாம் அஞ்சலித்தோம்.

*உம் பிரிவால் துயருறும் :*
*பெற்றோர், சகோதரர்,*
*ஆலயப் பாடகர் குழுவினர்,*
*உற்றார், உறவினர்.*

## 35ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 11 1926 — உதிர்வு 30 12 2012



**திரு. நீக்கிலான் சின்னப்பு**

(சில்லாலை)

*"உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" (யோவான் 14:3)*

உயிர்ப்பும் உயிருமாகிய இறைவா! எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய எம் தந்தை இவ்வுலக வாழ்வின் பயணத்தை நிறைவு செய்து உம்மிடம் வந்துள்ளார். அவரை உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். கருணைகூர்ந்து உம் நித்திய பேரின்பத்தை அவருக்குக் கட்டளையிட்டருளும்.

*(இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 02.02.2013 சனிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு மன்னார் கீரி கார்த்தர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது)*

*பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.127

## சீராக் ஞானம் 1 – 30 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ர்சாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ★ | 03 | 01 | | 13 | | | | | 02 |
| | | 17 | 14 | | | | | ★ | |
| 11 | | | | | | | 12 | | |
| ★ | | | | | | 08 | | | |
| | | 09 | | 22 | | | | | |
| | | 05 | 07 | ★ | ★ | | | | |
| | | | | | 06 | | 04 | 18 | |
| | | | | | | | | ★ | |
| | | | | | | | | ★ | |
| 10 | 21 | ★ | | 15 | | 19 | | 20 | 16 |

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1............ உழைப்பின் பயனைப் பிறருக்கு விட்டுவிடுவதில்லையா?
11. ................ வீழ்ச்சி திடீரென்று ஏற்படும்.
12. நீ திண்ணமாய் சாவாய் என்பதே .................... நெறிமுறை.
13. ................ அவர்கள்மீது கேட்டறியாய் ___
14. .................. அவருக்கு உதவு.
22. ............. அவருடைய அன்பைப் பெற்றுத் தருகிறது.

### வலமிருந்து இடம்

4. ஞானத்திற்கு .................... வாழ்விற்கும் அன்பர்.
8. ................. பலரை அழித்திருக்கிறது.
9. மூன்றாவது .................... பலரை நிலைகுலையச் செய்தது.
17. நானே தூய அன்பு, அச்சம், .................... தூய நம்பிக்கை___
20. ஞானியர் தக்க நேரம் வரும்வரை ......................... காப்பர்.

### மேலிருந்து கீழ்

2. தம் வியத்தகு செயல்கள் பற்றி என்றும் ................
3. நீ ................ கேட்டு உன்னை கவனித்தோர் ___
4. ஒவ்வோர் உயிரும் தன் இனத்தின்மீது ............ பாராட்டுகிறது.
5. பாவிகள் ................. கொள்ளைப் பொருளுடன் ___
6. பரந்த ......................வே முதியோருக்கு மணிமுடி.
7. ...................... செயல்கள் அனைத்தையும் அவர் அறிவார்.
12. கொலை செய்ய அதிகாரம் கொண்டவர்களை விட்டுத் ................ இரு.

### கீழிருந்து மேல்

7. ...................... வெளிவேடம் போட வேண்டாம்.
 மூடரோடு பேசுவோர் தூக்கக் கலக்கத்தில் உள்ளவரோடு .................... ஒப்பாவர்.
15. வெடுக்கென்று பேசும் நாவைக் கொண்டவளை எல்லோரும் உணர்ந்து ......................
16. தக்க பருவத்தில் ..................... அவளது அழகிய ___
18. ...................... செயல்களைக் கண்டு வியப்பு அடையாதே.
19. தீயவர்களின் வீழ்ச்சி ..................... ஏற்படும்.
21. ஆண்டவரின் வியத்தகு .................... குறைக்கவோ ___

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 125ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

முதலாம் பரிசு:
ச. அஜந்தன்
காத்தான்குளம், நானாட்டான்.

இரண்டாம் பரிசு:
யே. யூக்கலிஸ்ரா,
இத்திக்கண்டல், அடம்பன்.

மூன்றாம் பரிசு:
கே. கத்தறீன் (றூபா)
நொச்சிக்குளம், உயிலங்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 95 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 84 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 125ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ஜெ. ஜெனிஜன், தேவன்பிட்டி, மன்னார்.
2. ச. டிவைக்ஷன், தேவன்பிட்டி, மன்னார்.
3. நா. செல்வமேரி, கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.
4. ந. ஜெஸ்மின், பாடசாலைவீதி, முதலியார்குளம்
5. எஸ்.சி.சி. நவரத்தினராஜா, பாடசாலை வீதி, முதலியார்குளம்.
6. எம். திரேசா, எமில்நகர், மன்னார்.
7. ச. டெலான்சன், தேவன்பிட்டி, மன்னார்.
8. ச. நிசாளினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
9. எஸ். பெனிற்றா, பள்ளமடு, விடத்தல்தீவு.
10. வி. வின்சன் யோட்ஸ், சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
11. தே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
12. அ. சகாயறாஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
13. வி. வேஜின் டிலைக்சனா, 143 சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
14. செ. கனியூட், தேவன்பிட்டி, மன்னார்.
15. ப. நிலக்சினி, இத்திக்கண்டல், அடம்பன்.
16. ப. நிலாளன், இத்திக்கண்டல், அடம்பன்.
17. ஈ. நிஷாந்தினி கூஞ்ஞ, குழந்தையேசு வீதி, 8ம்வட்டாரம், பேசாலை.
18. சி. றோயல் கிறிஸ்ரி றோச், மாவட்டநீதி மன்றம், மன்னார்.
19. ஜெ. மேரி றெபேக்கா, கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.
20. என்.சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
21. அ. இருதய சுகன்யா, புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி,
22. இசைக்கியேல், ஜோசவாஸ் நகர், தோட்டவெளி.
23. நீ. அன்ரனி ஜெறோம், சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
24. கே. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
25. சி. பிரான்சிஸ்கா, அரிப்பு, சிலாவத்துறை.
26. எஸ். நிரஞ்சன், இல.274, வீரபுரம், நேரியகுளம்.
27. எ. யேசு மேரி, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசங்குளம்.
28. ஞா. குயின்மேரி, கோவில் குளம், வவுனியா.
29. ஜெ. கஜனி, அருப்பே சிறுமியர் இல்லம், வவுனியா.
30. ம. றோஜினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
31. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா.
32. கத்தறின் சேவியர், பெரியகடை, மன்னார்.
33. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
34. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
35. ஐ. இருதய மேரி, சிதம்பரபுரம், வவுனியா.
36. எஸ். மத்தியூஸ் றஜிந்திரன், வீரபுரம், நேரியகுளம்.
37. இருதயராசா கிஷான், அச்சங்குளம், நானாட்டான்.
38. எஸ். சகாயஸ்ரெலா பீரிஸ், சிலாவத்துறை
39. க. மடோனா, கற்குளம்-02, சிதம்பரபுரம், வவுனியா.
40. தே. நிக்சலன், சாந்திபுரம், மன்னார்.
41. எஸ். செபஸ்ரியான், பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
42. டெபோறா மோகன்ராஸ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
43. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
44. பி. அன்பு, எமில்நகர், மன்னார்.
45. சி. மில்றோய் பீரிஸ், முத்தரிப்புத்துறை.
46. சிபோன் மரிய காணிக்கை பீரிஸ், முத்தரிப்புத்துறை.
47. எஸ். ஷர்மி, பெரேரா (ஷாரு), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
48. றொ. றெமிக்கா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசங்குளம்.
49. எஸ்.எம். கொண்சலிற்றா, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
50. க. விஜித்திரா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசங்குளம்.

## இல.125 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோ[01] | யு | ற் | ற | ன் | ம் | ள | யா | டை | அ[02] |
| கை | கு | ணு | அ[04] | வி | ன் | ள் | க | க் | ம[20] |
| ல | க[07] | அ[06] | ய | சா[03] | நா[21] | ம் | ச | ச் | அ[22] |
| உ[05] | ட | வ | ல் | எ[26] | ✱ | ✱ | ✱ | ழி | ச் |
| ட | வு | ர் | ஆ[08] | ன் | மா | ✱ | டு | வ[24] | சு[23] |
| ல் | ளி | க | ன் | பி[25] | ✱ | ம் | மு | வி[13] | று |
| ளி | ன் | ளை | மா | ✱ | ✱ | ✱ | வு | ழி | அ[18] |
| ரு | சா[11] | வு | வி | ✱ | க் | பு | ப் | ய | வி[17] |
| ரி | க[12] | னி | ல் | கு[15] | ர | ல் | யி | கை[16] | பு[19] |
| கா[09] | ல் | க[10] | மு | க் | கு[14] | ழ | ப் | ப | ம் |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.126ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## ஆயர் எல். ஆர் அன்ரனி ....

3ஆம் பக்கத் தொடர்

அன்னாரின் இறுதி யாத்திரைத் திருப்பலியில் திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவர் பேராயர் மேதகு யோசவ் ஸ்பிட்டரி அவர்களும் இலங்கை ஆயர் பேரவையைச் சேர்ந்த ஆயர்களும் பல மறைமாவட்ட குருக்கள், துறவிகள் பொதுநிலையினர் கலந்துகொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

மறைந்த ஆயர் எல். ஆர். அன்ரனி அவர்கள் அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் அடிகளார், திருக்குடும்ப கன்னியர் சபை அருட்சகோதரி அன்ரனெற் ஆகியோரின் மாமனார் ஆவார். ஆயரின் பிரிவால் துயருறும் உறவுகளுக்கு 'மன்னா' தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

## அதிர்வுகள் ............. 10ஆம் பக்கத் தொடர்ச்சி

### ஆயர்களின் பதில்மொழிகள்

மேற்சொன்ன கருத்துக்களை எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கருத்தில் வைத்துக்கொண்டு ஆயர்கள் சிலர் தங்களுடைய கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்கள். அவற்றில், எங்களுடைய சவால்களில் மத்தியில் தாங்கள் எங்களுடன் இருப்பதாகத் தெரிவித்தார்கள். (வழமையாக வடபகுதிக்கு வருகின்ற போதெல்லாம் சொல்லுகின்ற சமாச்சாரம்தான் இது!) போரினால் ஏற்பட்ட அழிவுகளையும் போரின் பின்னர் நிலவும் இராணுவத் தலையீடுகளையும் அவதானிப்பதாகவும், இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல்பண்பாட்டு நாடாக இருப்பினும் பெரும்பாலானவர்கள் மத்தியில் இலங்கை ஒரு 'சிங்கள பௌத்த நாடு' என்ற எண்ணமே மேலோங்கி நிற்பதால் இத்தகைய நிலைப்பாட்டைத் தகர்க்க தாங்கள் தங்களால் ஆனவற்றைச் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள். தாங்கள் ஒரு செய்திக் குறிப்பைத் தெரிவிக்கின்றபோது அது தென்பகுதியில் பலருடைய பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாவதோடு அவற்றை வெளியிடுகின்றபோது தாங்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யவேண்டி இருப்பதாகவும் கூறித் தங்கள் அபிப்பிராயங்களையும் நியாயப்பாடுகளையும் சாதூரியமாகவும் சாமர்தியமாகவும் சமயோசிதமாகவும் முன்வைத்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

### செவிடன் காதில் ஊதிய சங்காகாமல் இருக்க அருள்புரியும்!

ஆயர்களுக்கு, வடக்கை வந்து பார்த்துவிட்டோம் என்ற நிறைவு. எங்களுக்கு, எங்கள் நிலைப்பாடுகளை ஆயர்களிடம் எடுத்துச் சொல்லிவிட்டோம் என்ற மகிழ்வு. இந்நிறைவிலும் மகிழ்விலும் எம் ஆயர்களுக்காகவும் எமக்காகவும் ஒரே ஒரு பிரார்த்தனையை மட்டும் செய்தேன். ஆயர்களுக்காக, "இறைவா நாங்கள் செய்த வேண்டுதல்கள், பரிந்துரைத்த விண்ணப்பங்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக மாறாமல் இருக்க அருள்புரியும்" என்பதாகும். எமக்காக, "நாங்கள் இலவுகாத்த கிளிகளாய் ஆகாமல் இருக்க அருள்புரியும்" என்பதுமாகும். (தொடர்ந்து அதிரும்......)

## புனிதர்களின் பாதையில்........ (10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைத் தொடர்ந்து தம் உடன் துறவிகளிடம் தம் தங்கை இறைவனடி சென்றுவிட்டார் என்று அறிவித்தார். பின்னர் தனக்கென்று தயாரித்திருந்த கல்லறையில் தங்கையை அடக்கம் பண்ணினார். இன்று பெனடிக்டைன் சபை 14 நாடுகளில் வேரூன்றியுள்ளது. இந்த இரு புனிதர்களும் தொடங்கிய துறவற சபை ஏறத்தாழ 5000 புனிதர்களை உருவாக்கித் திருச்சபைக்குக் கொடுத்துள்ளது.

### சிந்தனைக்கு

"கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின்போது புனிதர்களின் திருச்சபை முழுவதும் அன்பு நிறை உன்னத பேரின்பத்தில் இறைவனையும் பலியான செம்மறியையும் ஆராதிக்கும்" (2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகள் - திருச்சபை எண் 50)

## அவிசாவளை நற்கருணை மாதா ..........

1ம் பக்கத் தொடர்ச்சி

அவிசாவளை நகரின் பங்கு ஆலயமான புனித மரியாள் ஆலயம் நிறுவப்பட்டு இந்த ஆண்டுடன் 150 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இந்த முப்பொன் விழாவைச் சிறப்பிப்பதற்காக இப்பகுதிக்குட்பட்ட கத்தோலிக்கரும் குருக்களும் கொழும்பு பேராயரின் அநுசரணையோடு முயற்சி எடுத்தனர். இதற்காக ஒரு வருட காலமாக நிதி சேகரிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவிசாவளை - யட்டியாந்தோட்டை வீதியில் ஆலயத்திற்கு சொந்தமான காணியிலேயே இந்த திருச்சுருவம் நிர்மாணிக்கப்பட்டது.

26ஆம் திகதி சனிக்கிழமை இந்தச் சுருவம் நிறுவப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை வழிபாடுகளும் நடைபெற்றன. இந்த நிலையிலேயே அன்று இரவோடு இரவாக இச்சுருவம் எரிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசமே அதிர்ச்சியிலும் கவலையிலும் மூழ்கியுள்ளது. தகவல் அறிந்து ஓடிவந்த கத்தோலிக்க மக்கள் வேதனைக் கண்ணீர் வடித்தனர். சிலர் வாய்விட்டு அழுதனர். இனமத வேறுபாடின்றி பௌத்தர்களும், முஸ்லிம்களும் அவ்விடத்திற்கு வந்து தமது அனுதாபத்தைத் தெரிவித்தனர்.

"மாதாவை எரித்தது பெற்ற தாயை எரித்ததற்கு சமம்" என்று ஒரு பௌத்தர் அங்கே தெரிவித்து வருத்தப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## இலங்கையில் அநீதி தாண்டவம் .......

03ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த உறுதிநிலையை மீறும் போக்கு கடந்த சில வருடங்களாக உருவாகியுள்ளது. எந்தச் சட்டதிட்டங்களை தாம் பாதுகாப்போம், அதற்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்று உறுதி வழங்கினார்களோ அதனை இந்த நாட்டின் அதிகாரிகளும் சட்ட நிருபணமும் துச்சமென மதித்து மீறி நடந்திருப்பதை அண்மைக்கால நிகழ்வுகள் மிகத்துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன.

பலம்வாய்ந்தோர் சொல்வதே சரி என்ற அடிப்படையில்தான் இந்த நாட்டின் ஆட்சிப்போக்கு சென்றுகொண்டிருக்கின்றது. 43ஆவது பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்யும் முயற்சியில் நாடாளுமன்றம் மீயுயர் சட்டமன்றம் அளித்த தீர்ப்பை வேண்டுமென்றே புறக்கணித்திருக்கின்றது. இது சட்டவாக்கத்தை விளக்கும் உரிமை கொண்ட ஒரே அமைப்பான மீயுயர் சட்டமன்றத்தை அவமதிக்கும் துணிகரச் செயலாகும்.

திருச்சபையும் மற்றும் சமூக அமைப்புகளும் இது சம்பந்தமாகத் தொடர்ச்சியாகத் தெரிவித்த எச்சரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது பயத்தையும் இயலாத்தன்மையையும் வெளிப்படுத்தும் ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அப்பட்டமான அநீதி, வன்முறை, போலித்தனம் தாண்டவமாடும்போதும்கூட மக்கள் அதற்கெதிராகக் குரல் எழுப்பாது மௌனித்திருந்தனர். இது ஆண்டவருக்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயல்.

கிறிஸ்வ திருச்சபை என்ற வகையில் இன்றைய சூழ்நிலையில் நாம் மௌனம் சாதிக்கமுடியாது. பெந்தகோஸ்தே தினம் முதற்கொண்டு இயேசுவே ஆண்டவர், அரசன் அல்ல என்று முழங்குவதற்குத் திருச்சபை கற்றுக்கொண்டிருக்கின்றது. இதனால் திருச்சபை துன்பங்களையும், துன்புறுத்தல்களையும், சந்திக்கவேண்டியுள்ளது. இதற்கு முகங்கொடுக்கத் திருச்சபை எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.

கடவுளின் அறநெறியை மீறும் கட்டளைகளுக்கு அடிபணிய மறுத்த நபர்களை நாம் திருமறையிலும் கிறிஸ்தவ வரலாற்றிலும் காணலாம். திருமறையின் பழைய ஏற்பாட்டிலும்கூட தம்மால் உருவாக்கப்படாத சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்து நடக்கவும் உத்தரவாதமளிக்கவும் ஆட்சியாளர்கள் கட்டுப்பட்டிருந்தனர். இப்படி அந்த [illegible] நிறைந்தது.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை வாழ்வு..... 11ஆம் பக்கத் தொடர்

(11ஆம் பக்கத் தொடர்)

### நம்பிக்கை வாழ்வு ஒரு தொடர் மனமாற்றம்

நம்பிக்கை வாழ்வை உறவுப் பயணமாக நோக்குமிடத்து இறைவனுடன் தொடரும் தொடர்பாடல், உறவின் வழியாக நிகழும் மனமாற்றத்திற்கு இட்டுச்செல்வதாக அமையவேண்டும். இறைவனோடு உறவு இருக்கும்போது என்னோடும் அடுத்தவரோடும் உறவை கட்டியெழுப்புவது தவிர்க்க முடியாததாக மாறிவிடும். நான் என் ஆள்தன்மையிலிருந்து, சுயத்திலிருந்து இ[illegible] நோக்கி, என்னை நோக்கி, அடுத்தவரை நோ[illegible] செய்யும் உறவிலே நம்பிக்கை வாழ்வில் வளர்ந்து [illegible]படைய முடியும். உ+ம் அன்பிய வாழ்வை அர்த்தமுள்ளதாக்கி ஆழப்படுத்துதல் இத்தகைய வாழ்க்கைமுறைக்கு உதவுவதாக அமையும். எனவே பங்குகளில் வெளியரங்கக் கொண்டாட்டங்களுக்கும், சடங்குகளுக்கும், பக்தி முயற்சிகளுக்கும் ஊக்கம் கொடுப்பதைவிடுத்து உறவின் அடித்தளத்தில் நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்பும் வாழ்க்கை முறைக்கு முதன்மை அளித்தல் பங்குத்தந்தையரின் கடப்பாடாகும்.

ஆலயங்களும் மத அடையாளங்களும் தேவையானதுதான். ஆனால் அவை மட்டும் உண்மையான ஆன்மீகத்திற்கும் நம்பிக்கை வாழ்வின் புதுப்பித்தலுக்கும் இட்டுச் செல்லப்போவதில்லை. எமது நம்பிக்கை வாழ்வுப்பயணம் தேங்கிக் கிடக்கும் சாக்கடைபோல் உயிரோட்டமில்லாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் சடங்குகளுக்கும், வெளியரங்கச் செயற்பாடுகளுக்கும் அடிமையாகிப்போன வாழ்க்கை முறையாகும். நம்பிக்கை என்பது இறைவனோடுள்ள உறவு, என்னோடு உள்ள உறவு, அடுத்தவரோடு உள்ள உறவு என்ற முப்பரிமாணத்தில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இத்தகைய நம்பிக்கை வாழ்வு பற்றிய புரிதல் இல்லையெனில் இந்த நம்பிக்கை ஆண்டும் சில வெளியரங்கச் செயற்பாடுகளோடு எவ்வித உள்ளரங்க மாற்றமுமில்லாத, புதுப்பிக்கப்படாத வாழ்க்கையாக வாழப்படும். இறை நம்பிக்கையின் நம்பகத்தன்மை, தெய்வீகத்தன்மை எல்லைகளை கடந்து, இன, மத, மொழி பேதம் கடந்து, அனைவரையும் ஏற்று அன்பு செய்யும் ஆன்மீகத்தின் முதிர்ச்சிக்கு இட்டுச் செல்லும். இதுவே இன்றைய தேவையாகும்.

## சென்ற மாதத் தொடர்ச்சி
## வாழ்வை ஆதரிக்கும் அறிக்கை

**இளம்பராயத்தார், இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலைகளை நாம் அழைப்பது**

(அ) தமது வாழ்வையும் தம்மோடு வாழ்பவர்களின் வாழ்வையும் பெறுமதிமிக்கதாகக் கருதவும். முக்கியமாக பிறக்காத உயிரின் மாண்பினை நாம் மதிக்க வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு மனிதருக்கும் கடவுளின் முடிவில்லாத் திட்டம் நிறைவேற உதவியளித்தல்.

(ஆ) நேர்மையான, தூய்மையான வாழ்வை இயேசுக்கிறிஸ்துவின் படிப்பினைகள், திருச்சபையின் படிப்பினைகளின் அடிப்படையில் வாழ முயற்சி செய்வதன் மூலம் அதற்கு முரணான வாழ்க்கை முறையைத் தவிர்க்க கடவுளால் தமக்கு அளித்த முழுச் சுதந்திரத்தையும், மாண்பையும் பயன்படுத்தல்.

(இ) நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து சிலுவை வழியில் தம்மை வெறுமையாக்கி தன்னலமற்றவிதமாக மற்றவர்களை அன்புசெய்யக் கற்றுத்தந்ததை அனைவருடனும் பகிர்ந்துகொள்வதன் மூலம் தன்னலமற்ற நீதி, நேர்மை, அமைதி நிறைந்த - எல்லோரையும் வரவேற்கும் உலகைக் கட்டியெழுப்ப முயற்சி செய்யுங்கள்.

**வைத்தியத்துறையில் பணியாற்றும் கத்தோலிக்கர் அனைவருக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோள்**

எந்தவிதத்திலும் கருக்கலைப்பிலோ, கரு அழிப்பிலோ ஈடுபடவோ, பெண்களுக்கு, தம்பதியினருக்கு கரு அழிப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்கவோ வேண்டாம். இது வைத்தியத்துறையின் உயரிய கடமையாகும். அதிலும் கத்தோலிக்கர் ஒருவருக்கு கடவுளின் படைப்பைப் பாதுகாக்கும் கட்டாய உயரிய கடமை உண்டு.

**ஊடக நிறுவனங்களுக்கு நாம் விடுக்கும் அழைப்பு**

நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்போது எமது சமுதாயத்துக்குரிய புனிதமான விழுமியங்களையும் அதிமுக்கியமாக பாலியலின் மாண்பைப் பற்றியும், உடை, மொழி என்பவற்றில் பணிவையும் கொண்டு தமது ஆக்கங்களை வெளியிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம். நெறிகெட்ட இளைய தலைமுறையினர் மூலம் காலப்போக்கில் அறநெறியில் தலைசிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியாது என்பதை நாம் சுட்டிக்காட்டத் தேவையில்லை.

**கடைசியாக எமது அருட்பணியாளர்களிடமும் துறவிகளிடமும் நாம் வேண்டி நிற்பது**

உங்களுடைய மறையுரைகள் மற்றைய நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கருக்கலைப்பு/ கருஅழிப்பு தொடர்பாக அதன் பாதக விளைவுகள் பற்றியும் அதன் தீமைகள் பற்றியும் உங்கள் மந்தைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதன் வழியாக உயிரின்மீது நட்புக்கொண்ட மனப்பாங்கை அவர்களில் ஏற்படுத்தலாம்.

மறைக்கோட்டங்களிலும் பங்குகளிலும் ஆற்றுப்படுத்துனர் (Counselling) பிரிவுகளை ஏற்படுத்தி தம்பதியருக்கு கரு அழிப்பில் ஈடுபடும் சோதனைகளிலிருந்து விடுபட வழிமுறைகளை ஆலோசனையாக வழங்கவும்.

**எமது பாடசாலை அதிபர்களை நாம் அழைப்பது**

உங்கள் பாடசாலையில் உள்ள உயர்தர மாணவ மாணவிகள் மத்தியில் தனிப்பட்ட ஆன்மீக, தூய வாழ்வின் பெறுமதி பற்றி அறிவூட்டவும். திருமண வாழ்வின் புனிதத்தன்மை பற்றி எடுத்துக்கூறி விண்ணரசிற்கு பிரமாணிக்கமுள்ள வாழ்வை வாழ நம் ஆண்டவரும், போதகருமான இயேசுக்கிறிஸ்துவை பின்பற்றி வாழ ஊக்கமளிக்கவும்.

## யோசவ்வாஸ் அடிகளாரின் பாதப் பதிவுகளால் ஊற்றெடுத்த
# மன்னார் மக்களின் விசுவாசவாழ்வு

அருட்தந்தை. ம.க.அருள்பிரகாசம்
அருளாளர் யோசப்வாஸ் தேசிய மன்ற மன்னார் மறைமாவட்ட இணைப்பாளர்

### முன்னுரை



அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் மன்னார் மறைசாட்சிகளின் மண்ணில் (சவுத்பார்) பிச்சைக்காரன் போன்று கால்பதித்து, ஒல்லாந்தர்களால் உடைக்கப்பட்ட முதல் கத்தோலிக்க ஆலயமாகிய தூய யுவானியார் ஆலயத்தில் இளைப்பாறி, மன்னார் மூதாட்டியினால் கஞ்சி கொடுத்து உடல் சக்தியைப்பெற்று, இலங்கை நாட்டில் இறைபணியை ஆரம்பித்தார். மாதோட்டத்தில் பறப்பாங்கண்டல் பெரிய கோவிலை, (கொழும்புக்கு பணி மையம் மாற்றப்படும்வரை) வருடாந்த மறைபரப்பாளர்கள் ஒன்றுகூடும் இடமாகவும், இலங்கையில் றோமன் கத்தோலிக்க மறைபரப்பு மையமாகவும் அருளாளர் அவர்கள் செயற்படுத்தினார் என்றால் மன்னார் மாதோட்டத்தின் முக்கியத்துவம் இதிலிருந்து விளங்குகின்றது (ஞானப்பிரகாசர் (1925): 1999: 255). இத்தகைய செயற்பாடுகளால் மன்னார் மக்களின் விசுவாசம் ஊற்றெடுத்து இன்று குருத்துவ துறவற அழைத்தல்களின் விளைநிலமாக பரிணமித்து நிற்கின்றது.

### மன்னார் மறைசாட்சிகள்

அருளாளர் அவர்கள் மன்னார் மாதோட்டப் பகுதிகளில் கால்பதித்து பின்னர் பல ஆண்டுகள் கிராமம் கிராமமாக பணியாற்றி பறப்பாங்கண்டல் பேராலயத்தை பணி மையமாகக்கொண்டு சேவையாற்றி வந்திருந்தாலும் மன்னார் மறைசாட்சிகள் பற்றி அறிந்துகொள்ளவில்லை என அவர் பற்றி எழுதியவர்கள் சுட்டிப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். அந்த அளவுக்கு கத்தோலிக்க விசுவாசம் முற்றாக மறைக்கப்பட்டிருந்தவேளை மீண்டும் விசுவாசம் தழைத்தோங்க உரமூட்டி உரமான அருளாளர் நாமம் என்றும் எம் மண்ணில் மறக்கப்படமாட்டாது.

### கால்பதித்த இடங்கள் கத்தோலிக்க மயம்

அருளாளர் அவர்களால் ஊற்றெடுத்த மன்னார் மாதோட்ட உரோமன் கத்தோலிக்க விசுவாசம் ஒரோற்றெறியன் குருக்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. அமலமரித் தியாகிகளின் வருகையுடன் சுதந்திரக் கத்தோலிக்கர் மாதோட்டப் பகுதிகளில் உருவாகினர். 1902ம் ஆண்டிலிருந்து இச்சுதந்திரக் கிறிஸ்தவர்கள் யூலன் ஆண்டகையின் அயரா முயற்சியால் யாழ்ப்பாண மறை மாவட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டனர். சுதந்திரக் கத்தோலிக்கர்கள் சுதந்திரமாக செயற்பட்டாலும் கத்தோலிக்க விசுவாசத்தை இழந்துவிடாது நிலைத்திருந்தார்கள் என்றால் அது அருளாளர் அவர்கள் இட்ட விசுவாச அத்திவாரமாகும். அடிகளார் மன்னார் - மாதோட்ட கிராமங்கள் பலவற்றிற்கு கால்நடையாக சென்று பலரை மனமாற்றினார். சிலாபத்துறை, அரிப்பு, நானாட்டான் , மன்னார் தீவு, மாந்தை, விடத்தல்தீவு, தேவன்பிட்டி, மடு, பறப்பாங்கண்டல், கள்ளிகட்டைக்காடு, வெண்கலச் செட்டிகுளம், வவுனியா, பெரியகுஞ்சுக்குளம், பெரியமுறிப்பு என பல இடங்களுக்குச் சென்று பணியாற்றியபடியால் அவர் கால்பதித்த இடமெல்லாம் கத்தோலிக்கமயமாகின.

### கால்பதித்த இடங்களில் சிலுவை

1687ல் மன்னார் தீவில் கால்பதித்ததன் ஞாபகமாக பெரிய சிலுவை அமைக்கப்பட்டுள்ளது. பெரிய கரிசலில் அழகான பேழைக்குள் கோவா நகரில் யேசு புதுமையாக தோன்றிய சிலுவை வடிவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் விசுவாசத்துடன் தரிசித்து அருள் பெறுகின்றனர். கள்ளிகட்டைகாடு சிலுவை ஆலயம் இதே அமைப்பைக் கொண்டதாக உள்ளது. அரிப்பில் இதே வடிவான சிலுவைகளைக் காணலாம். மேலும் பெரியமுறிப்பு, வெண்கலச் செட்டிகுளம், வவுனியா மற்றும் பல இடங்களிலும் அடிகளார் கால்பதித்த தடயங்கள் காணப்படுகின்றன.

### அருளாளரின் திருத்தலங்கள்

மன்னார் மறைமாவட்டத்தில் மடுக்கரையிலும் தூய யோசவ்வாஸ் நகரிலும் தேவன்பிட்டியிலும் அருளாளருக்கான திருத்தலங்கள் அமைக்கப்பட்டு புனித நிலைக்கு உயர்த்தப்பட தொடர்ச்சியாக விசுவாசிகள் செபித்து வருகின்றனர்.

### முடிவுரை

அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் வருகையினால் உயிரற்ற நிலையிலிருந்த மன்னார் மறைமாவட்ட மக்களின் கத்தோலிக்க விசுவாசம் மீண்டும் உயிர்பெற்றெழுந்து இன்று உலக கத்தோலிக்க சமூகத்திற்கு உரமாக இறை அழைத்தல்களை அள்ளி வழங்கும் விளைநிலமாக விளங்குகின்றது.

அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரே எங்களுக்காக மன்றாடும்!

## அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் பற்றிய சில குறிப்புக்கள்

1. 1651 சித்திரை 21ல் இந்தியாவில் கோவா என்னும் நகரில் பெனாலிம் என்னும் ஊரில் பிறந்தார்.
2. 1676ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
3. 1681- 1684 வரை கன்னராவில் மறைத்தூதுப் பணியாற்றினார்.
4.1685ல் கோவா நகருக்குத் திரும்பி வந்து சுதேச குருக்களுக்கென தூய பிலிப் நேரியார் ஒரேற்றேறியன் சபையை உருவாக்கினார்.
5. 1687ல் மன்னாரில் சவுத்பார் என்னும் இடத்தில் கால் பதித்தார். கூலியாள் போலும் பிச்சைக்காரன் போன்றும் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வன்னி, மடு ஆகிய இடங்களில் பணியாற்றினார்.
6.1692ல் கண்டியில் போர்த்துக்கேய ஒற்றனென சிறைப்பிடிக்கப்பட்டு சிறையில் வாடினார். அவரது புனித வாழ்க்கை அரசனை மிகவும் கவர்ந்தது. [illegible]
7. 1696ல் மூன்று ஓரேற்றேறியன் குருக்கள் அவருடன் சேர்ந்துகொண்டனர். எட்டு கத்தோலிக்க குழுமங்கள் இலங்கைத் தீவில் உதயமாகின.
8. 1698 – 1710 வரை அருளாளர் அவர்கள் இலங்கை முழுவதும் ஆலயங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் சமுக மையங்களை உருவாக்கினார்.
9. 1711ல் கண்டியில் மரித்து அங்கு அடக்கம் செய்யப்பட்டார். கோவா ஒறேற்ரேறியன் குருக்கள் அவரது பணியை தொடர்ந்தாற்றினர்.
10. 1713ல் அவரை அருளாளர் நிலைக்கு உயர்த்த கொச்சின் ஆயர்கள் முன்வந்தனர்.
11. 1835ல் ஒறேற்ரேறியன் குருக்கள் போர்த்துக்கேய அரசால் தடைசெய்யப்பட்டு அவர்களது பணி புறக்கணிக்கப்படத் தொடங்கியது.
12. 1953ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தும் பணி நிறைவுற்று வத்திக்கானுக்கு விடையங்கள் அனுப்பப்பட்டன.
13. 1989ல் அருளாளரின் புண்ணிய விடையங்கள் உண்மை என புனித நிலைக்கு உயர்த்தும் அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டது.
14. 1993ல் அவரது புதுமைகள் பரிந்துரைகள் உண்மை என திருத்தந்தை இரண்டாம் யோன் போல் ஏற்றுக்கொள்ளப்பட்டு அருளாளர் நிலைக்கு உயர்த்த முடிவெடுக்கப்பட்டது.
15. 1995 தை மாதம் 16 ம் திகதி திருத்தந்தை யோன் போல் இலங்கையில் அடிகளார் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.
16. 2011ல் அவரது விண்ணகப்பிறப்பின் முன்னூறாவது ஆண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## இலங்கையில் அடிகளாருக்கென அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களும் திருத்தலங்களும்

**கொழும்பு மறைமாவட்டம்**
மாகொல, கண்டிவத்த, மொறத்தமொதற, தேவ தாம நிகிதனாய.

**சிலாப மறைமாவட்டம்**
வட்டக்கலிய, போலவத்த, வனதவிலுவ, யோசப்வாஸ கல்லூரி, வென்னப்புவ, புத்தளம, தேவநுவர, ரேட்பான.

**கண்டி மறைமாவட்டம்**
அம்பிட்டிய திருத்தலம், அளுத்வேவா, மஸ்கெலியா.

**யாழ்ப்பாண மறைமாவட்டம்**
சில்லாலை, யாழப்பாணக் கோட்டை, நெடுந்தீவு.

**திருகோணமலை மறைமாவட்டம்**
மூதூர், தாண்டவன்வெளி.

**மன்னார் மறைமாவட்டம்**
சவுத்பார், யோசப்வாஸ் நகர், பறப்பான்கண்டல், தேவன்பிட்டி, மடுக்கரை, செட்டிகுளம், யோசப்வாஸ் மகா வித்தியாலயம் (விடத்தல்தீவு)

**காலி மறைமாவட்டம்**
கல்பதோட்ட, தேவ தர்ம நிகிதனாய.

**பதுளை மறைமாவட்டம்**
பெல்லகட்டுவ

**இரத்தினபுரி மறைமாவட்டம்**
வெலிகுபுர, இத்தோய.

**அனுராதபுர மறைமாவட்டம்**
பெமடுவ

**குருநாகல மறைமாவட்டம**
மில்லவ சிறிய குருமடம்,: கலகமுவ, வெயுட, பொல்காகவெல, கடவெலகெதற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

## மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும்
# பொதுநிலைப் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்



மன்னார் மறைமாவட்டத்தில் நிரந்தர மறையாசிரியர்களாகப் பணிபுரியும் திரு. யோ செபஸ்தியாம்பிள்ளை, திரு. இ. மரிய செல்வன், திரு. ம. சவிரி ஆகியோரும், மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் பணியாற்றிவரும் திரு. பா. கென்றி அவர்களும் சாரதியாகவும் தொழில் நுட்பப் பணிகளிலும் ஈடுபட்டுவரும் திரு. யோ. யூட் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (திரு. ஜோசப் யூட் அவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளமுடியாத நிலையில் இருந்தார்.) மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 32 ஆண்டுகள் நிறைவு விழாத் திருப்பலி கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை 7.30 மணிக்கு தோட்டவெளியில் இடம்பெற்றது. விழாத்திருப்பலியின் இறுதியில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. மன்னார் ஆயரினால் இவர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு ஞாபகச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அத்தோடு மறை மாவட்டப் பங்குகளில் பல வருடங்களாக பணியாற்றிவரும் மறையசிரியர் ஒருவர் ஒவ்வொரு பங்கிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு ஞாபகச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர்களின் பெயர் விபரங்கள் 04ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

## கச்சதீவு அந்தோனியார் திருவிழா
## பெப்ரவரி 24ஆம் திகதி




பாரம்பரியமாக தமிழக இலங்கை மீனர்வர்கள் பங்கேற்கும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா பெப்ரவரி 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவில் இலங்கை இந்திய தமிழ் மீனவர்கள் சந்தித்து தமது தொப்புள்கொடி உறவுளை புதிப்பித்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இவ்விழா தொடர்பாக யாழ் ஆயர் இராமேஸ்வரம் பங்குத்தந்தை அருட்திரு. சகாயராஜ் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.



அண்மையில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட அருட்பணி. அன்புராசாவின் (அமதி) 'உந்தன் நினைவினிலே' என்ற கிறிஸ்தவ பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் யாழ் ஆயர் அவர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கின்றார்.



# 150 வருட நினைவு

### டொண் லோறன்ஸ் மத்தியூ வர்ணகுலசிங்கை முதலியார்
### (தூய மரியாள் ஆலயம் சின்னக்டை மன்னார் - மாதோட்டம்)

மன்னார் தூய மரியாள் ஆலயத்தினுள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள எமது உறவினரான டொண் லோறன்ஸ் மத்தியூ வர்ணகுலசிங்கை முதலியார் 1863ம் ஆண்டு மாசி மாதம் 27ம் திகதி இறைபதம் அடைந்துள்ளார். இவர் மன்னார் மாதோட்ட பகுதிகளில் சிறந்த முதலியராகவும் நற்பண்புகள் நிறைந்த மூப்பராகவும் விளங்கியுள்ளார்.


**இவரை நினைவுகூர்பவர்கள் :**

மேரிகெற் வர்ணகுலசிங்கை திருஞானசம்பந்தர் (மவர் ரீச்சர் - கோயம்புத்தூர் இந்தியா)
அவுறாம்பிள்ளை லீயோ சிங்கராயர் எதிர்மனசிங்கை (யாழ்ப்பாணம்)
அவுறாம்பிள்ளை றோசாயிறோ கிறிஸ்சோஸ்ரம் எதிர்மனசிங்கை (பிரான்ஸ்)
அவுறாம்பிள்ளை றோசாயிறோ யோகானந்தம் எதிர்மனசிங்கை (இலண்டன்)
அருட்தந்தை மரிசால் கபிரியேல் அருள்பிரகாசம்.

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 10 1938 — உதிர்வு 08 02 2012




### திரு. ஆரோக்கியம் அருளானந்தம்
(கல்நாட்டி, முருங்கன்)

அன்பின் திருவுருவே, பண்பின் சிகரமே,
பாசத்தின் பிறப்பிடமே, ஏழ்மையின் இருப்பிடமே,
எங்கள் அன்பின் அப்பச்சியே!
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்.
நீங்காத நினைவுகள் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளன.
உம் வாழ்வை மெழுகாக்கி எம் வாழ்வில் ஒளியேற்றி
வேதனையில் நாம் தவிக்க ஆண்டவன் அழைத்ததேனோ?
ஆண்டொன்று ஆனாலும் உம் நினைவலைகள்
எம்மைவிட்டு என்றும் அகலாதே!
இறைவனிடம் எமக்காய் இரஞ்சிடுங்கள்!

உம் பிரிவால் துயருறும்:-
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 05 1945 — உதிர்வு 12 02 2012



### திரு. பறுநாந்து செல்வம்
(மாந்தை)

ஆயிரம் உறவிருந்தென்ன எமை அரவணைக்க?
ஆயிரம் உள்ளமிருந்தென்ன எமை நினைக்க?
"ஐயா" என்றழைக்க நீரில்லையே!

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் இதயமாய்
பாசத்தின் மகுடமாய் எம் குடும்ப சுடர் ஒளியாய்
எம்மை வாழ்வித்த தெய்வம் நீரல்லவோ?
உம் நினைவுகள் எம்மை வாட்டுகிறதே!

ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் - எம்
இதயங்களில் உம் நினைவு நிலைத்திடுமே!

உம் பிரிவால் துயருறும்:-
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 02 1954 — உதிர்வு 25 01 2012



### திரு. லோறன்ஸ் ஞானசேகரம்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
(31/4, பெற்றா, மன்னார்)

கடவுளே உமது பேரன்பு எத்துணை அருமையானது! மானிடர் உம் இறக்கைகளின் நிழலில் புகலிடம் பெறுகின்றனர்." (தி.பா 36:7)

ஆண்டொன்று உருண்டோடியும் எம் இதய ஆறாத்துயர் குறையுதில்லை. பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. ஆனால் உங்கள் இறப்பின் விளைவு எமக்கு புரியவில்லை! புன்சிரிப்பினால் பதிலளிக்கும் உம் பொன் வதனம் இடை நடுவில் மறைந்ததேன்? எம் கண்ணீருக்கு விடையில்லை. ஆயினும் காலத்தால் உம்மை மறவோம். பரமன் பாதமதில் அமர்ந்து உமக்காய் வேண்டி அமைதியில் இளைப்பாற நிதமும் வேண்டி நிற்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் :-
அன்பு மனைவி, மகள், உற்றார் உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னார் 9 ... மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்[illegible] - வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org